### கோலூன்றிப் பாய்தலில் அனித்தா புதிய சாதனை

'ஜோன் காப்பற்' தடகளத் தொடரில் 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு கோலூன்றிப் பாய்தலில் மகாஜனக் கல்லூரி மாணவி ஜெ.அனித்தா தேசியச் சாதனையை நிலைநாட்டி தங்கப் பதக்கம் வென்றார். தியகம மகிந்த ராஜபக்ச மைதானத்தில் நேற்றுநடைபெற்ற இந்தப் போட்டியில் 3.35 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்தே அவர் சாதனையை நிலைநாட்டித் தங்கம் வென்றார். (விரிவு: பக். 27)


# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28

சுடர் 31 | கதிர் 295 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆவணி 31, வெள்ளிக்கிழமை 16.09.2016


## பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் புடைசூழ சந்நிதியான் தேரில் பவனி



யாழ்ப்பாணம், செப். 16
வரலாற்றுச் சிறப்பு மிக்க தொண்டமானாறு செல்வச் >> 24ஆம் பக்கம்

# பள்ளிமுனைக் காணிகளை மீள ஒப்படைக்க முடியாது


## கடற்படைக்குத் தேவை என்கிறார் பாதுகாப்புச் செயலர்

மன்னார், செப்ரெம்பர் 16

மன்னார் பள்ளிமுனை 25 வீட்டுத்திட்டக் காணியை மக் களுக்கு மீளக் கையளிக்க முடியாது. போதைப் பொருள் கடத்தலைக் கட்டுப்படுத்த கடற்படையினரின் பாதுகாப்பு அவசியம். அந்தப் பகுதியிலிருந்து கடற்படை முகாமை அகற்ற முடி யாது.

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி கடிதம் மூலம் தமக்கு அறிவித்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

பள்ளிமுனை 25 வீட்டுத்திட்ட மக்களுக்குச் சொந்தமான காணியை விடுவிக்குமாறு வலியுறுத்தி தமிழ்த் தேசிய >> 23ஆம் பக்கம்



## 10 வருடங்களின் பின் திலீபனுக்கு அஞ்சலி

### நல்லூரில் உள்ள நினைவிடத்தில் நேற்று நடந்தது



யாழ்ப்பாணம், செப். 16

தியாக தீபம் திலீபனின் 29ஆம் ஆண்டு நினைவு நாள், நல்லூரில் அமைந்துள்ள அவரது நினைவுத் தூபியில் உணர்வெழுச்சியுடன் ஜனநாயகப் போராளிகள் கட்சியினால் நேற்று நினைவு கூரப்பட்டது. ஈகச் சுடரேற்றி, அகவணக்கம் செலுத்தி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நல்லூரில் தியாகி திலீபன் நினைவிடத்தில் 2006ஆம் ஆண்டுக்குப் பின்னர் நேற்றே அங்கு அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராக 5 அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து, 1987ஆம் >> 23ஆம் பக்கம்

## யாழ். பல்கலைக்கழக மாணவர் குழுக்களிடையே மீண்டும் சண்டை

யாழ்ப்பாணம், செப். 16

பரமேஸ்வராச் சந்தியில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தங்கும் வீட்டிற்குள் நேற்று முன்தினமிரவு 9.30 மணியளவில் அத்துமீறி உள்நுழைந்த மாணவர்கள் குழு ஒன்று, வீட்டில் தங்கியிருந்த மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் அச்சமடைந்து வீட்டில் தங்கியிருந்த >> 23ஆம் பக்கம்

## சீமானின் தொண்டர் சென்னையில் தீக்குளிப்பு

சென்னை, செப். 16

கர்நாடகாவில் தமிழர்கள் தாக்கப்பட்டதை கண்டித்து >> 23ஆம் பக்கம்

### ஹைஏஸ் வான் முன்பகுதி முற்றுமுழுதாகச் சிதைந்த கோர விபத்தில்

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட ஐவர் சாவு



கிளிநொச்சி, செப்.16

பளை, தர்மக்கேணியில் நேற்று அதிகாலை 5.45 மணியளவில் இடம்பெற்ற கோர விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட 5 பேர் சாவடைந்தனர். 7 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

கொழும்பில் உறவினரின் சாவு வீட்டுக்குச் சென்று ஹைஏஸ் வானில் ஊர் திரும்பும்போதே விபத்து இடம்பெற்றது.

பருத்தித்துறை வியாபாரி மூலையில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பசுபதி (வயது–89), பசுபதி வள்ளிப்பிள்ளை (வயது–75), பசுபதி நந்தமூர்த்தி (வயது–46) மற்றும் கணேசமூர்த்தி பொன்னம்மா (வயது–70), தர்மலிங்கம் சாந்தாதேவி (வயது–72) ஆகியோரே விபத்தில் உயிரிழந்தனர்.

பளை தர்மக்கேணிப் பகுதியிலுள்ள வளைவில், யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த லொறி ஒன்றை ஹைஏஸ் வாகனம் முந்திச் செல்ல முற்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து மத்துகம நோக்கி வந்த தனியார் பேருந்து வழிவிட முடியாமல் மோதியுள்ளது. கண நேரத்தில் நடைபெற்று முடிந்த விபத்தில் 4 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்று பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

(விரிவு: பக். 07)

## மகாவலித் திட்டத்தின் கீழ் கிழக்கிலும் காணி பிடிப்பு

யாழ்ப்பாணம், செப். 16

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக வடக்கில் முல்லைத்தீவில் தமிழ் மக்களின் காணிகள் பிடிக்கப்பட்டதைப் போன்று, கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பிலும் காணி பிடிப்பு நடவடிக்கைகள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்று தெற்கில், தமிழ் மக்களுக்குச் >> 23ஆம் பக்கம்

## நாளை யாழ்ப்பாணம் வருகிறார் பிரதமர் ரணில்

யாழ்ப்பாணம், செப். 16

யாழ். மாவட்டச் செயலகத் தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் தொகுதியை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகிறார்.

கட்டடத் தொகுதியைத் திறந்து வைக்கும் நிகழ்வு >> 23ஆம் பக்கம்


2016 A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான

- Dip. in English
- Dip. in ICT

Duration 2 months

Apply now for SEPTEMBER intake

செப்ரெம்பர் 25 இற்கு முன்னர் பதிவு செய்யும் மாணவர்களுக்கு விஷேட விலைக்கழிவு



ICBT CAMPUS JAFFNA

NO. 580, HOSPITAL ROAD, JAFFNA.

0770 746 553

இலங்கையின் வங்கி வரலாற்றில் DFCC வங்கி முதன்முறையாக அறிமுகப்படுத்தியுள்ளது.

Vardhana Virtual Wallet

• பொருட்கள் கொள்வனவுக்கு • பில்லுக்கு பணம் செலுத்த • வர்த்தன வொலற்களுக்கிடையில் பணப் பரிமாற்றம் செய்வதற்கு

SYNAPSYS

இவையெல்லாவற்றையும் அனுபவிக்க DFCC வங்கியில் கணக்கொன்றை ஆரம்பியுங்கள். Google play App Store இலிருந்து இன்றே உங்கள் கையடக்கத் தொலைபேசிக்கு APP ஒன்றை download செய்யுங்கள்.

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000

www.dfcc.lk

*நிபந்தனைகள் உண்டு.

DFCC வங்கி . பிச் ரேட்டிங் லங்கா லிமிட்டெட்டின் AA- (lka) தரப்படுத்தலைப் பெற்றுள்ளது.

DFCC வங்கி இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும்.

DFCC வங்கி

உங்கள் வளர்ச்சிக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபராக சரத்குமார நேற்றுப் பொறுப்பேற்றார்



யாழ்ப்பாணம், செப். 16
வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபராக எச்.ஏ.ஏ சரத்குமார நியமிக்கப்பட்டு காங்கேசன்துறையிலுள்ள அவரது அலுவலகத்தில் அனைத்து மதத் தலைவர்களின் ஆசியுடன் நேற்று முற்பகல் கடமையேற்றார்.

புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபரை வரவேற்பதற்காக வட பகுதியில் இருந்து பொலிஸ் உயரதிகாரிகள் பலர் அங்கு சமுகமளித்திருந்தனர். அவருக்கு பொலிஸ் மரியாதை அணிவகுப்பும் இடம்பெற்றது. பொலிஸ் மரியாதை அணிவகுப்பை அடுத்து மங்கல விளக்கேற்றப்பட்ட பின்னர் சுபநேரத்தில் கையெழுத்திட்டு தனது கடமையை மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் எச்.ஏ.ஏ சரத்குமார பொறுப்பேற்றார்.

இவர் போர் நிறைவடைந்த பின்னர் 5ஆவது வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டார். இதற்கு முன்னர் வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபராக இருந்த பிரங்கிளின் பெர்ணாண்டோ கடந்த 9ஆம் திகதி இடமாற்றம் பெற்றுச் சென்றார்.
(வ-4,ரி1,26,32)

# யாழ். நகரில் கலாசார மையம் நிறுவ உடன்படிக்கை கைச்சாத்து

## ரூ. 1.7 பில்லியன் செலவில் அமைக்கிறது இந்தியா



யாழ்ப்பாணம், செப். 16
யாழ். நகரில் 1.7 பில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள கலாசார மையத்திற்கான, உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு கொழும்பில் நேற்று இடம்பெற்றது.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் நேற்று இந்த நிகழ்வு நடைபெற்றது. இதில் இலங்கைக்கான பிரதித் தூதுவர் அரிண்டம் பக்சி, மீள்குடியேற்ற அமைச்சின் செயலர் வே.சிவஞானசோதி மற்றும் கட்ட நிர்மானத்தை முன்னெடுக்கவுள்ள இந்தியாவின் பீ.என்.சீ நிறுவனப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்திய அரசினால் நன்கொடையாக, யாழ். நகரில் பொது நூலகத்துக்கு அருகாமையில் கலாசார மையம் அமைக்கப்படவுள்ளது. இதற்காக இந்திய அரசு இலங்கை மதிப்பில் 1.7 பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. 2012ஆம் ஆண்டு இதற்கான முன்னெடுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அப்போதைய இலங்கை மற்றும் இந்திய அரசுகளுக்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடுவதில் உடன்பாடு எட்டப்பட்டிருக்கவில்லை. குறிப்பாக கலாசார மையத்திற்குரிய காணியை 99 வருடக் குத்தகைக்கு வழங்குவதில் பாதுகாப்புக் காரணங்களினால் பொது உடன்பாடு காணப்பட்டிருக்கவில்லை.

இந்த நிலையில் ஆட்சி மாற்றத்தின் பின்னர் கலாசார மையம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டன. இரு மாதங்களுக்கு முன்னர், கலாசார மையம் அமைப்பதற்கான நிலத்தைக் கையளிக்கும் நிகழ்வு யாழ். பொது நூலகத்தில் இடம்பெற்றது. இதன் தொடர்ச்சியாக ஒப்பந்தம் நேற்றுக் கைச்சாத்திடப்பட்டது. (வ-5)

## சட்டவிரோதமான மீன்பிடி; 4 மீனவர்களுக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், செப். 16
நந்திக் கடலேரியில் தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்திக் கடற்றொழிலில் ஈடுபட்ட 4 மீனவர்களுக்கு தலா 5ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது முல்லைத்தீவு நீதிவான் மன்றம்.

முல்லைத்தீவு, நந்திக்கடலேரியில் மீனவர்கள் சட்டவிரோதமாகக் கடற்றொழிலில் ஈடுபடுவதாக முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்திற்குக் கிடைத்த தகவலையடுத்து, கடந்த 13ஆம் திகதி உதவிப்பணிப்பாளர் தலைமையில் அந்தப் பகுதிக்குச் சென்ற அதிகாரிகள், தடை செய்யப்பட்ட கூட்டு வலைகளையும் தங்கூசி வலைகளையும் பயன்படுத்தித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நான்கு மீனவர்களைக் கைது செய்தனர்.

ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான 80 கூட்டு வலைகளையும் 3 இலட்சம் ரூபா பெறுமதியான நான்கு தங்கூசி வலைகளையும் கைப்பற்றினர்.

கைதுசெய்யப்பட்டமீனவர்களுக்கு எதிராக முல்லைத்தீவு நீதிவான் மன்றில் வழக்குத் தொடரப்பட்டது. அந்த வழக்கு நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, நான்கு மீனவர்களும் குற்றத்தை ஏற்றுக் கொண்டமையையடுத்து, அவர்களுக்குத் தலா 5ஆயிரம் ரூபா தண்டம் விதித்த நீதிவான், கைப்பற்றப்பட்ட வலைகளை அழிக்குமாறும் உத்தரவிட்டார்.
(வ-115)

## தனியார் பஸ் சாரதிகளுக்கு 20 ஆயிரம் தண்டம்

யாழ்ப்பாணம், செப். 16
பேருந்துத் தரிப்பிடம் இல்லாத இடங்களில் பயணிகளை ஏற்றி இறக்கிய குற்றத்துக்காக இரண்டு தனியார் பேருந்துச் சாரதிகளுக்கு யாழ்ப்பாணம் நீதிவான் மன்று 20 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தது.


யாழ்ப்பாணம் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸாரால் அவர்களுக்கு எதிராக யாழ். நீதிவான் மன்றில் வழக்குகள் தொடரப்பட்டன. நேற்று அவை விசாரணைக்கு எடுக்கப்பட்ட வேளையில் சாரதிகள் குற்றத்தை ஏற்றுக் கொண்டனர். அவர்களுக்குத் தலா 10 ஆயிரம் தண்டம் விதிக்கப்பட்டது. (வ-4,103)

## கிளிநொச்சிக் கந்தனின் தேர்த் திருவிழாவில் நகைகள் திருட்டு

கிளிநொச்சி, செப். 16
கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தின் இரதோற்சவமான நேற்று 3 சங்கிலி மற்றும் ஒரு தாலிக்கொடி என்பன களவாடப்பட்டமை தொடர்பில் முறையிடப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பரவிப்பாஞ்சன் பகுதியில் அமைந்துள்ள கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவின் இரதோற்சவம் நேற்று இடம்பெற்றது.

பக்கதர்களின் நெரிசலைப் பயன்படுத்தித் திருடர்கள் தமது கை வரிசையைக் காட்டியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். மேலதி விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.
(வ-4,101)



வேகக்கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் வவுனியா நொச்சிமோட்டையில் நேற்று மாலை 3.30 மணி அளவில் மதகின் கட்டடத்தை மோதி உடைத் துப் பின்னர் அதனருகிலிருந்த பெரும் மரமொன்றில் சாய்ந்து நின்றது. எனினும் டிப்பர் எந்நேரமும் தடம்புரண்டு பாதாளத்தில் விழலாம் என்றும் டிப்பரை மீட்பதில் பெரும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர்.
(வ-4,402)

## கருவாட்டுக் கடையில் திடீர் தீ விபத்து



மன்னார், செப். 16
மன்னார் நகரில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகிலுள்ள கருவாட்டு விற்பனை நிலையத்தில் நேற்று ஏற்பட்ட திடீர் தீயினால் பதப்படுத்தப்பட்ட கடல் உணவுகள் தீயில் கருகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

சுமார் 3 இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியான பதப்படுத்தப்பட்ட கடலுணவு வகைகள் தீயில் கருகி நாசமாகியுள்ளதாக அதன் உரிமையாளர் தெரிவித்தார்.

தீ எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்து இதுவரை தெரியவில்லை. மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அந்த நிலையத்தின் உரிமையாளர் தெரிவித்தார்.
(வ-4,56)

## வெடிகுண்டை வெட்டியவர் வெடித்ததால் படுகாயம்

யாழ்ப்பாணம், செப். 16
குண்டு வெடித்ததனால் ஒருவர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

வெடிக்காத நிலையில் இருந்த குண்டு ஒன்றை வெட்டியதாகவும், அதன்போதே குண்டு வெடித்ததாகவும் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. சம்பவம் யாழ். மணியம்தோட்டத்தில் நேற்று இடம்பெற்றது. மணியம்தோட்டம் உதயபுரம் 3ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த அன்ரன் பொஸ்கோ (வயது - 37) என்பவரே படுகாயமடைந்தார்.

பழைய குண்டுகளிலிருந்து மருந்தை எடுத்து, அதனைக் கொண்டு மீன்பிடிப்பதற்கான வெடி மருந்து செய்து விற்பனை செய்யப்படுகிறது. இத்தகைய சம்பவங்கள் பல முன்னர் இடம் பெற்றுள்ளன. இந்நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றது. வெடிப்புச் சம்பவம் குறித்து விசாரணை மேற்கொள்ளப்படுகிறது என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். (வ-4,106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டுக் குற்றச்செயல்கள் குறித்து நேரில் ஆராய வருகிறார் அமைச்சர்

யாழ்ப்பாணம், செப்.16

யாழ்ப்பாணத்தில் அதிகரிக்கும் குற்றச்செயல்கள் மற்றும் ஆள் கொல்லி போதைப்பொருள் பாவனைஉள்ளிட்டசட்டவிரோதச் செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக சட்டம்ஒழுங்குஅமைச்சர் சாகல ரட்ணாயக்க நாளைமறுதினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகிறார்.

இது தொடர்பில் யாழ். மாவட்டச் செயலாளர் நா. வேதநாயகன் தெரிவித்ததாவது:

அமைச்சர் தலைமையில் யாழ். மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடல்இடம்பெறும். குற்றச்செயல்களுக்கான காரணம், அவற்றைக்கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராயப்படும். கலந்துரையாடப் படும்விடயங்களுடன் தொடர்புடைய சகல தரப்பினரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், பிரதேச செயலாளர்களும் கலந்துகொள்வர் - என்றார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்றபோதை யற்ற நாடு நிகழ்ச்சித் திட்டத்தில் ஜனாதிபதியிடம், குற்றங்களைக் கட்டுப்படுத்துமாறு அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்திருந்தனர். (வ-101)

## காணி விற்பனைக்குண்டு

மல்லாகம், கே.கே.எஸ் வீதியில் 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(சோடாக் கம்பனி ஒழுங்கை)

077 753 2994

## வேலைக்கு ஆள் தேவை

சுன்னாகத்தில் இயங்கிவரும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கூலி வேலை ஆள்கள் தேவை. தங்கி நின்று வேலை செய்ய விரும்புபவர்களும் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 3867696

## வேலையாள்கள் தேவை

Photo Shop, Video Editing தெரிந்த வேலையாள்கள் தேவை. அடிப்படை சம்பளம் 20,000/- வழங்கப்படும்.

தொடர்பு: 076 6808541

## தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல சலூன் ஒன்றுக்கு நன்கு வேலை தெரிந்த ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 7856677

## வேலையாள்கள் தேவை

01. Technical officer (with experience)
02. Trainee (Technical officer)
03. மேசன், உதவியாளர்
04. வெல்டிங், வயரிங்

தொடர்பு: 077 7245399

## விசேட கட்டணச்சலுகையில் கணினிக்கற்கை நெறிகள்

DMI COMPUTER EDUCATION

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

- Dip.in Information Technology
- Diploma in Office Automation
- Dip. in Pre-Press Desktop Publishing
- Diploma in Pc Applications
- Adv. Dip. in Hardware & Networking
- Dip. in Video Production & Multimedia
- Dip.in Web Designing & Development
- Dip. in Computerized Accounting
- Master Dip.in Mulitmedia & Animation

#Auto CAD, C++, JAVA#

ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க யாழில் பெருமளவு மாணவர்கள் தெரிவு செய்யும்

**Diploma in English**

**IELTS**
- Unique Test Tips
- Latest course Materials

**IELTS Life Skills**



புதிய பிரிவுகள் ஆரம்பம்
17/09/2016 (Sat) - 9.30 am.
19/09/2016 (Mon) - 9.30 am.

☑ அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑ சர்வதேச அங்கீகாரம் பெற்ற நிறுவனம் (ISO-9001:2008) CERTIFIED சான்றிதழ்கள்
☑ இலகு தவணைக்கட்டண வசதிகள்.
☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கல்விக்கு

# DMI COMPUTER EDUCATION

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, (சுப்பிரமணியம் அருகாமை) | M.M.V. வீதி, | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் | No.19, A9 வீதி, |
| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021-228 5655 |

## இலங்கையில் முதல் தடவையாக பெண்களுக்கான அழகுக்கலைக் கல்லூரி

ஒளி அழகன் ஸ்ருடியோவும்

# British College of Beauty Studies

உம் இணைந்து நடத்தும் பெண்களுக்குப் பொருத்துமான துறை சார்ந்த பாடநெறிகள்



- தையற்கலை
- அழகுக்கலை
- கேக்ஐசிங்
- கணினி
- Ladies Skills Development
- ஆங்கிலம்

ஆகிய பாடநெறிகளும், பயிற்சி வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

- வயதெல்லை கிடையாது.
- இலகு தவணை முறையிலான கட்டண வசதி.
- எங்களிடம் எந்தப் பாடநெறியினைப் பூர்த்தி செய்தாலும் உலகின் எப்பகுதியிலும் சுயமாக உரிய தொழிலினைப் பெற்றுக் கொள்ள முடியும்.


**குறிப்பு: A/L பரீட்சை எழுதியவர்களுக்கு விசேட கட்டணக் கழிவு உண்டு.**

**British College of Beauty Studies**

கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(உதயன் பணிமனைக்கு அருகில்)

பலாலி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

தொடர்பு: 076 7011645



# இணுவில் திருப்பதி

# அருள்மிகு ஸ்ரீவேங்கடேஸ்வரர் ஆலயம்

## பிரமோற்சவ கால அலங்கார உற்சவமும்

## சனி தோஷ பரிகார சாந்தீ ஹோமமும் - 2016

**கோவிந்தன் அடியார்களே!**

வேண்டியவர்களுக்கு வேண்டியவற்றைத் தந்தருளும் பொருட்டு இணுவைத் திருப்பதியில் கோயில் கொண்டிருக்கும் திருவேங்கடமுடையான் தனது பக்தனாகிய விஷ்ணுபக்தன் என்னும் திருநாமம் கொண்ட சனீஸ்வர பகவானுடன் கோயில் கொண்டிருக்கிறார். இதுமட்டுமன்றிச் சனீஸ்வரபகவான் தனிச் சந்நிதியுடன் சனீஸ்வர தோஷம் நீக்கும் நளபுஸ்கரணி என்னும் தீர்த்தம் அமைந்திருக்கும் புனித ஷேத்திரமாகிய இணுவைத் திருப்பதியில் இவ்வருடம் புரட்டாதிச்சனி வார உற்சவமும், பிரம்மோற்சவகால அலங்கார உற்சவமும் நடைபெற இருக்கின்றது. புரட்டாதி மாத பிரதி சனி தோறும் அடியார்கள் கார்முகில் நீலவண்ணன் திருமேனியையும் தரிசித்து அவ்வாறே சனீஸ்வரதோஷம் நீங்கும் பொருட்டு நளபுஸ்கரணியில் புனித நீராடியும், சனீஸ்வரதோஷ பரிகார ஹோமத்தில் பங்குபற்றியும் எம்பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக் கொள்கின்றோம்.

### புரட்டாதிச் சனிவார உற்சவங்கள்

| | |
|---|---|
| முதலாம் புரட்டாதிச்சனி வாரம் | 17.09.2016 |
| 2ஆம் புரட்டாதி சனி வாரம் | 24.09.2016 |
| 3ஆம் புரட்டாதி சனி வாரம் | 01.10.2016 |
| 4ஆம் புரட்டாதி சனி வாரம் | 08.10.2016 |
| 5ஆம் புரட்டாதி சனி வாரம் | 15.10.2016 |

பிரதி சனிதோறும் காலை 6.15 மணிக்கு திருவேங்கடமுடையான் திருமஞ்சனம். தொடர்ந்து பூசை உபசாரம். காலை 9.00 மணி முதல் சனீஸ்வரர் தோஷ பரிகார அபிஷேகம்.

இக்காலங்களில் காலை 9.00 மணி முதல் 11.30 மணிவரையும் தொடர்ந்து பிற்பகல் 2.00 மணி முதல் பிற்பகல் 6.30 மணிவரையும் அடியார்கள் நளபுஷ்கரணியில் புனித நீராடலும், எள் எண்ணெய் விளக்கேற்றலும், சனீஸ்வரருக்குத் தோஷ நிவர்த்திக்காக குட நீராட்டலும்.

மற்றும் சனீஸ்வர பரிகார சாந்தி ஹோமத்திலும் பங்குபற்றி அக்ஹோமத்துக்கான திரவியங்களைத் தங்களின் கைகளால் ஹோமத்தில் இட்டு தோஷ நிவர்த்தி செய்ய முடியும் என்பதனையும் அறியத் தருகின்றோம்.

பிரதி சனி தோறும் ததீயாராதனை (அன்னதானம்) நடைபெறும்.

### பிரம்மோற்சவ கால அலங்கார உற்சவம்

03.10.2016 திங்கள் ஆரம்பமாகி 12.10.2016 புதன்கிழமை நிறைவுறும்.

இவ் உற்சவ காலங்களில் காலை 6.15 மணிக்கு மூலவர் திருமஞ்சனம். காலை 8.00 மணிக்குப் பூஜை உபசாரம். நண்பகல் 12.00 சகஸ்ரநாம அர்ச்சனை (ததீயாராதனை) அன்னதானம். பிற்பகல் 6.00 மணி தொடக்கம் உற்சவம் ஆரம்பம். பிற்பகல் 7.00 மணிக்கு வசந்தமண்டப பூசை, திருவூஞ்சல் ஆராதனை. பிற்பகல் 8.00 மணிக்கு தாள, லய, இசை, நர்த்தன சமர்ப்பணம்.

10.10.2016 திங்கள் ரதோற்சவ தினம்.
இரவு 8.00 மணிக்கு சுவாமி வீதியுலா.

11.10.2016 தீர்த்தவாரி காலை 6.15 மணிக்கு.
இரவு 7.00 மணிக்கு வசந்தமண்டபப் பூசை, திருவோண உற்சவ புறப்பாடு (சுவாமி வீதியுலா)

12.10.2016 திருக்கல்யாணம் மாலை 6 மணி முதல் ஆரம்பமாகி இரவு 8.30 மணிக்கு ஏகாதசி உற்சவ புறப்பாடு (சுவாமி மணவாளக்கோல வீதியுலா)

- ஆலய தர்மகர்த்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூரில் மாற்று மின் திட்டம் அமைக்கும் யோசனை உள்ளது

## *மின்சக்தி அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, செப். 16
சம்பூரில் அனல் மின் நிலையம் அமைக்கும் திட்டம் கைவிடப்பட்டது. எனினும் அங்கு மாற்று மின் நிலையம் அமைக்கும் யோசனை கைவிடப்படவில்லை.

இவ்வாறு நேற்றுத் தெரிவித்தார் மின் சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய.

மின் சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி வளத்துறை அமைச்சில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சம்பூர் அனல் மின் நிலையத் திட்டத்தைக் கைவிட்டமைக்கு பல்வேறு காரணங்கள் பின்னணியில் உள்ளன. எனினும் அவை அனைத்தும் உரிய வழிமுறைகளின் பிரகாரம் ஆராய்ந்த பின்னரே திட்டம் கைவிடப்பட்டது. மேலும் நாட்டில் அனல் மின் நிலையங்களைத் தடைசெய்யவேண்டும் என ஒரு தரப்பினரும், அதனைத் தொடர்ந்தும் பேண வேண்டும் என மற்றுமொரு தரப்பினரும் தெரிவித்து வருகின்றனர்.

எனவே அது தொடர்பில் ஆராய்வதற்குப் பிரதமரால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு சம்பூர் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் அனல் மின் நிலையம் அமைப்பது தொடர்பில் கவனம் செலுத்தவுள்ளது. எனவே அந்தக்குழுவின் அறிக்கையின் பிரகாரம் எதிர்காலத்தில் பாதிப்பில்லாத வகையில் அனல் மின் நிலையம் உட்பட ஏனையமின்நிலையங்கள் அமைப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்படும்.

அனல் மின் நிலையங்களை நாட்டில் முழுமையாகத் தடைசெய்து ஏனைய மின் உற்பத்தி முறைமைகளை மாத்திரம் நம்பியிருந்தால், எதிர்காலத்தில் இந்தத்துறையில் பெரியளவிலான பொருளாதாரச் சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டி வரும் என பொறியியலாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். அத்துடன் ஏராளமான நாடுகள் அனல் மின்சாரத் திட்டத்தை முழுமையாகக் கைவிடவில்லை. இந்தியாவும் அத்திட்டத்தை முழுமையாகக் கைவிடவில்லை.

ஆகவே குறித்த குழு நவீன தொழிநுட்பங்களைப்பயன்படுத்திக்கொண்டு சூழலுக்குப் பாதிப்பு.ஏற்படா வண்ணம் அனல் மின்சாரம் பெறும் வழிவகைகள் பற்றி அவதானம் செலுத்தி நடவடிக்கை எடுக்கும். அத்துடன் நாட்டின் மின்சாரத் தேவையைக் கருத்திற்கொண்டு சூரிய சக்தி மூலம் மின்சாரம் பெறும் திட்டமும் கடந்த ஆறாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அந்தத் திட்டத்தின் மூலம் மின்சாரம் பெறும் நடவடிக்கை நாடு முழுவதும் முன்னெடுக்கப்படும் -என்றார். (வ-5)

### தேவை

1) நெல் கொள்வனவு செய்யப்படும்
2) மில் உபகரணங்கள் தேவை
3) மில்லில் வேலை செய்ய விரும்புவோர் தேவை.

மாப்பியன் மில்
சுதுமலை மானிப்பாய். 077 7722215

### PERSONAL CLASS

கணிதம் (தரம் 6-11 வரை)
சி. தீபன் B.Sc
077 920 8945

### வீடு வாடகைக்குண்டு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் போதனா வைத்தியசாலை, பஸ் நிலையம் ஆகியவற்றிற்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. கல்வி நிலையங்களுக்கும் உகந்தது.
077 929 1959, 077 921 3609, 072 215 0734

### அறைகள் வாடகைக்கு

யாழ்ப்பாணம், கச்சேரிக்கு அருகில் பெண் பிள்ளைகள் தங்குவதற்கு அறைகள் வாடகைக்கு உண்டு
071 134 4666, 075 077 7503

### பெயர்மாற்றம்

குப்பிளான் தெற்கு வரிசயப் புலத்தில் வசிக்கும் எனது அரியகுட்டி தங்கரத்தினம் என்ற பெயரை அரியகுட்டி தங்கராசா என்று பெயர்மாற்றம் செய்கிறேன். இனிவரும் காலங்களில் இப் பெயரையே பயன்படுத்துவேன் என்பதை அறியத்தருகின்றேன்.
அ. தங்கராசா

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை 021-2227712
facebook CeylonTheatres
www.ceylontheatres.lk

# சர்வானந்தமய பீடம் - புத்தகத் திருவிழா

நூல் வெளியீடு, நூல் அறிமுகம், புத்தகக் கண்காட்சி, இறுவட்டுக்கள், சமஸ்கிருத, தமிழ் நூல்கள், மலிவு விற்பனை

காலம்
17,18 - 09 - 2016 சனி, ஞாயிறு
இருநாள்களும் கண்காட்சி தொடர்ந்து நடைபெறும்

வெளியீட்டு விழாக்கள்
சனி காலை 9.00 மணி
ஞாயிறு பிற்பகல் 2.30 மணி

இடம்
இணுவில் அறிவாலய மண்டபம்
(இணுவில் கந்தசுவாமிகோயில் முன்பாக)

கலந்து சிறப்பிக்கும் பெரியோர்கள்

பிரம்மஸ்ரீ ச.மஹேஸ்வரக் குருக்கள்
(சர்வதேச இந்துமத குருபீடாதிபதி)

பிரம்மஸ்ரீ தா.மஹாதேவக் குருக்கள்
(அதிபர், தர்மசாஸ்தா குருகுலம்)

பிரம்மஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள்
(பிரதமகுரு, சுன்னாகம், கதிரமலை சிவன் தேவஸ்தானம்)

நல்லைக்குருமணி சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

சின்மயா மிஷன் ஜாக்ரத சைதன்ய சுவாமிகள்

திரு.நா.வேதநாயகன் (யாழ்.அரச அதிபர்)

திரு.சி.குருகுலராசா அவர்கள்
(கல்வி அமைச்சர், வடமாகாணம்)

செல்வி வசந்தி அரசரத்தினம்
(உபவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

திரு.இ.சர்வேஸ்வரா
(உதவிப் பதிவாளர், மருத்துவத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

திரு தி.சுதர்சன்
(செயலாளர், வலி.தெற்கு பிரதேசசபை)

திரு.ச.இளங்கோவன் அவர்கள்
(ஆளுநரின் செயலாளர், வடமாகாண சபை)

பேராசிரியர், கலாநிதி மா.வேதநாதன்
(தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

பேராசிரியர், கலாநிதி திரு தி.வேல்நம்பி
(பீடாதிபதி, முகாமைத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
கோப்பாய் சிவம்

விளம்பர அனுசரணை:
திருமுருகன் ........ | ........
271,கே.கே.எஸ் வீதி ........ | ........, யாழ்ப்பாணம்.
021 222 7835 | 021 222 2027

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்சேகாவுடன் மோதும் குணரட்ன

கொழும்பு, செப். 16
இறுதிக் கட்டப் போரை நடத்திய இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கும், போரில் ஈடுபட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கமால் குணரட்னவுக்கும் இடையில் வார்த்தை மோதல்கள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

கமால் குணரட்ன போர் இரகசியங்களை வெளியிட்டுள்ளதாக சரத் பொன்சேகா குற்றம் சுமத்தியிருந்த நிலையில், போர் இரகசியங்களை வெளியிடும் இழிவான நபர் நான் அல்ல என்று மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன பதிலடி கொடுத்துள்ளார்.

"நந்திக் கடலுக்கான பாதை" என்ற தலைப்பில், ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன அண்மையில் புத்தகம் வெளியிட்டிருந்தார். இது தொடர்பில் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கருத்துரைத்த முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா, போர் தொடர்பில் நானும் புத்தகம் எழுதுவேன். ஆனால் போர் இரகசியங்களை வெளியிடமாட்டேன் என்று குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் பதிலடி வெளியிட்டுள்ள மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன, அண்மையில் வெளியிடப்பட்ட நூலின் ஊடாக எந்தவொரு போர் இரகசியங்களும் அம்பலப்படுத்தப்படவில்லை.

நான் போர் இரகசியங்ளை வெளியிடும் படைவீரனல்ல. போர் இரகசியங்கள் இருந்தால் அது நாம் சாகும்போது எம்முடனேயே புதைந்துவிடுமே தவிர, அவற்றை வெளியிடும் பெறுமதியற்ற மனிதனல்ல நான்.

பொதுமக்கள் அறிந்து கொள்ளவேண்டிய விடயங்களையே நான் நூலில் குறிப்பிட்டுள்ளேன். எனது பெருமையைப் பரப்புரை செய்யும் நோக்கில் நூலை எழுதவில்லை. வறிய பெற்றோரே தமது பிள்ளைகளைப் படையில் இணைத்தனர். அவர்கள் போர் பற்றி அறிந்து கொள்ளவே இந்த நூலைச் சிங்களத்தில் எழுதினேன்

நாம் போர்க்குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தும் புலம்பெயர் மக்கள் புரிந்து கொள்ள இந்த நூல் ஆங்கிலத்தில் எழுதப்பட்டது. நான் எனது உயிர் இருக்கும் வரை அரசியலுக்கு வரமாட்டேன் என்பதனையே வலியுறுத்துகின்றேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

**ஏழு நாள்களில் 5 ஆயிரம் நூல்கள் விற்பனை**

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் பற்றி மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன எழுதிய நூலின் முதல் பதிப்பு 7 நாள்களில் விற்றுத் தீர்ந்துள்ளது.

முதல் பதிப்பில் சுமார் 5 ஆயிரம் நூல்கள் பிரதியிடப்பட்டுள்ளன. இந்த நூல்கள் அனைத்தும் முதல் ஏழு நாள்களில் விற்றுத் தீர்ந்துள்ளதாக மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன தெரிவித்தார்.

கொழும்பு புத்தகக் கண்காட்சியில் இந்த நூலின் மற்றுமொரு பதிப்பு வெளியிட உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பதிப்பில் சுமார் 7 ஆயிரம் நூல்கள் பதிப்பிடப்பட உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (த-5)

# துமிந்தவின் சகோதரியுடன் ஹிருணிக்கா முகநூல் மோதல்

கொழும்பு, செப். 16
நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்காவும், துமிந்த சில்வாவின் சகோதரி திலினி சில்வாவும் முகநூலில் மோதிக் கொண்டுள்ளனர்.

பாரத லக்ஸ்மன் கொலை வழக்கில் துமிந்த சில்வாவுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பின்னர், பாரத லக்ஸ்மனின் மகளும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹிருணிக்கா, தனது தந்தை சுட்டுக் கொல்லப்பட்ட படத்தை முகநூலில் வெளியிட்டிருந்தார். இதன் பின்னர் துமிந்த சில்வாவின்சகோதரிதனதுமுகநூலில், துமிந்த சில்வா மீது துப்பாக்கிச் சூடு நடத்தியமையால் அவரது மண்டை ஓட்டின்ஒருபகுதி அகற்றப்பட்டமை தொடர்பிலான படத்தை முகநூலில் வெளியிட்டுள்ளார்.

சாவுத் தண்டனைக் கைதியான தமது சகோதரன் துமிந்த சில்வாவின் தலையில் மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சை தொடர்பான ஒளிப்படங்களை அவரது சகோதரி பிரசுரித்துள்ளமையை வரவேற்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

தமது தந்தையை துமிந்த சில்வாவே துப்பாக்கியால் சுட்டார் என்று குற்றம் சுமத்திவந்த ஹிருணிக்கா,துமிந்தசில்வாவுக்குச் சாவுத் தண்டனை கிடைத்த நிலையில் தமது தந்தையின் தலையில் துப்பாக்கிச் சன்னம் பாய்ந்திருந்தஒளிப்படத்தையும் வெளியிட்டிருந்தார். துமிந்த சில்வாவுக்கும் தலையில் துப்பாக்கிச் சன்னம் பாய்ந்திருந்தால், அவர் உயிர் பிழைத்திருக்க வாய்ப்பில்லை என்ற சந்தேகத்தையும் அவர் எழுப்பியிருந்தார். இதனையடுத்தே துமிந்த சில்வாவின் சகோதரி திலினி தமது சகோதரன் சத்திர சிகிச்சைக்கு உள்ளானதாகக்கூறப்படும்ஒளிப்படங்களை பிரசுரித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துரைத்துள்ள ஹிருணிக்கா, துமிந்த சில்வாவின் ஆரோக்கிய நிலையை பார்க்கின்ற போது அவருக்கு மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் சத்திரசிகிச்சை தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளது. எனவே அவருடைய மருத்துவச் சான்றிதழ் தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அதேநேரம் அவருக்குச் சிகிச் சையளித்த வைத்தியர் தொடர்பிலும் சந்தேகம் எழுந்துள்ளது.

தமதுதந்தையின்கொலைக்கு உரிய நீதி கிடைத்தமை போன்று இந்த விடயத்திலும் உண்மை ஒருநாள் வெளியாகும் என்று ஹிருணிக்கா தெரிவித்தார். (த-5)

# ஈழத் தமிழருக்கு பிரிட்டனில் 30 மாதச் சிறை

கொழும்பு, செப். 16

ஈழத்தமிழ்ப் புகலிடக் கோரிக்கையாளருக்குப் பாலியல் பாலாத்கார குற்றச்சாட்டில் பிரிட்டனின் பிராந்திய நீதிமன்றம் 30 மாத சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

மூன்று வருடங்களுக்கு முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட பரப்புரை மூலம் நாடு கடத்தப்படு வதில் இருந்து மேற்படி புகலிடக் கோரிக்கையாளர் பாதுகாக்கப்பட்டி ருந்தார்.

லிபரல் ஜனாநாயக கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரிபன் வில்லியம்ஸ் தலைமையில் 2011 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பரப்புரையின் மூலம் 31 வயதான நபர் பிரிட்டனில் தொடர்ந்தும் வசிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

மூன்று ஆண்டுகளின் பின்னர் இரவு நேரத் தங்குமிடமொன்றில் 21 வயதான இளம்பெண்ணைப் புகலிடக் கோரிக்கையாளர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக வழக்கு தொடரப்பட்டிருந்தது.

2014 ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேற்கொள்ளப்பட்ட டிஎன்.ஏ. பரிசோதனை மூலம், புகலிடக் கோரிக்கையாளர் பாலியல் வன்புணர்வை மேற் கொண்டமை நிரூபிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் இடம்பெற்று இரண்டரை ஆண்டுகளின் பின்னர் குறித்த புகலிடக் கோரிக்கையாளருக்குப் பிராந்திய நீதிமன்ற நீதிபதி சிறைத் தண்டனை விதித்துள்ளதுடன், இந்த வழக்கு தாமதப்படுத்தப்பட்டமை குறித்து விசனம் வெளியிட்டுள்ளார். (த-5)

# புலம்பெயர் தொழிலாளரின் வாக்குரிமையை உறுதி செய்க

## சட்ட வரைவை கொண்டு வருமாறு அரசிடம் கோரிக்கை

கொழும்பு, செப். 16

வெளிநாட்டில் வதியும் புலம்பெயர் தொழிலாளர்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்தும் சட்ட வரைவை அரசு கொண்டுவர வேண்டும்.

இவ்வாறு அனைத்து புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான குழு வலியுறுத்தியுள்ளது.

இதற்கு முன்னர் தாம் முன்வைத்த பரிந்துரை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு முன்வைத்த பரிந்துரை மற்றும் கடந்த 15 ஆண்டுகளாக சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் வலியுறுத்தும் இந்த விடயம் குறித்து அரசு கருத்தில் கொள்ளாமை தொடர்பில் மேற்படி குழு கவலை வெளியிட்டுள்ளது.

புலம்பெயர் தொழிலாளர்கள் நேரடியாக பிரசன்னமாகாமல் அவர்களுக்கு தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்படுவதாக அனைத்து புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான குழு சுட்டிக்காட்டியுள்ளது.

வெளிநாட்டில் வதியும் புலம்பெயர் தொழிலாளர்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்தும் சட்ட வரைவை எந்தவொரு தாமதமும் இன்றிக் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் குறித்த குழு வலியுறுத்தியுள்ளது.

2020 ஆம் ஆண்டில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் வெளிநாட்டில் வதியும் மற்றும் தொழில்புரியும் இலங்கைப் பிரசைகளின் வாக்களிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தும் முயற்சிகளை அரசு அதிகரிக்கவேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

பட்டியலிடப்பட்டு, அறிக்கையிடப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் பதில் வழங்கும் வகையில் அரச தரப்பினால் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டாவது இடைக்கால அறிக்கையை வரவேற்பதாகவும் அனைத்து புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான குழு குறிப்பிட்டுள்ளது. (த-5)

# நூல்களின் வெளியீடு

தெல்லிப்பழை கலை இலக்கியக் களத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நூல்களின் வெளியீட்டு விழா நாளை 17 ஆம் திகதி முற்பகல் 9 மணியளவில் இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் ராஜி கெங்காதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சைவப்புலவர் சு.செல்லத்துரையின் பத்தினிதெய்வம் மற்றும் இறந்த பின் எங்கள் நிலை ஆகிய நூல்களின் அறிமுக விழா நடைபெறவுள்ளது.

மாவை பாரதியின் ஆரண்ய வாசம் என்ற கவிதை நூல் வெளியீட்டு விழாவும் நடைபெறுவதுடன் பண்டிதர் ந.கடம்பேசுவரனின் காப்பியதாசன் என்ற கட்டுரை நூல் வெளியீட்டு விழாவும் நடைபெறவுள்ளது. (ற-ரி)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழில்நுட்பவியல் இறுதிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், செப்.16
தொழில்நுட்பவியல் கல்லூரியின் இறுதிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள் ளன. மீள் பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் விண்ணப்ப படிவங்களை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரத்தில் தொழில்நுட்பவியல் கல்லூரியின் பரீட்சைப் பகுதியில் சமர்பிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.(ற-ரி)


## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலையின் விஞ்ஞான ஆசிரியரும் உப அதிபருமாகிய திருமதி S.E **பீரிஸ்** அவர்களின் அருமைச் சகோதரனும் எமது பாடசாலையின் ஓய்வு நிலை ஆசானும் ஆகிய

**லூக்காஸ் பற்றிமா மனோகரன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யா/ பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க. த.க. பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

## இருபதாம் ஆண்டு நினைவலைகள்



உதிப்பு
01.10.1939

மறைவு
16.09.1996

**பூதர் இரத்தினம்**
( ஓய்வுபெற்ற ஊழியர் - காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை )

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவமாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார் உறவினர்களுக்கு இனியவராய்
வாழ்ந்து எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் இருபது மறைந்தாலும்
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கவும்
உங்கள் ஆத்மா சாந்தியடையவும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தயாற்கந்தோர் அருகில், கே.கே.எஸ். வீதி, தெல்லிப்பழை.**
**நீங்கா நினைவுகளுடன் குடும்பத்தினர்.**
(J/4629)(10.18)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
24 . 01 . 1947



மறைவு
03 . 08 . 2016

## அமரர் கந்தையா இரத்தினம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 14.09.2016 புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (16.09.2016) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அவரின் மறைவுச் செய்தி அறிந்து நேரடியாகக் கலந்துகொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

**இல.90, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம்.** (கே/4590)(11.18) **குடும்பத்தினர்.**


## அ.அட்டை கண்டெடுப்பு

சாவகச்சேரி, செப்.16
சாவகச்சேரி நீதிமன்ற வளாகத்தில் வசாவிளான் தெற்கைச் சேர்ந்த நவரத்தினம் ஜெயந்திரன் என்பவரது தேசிய அடையாள அட்டை அண்மையில் கண்டெடுக்கப்பட்டு நீதிவான் நீதிமன்றப் பதில் பதிவாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.
தவறவிட்டவர் நேரில் வந்து பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)


## 45ஆம் நாள் நினைவலைகள்



தோற்றம் 16.11.1930 — மறைவு 03.08.2016
தோற்றம் 21.10.1938 — மறைவு 03.08.2016

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட

**அமரர் கந்தையா பொன்னம்பலம்**
(சமாதான நீதிவான் - J.P)

**திருமதி பரமேஸ்வரி பொன்னம்பலம்**
(கருணி)





அன்னை தந்தை போல் எம்மை ஆதரித்த
தெய்வங்களே!
இணைந்தே இருவரும் இறைவனடி சேர்ந்து
நாற்பத்தைந்து நாளும் வந்ததன்றோ!
நாளெல்லாம் உங்கள் நினைவே!
மாறாத, மறையாத உங்கள் அன்பில்
மகிழ்ந்து இருந்தோம் நாம்!
மணி ஓசை கேட்டவுடன் மட்டற்ற மகிழ்வில்
ஓடி வந்து கதைக்கும் நாங்கள் இப்போ!
நான்கு சட்டத்துள் நாயகமாய் வீற்றிருக்கும்
உங்களை நாளெல்லாம் வணங்குகின்றோம்
அம்மை, அப்பனே! ஆண்டவன்
அடியினிலே நித்திய சுகம் பெற
தில்லைக்கூத்தன் திருவடியை
வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**119/4, முன்வீதி, பலாலிவீதி, திருநெல்வேலி.**
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரங்கள்.**
(கே. 4585)(13. 17)

## முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு



கடந்த 27.09.2015 அன்று இறைபதம் அடைந்த எங்கள் அன்புத்தெய்வம்

அமரர் **காத்தான் சத்தியசீலன்**

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தின நிகழ்வு நாளை (17.09.2016) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

**சத்தியசீலன் அஷ்டலட்சுமி குடும்பத்தினர்.**
**இல.72/51, இந்தியன் வீட்டுத்திட்டம், பொன்நகர், கிளிநொச்சி.**
(கே.163) (13.15)


## கசிப்பு வைத்திருந்த நபருக்கு தண்டம்

கசிப்பு வைத்திருந்த கொடிகாமம் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் தண்டம் விதித்தார்.
அதேவேளை வழங்கப்பட்ட வழித்தட அனுமதிப் பத்திரத்தில் குளறுபடி செய்த வாகனச் சாரதிக்கு 10ஆயிரம் ரூபாவும், டிப்பர் வாகனத்தில் முதிரை மரக்குற்றிகளைக் கடத்த முயன்ற சாரதி உட்பட மூவருக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதமும், பக்கம் மாறி வாகனத்தைச் செலுத்திய சாரதிக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும் தண்டம் வதிக்கப்பட்டது. (ற-9)

## நல்லூரில் தவறவிட்ட பொருள்களை பெறலாம்

நல்லூர் கந்தசாமி கோவில் திருவிழாக் காலங்களில் தவறவிடப்பட்ட பொருள்களை உரியவர்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தி பெற்றுக்கொள்ள முடியும் என்று யாழ்.மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.
நடைபெற்று முடிந்த நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவ திருவிழாவின்போது பக்தர்களால் தவறவிடப்பட்ட மோதிரம், கைச்சங்கிலி, தேசிய அடையாள அட்டை, திறப்புகள் மற்றும் சில கைப்பைகள் யாழ்ப்பாணம் மாநகர சபையில் ஒப்படைக்கப்பட்டு உரிமை கோரப்படாத நிலையிலுள்ளன. (ற-ரி7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மக்கேணியில் கோர விபத்து

- ஹைஏஸும், தனியார் பஸ்ஸும் மோதின
- ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உள்பட ஐவர் சாவு
- 7 பேர் கடும் காயங்களுடன் வைத்தியசாலையில்

வடக்கில் அண்மைக் காலமாக வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன. அதிகரித்த வேகத்தாலும், விதி முறைகளை கடைப்பிடிக்காததாலும் ஏற்பட்ட விபத்துக்களே அதிகம். கடந்த 22 நாள்களில் 20 பேர் விபத்துக்குள்ளால் உயிரழந்துள்ளனர்.



கிளிநொச்சி, செப்.16
பளை, தர்மக்கேணியில் நேற்று அதிகாலை 5.45 மணியளவில் இடம்பெற்ற கோர விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உள்பட 5 பேர் சாவடைந்தனர். 7 பேர் கடும் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

கொழும்பில் உறவினரின் சாவு வீட்டுக்குச் சென்று ஊர் திரும்பும்போதே விபத்து நடந்துள்ளது.

பருத்தித்துறை வியாபாரி மூலையில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பசுபதி (வயது-89), பசுபதி வள்ளிப்பிள்ளை (வயது-75), பசுபதி நந்தமூர்த்தி (வயது-46) மற்றும் கணேசமூர்த்தி பொன்னம்மா (வயது-70), தர்மலிங்கம் சாந்தாதேவி (வயது-72) ஆகியோரே விபத்தில் உயிரிழந்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து மத்துகமவுக்குச் சென்ற தனியார் பஸ்ஸும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ஹைஏஸ் வாகனமும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதால் கோர விபத்து நடந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பளை தர்மக்கேணிப் பகுதியிலுள்ள



வளைவில், யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த லொறி ஒன்றை ஹைஏஸ் வாகனம் முந்திச் செல்ல முற்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் யாழ்ப் பாணத்திலிருந்து மத்துகம நோக்கி வந்த தனியார் பஸ் வழிவிட முடியாமல் மோதியுள்ளது. கணநேரத்தில் நடைபெற்று முடிந்த விபத்தில் 4 பேர் சம்பவ இடத் திலேயே உயிரிழந்தனர்– என்று பளைப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்தில் மோதுண்ட ஹைஏஸ் வாகனத்தின் முன்பகுதி முழுவதிலுமாக சிதைந்தது. வாகனம் வீதியில் அரை வட்டமாக திரும்பியது. ஹைஏஸ் வாகனத்துக்குள்ளிருந்தவர்கள் வாகனத்துக்குள்ளிருந்து வெளியே வீசப்பட்டனர். விபத்தில் காயமடைந்தவர்கள் பளை வைத்தியசாலையின் அம்புலன்ஸில் ஏற்றிச் செல்லப்பட்டனர். பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

காயமடைந்தவர்களை அந்தப் பகுதியால் சென்ற வாகனங்கள் எவையும் ஏற்றவில்லை. விபத்து நடை பெற்று பத்து நிமிடங்களில் சம்பவ இடத்துக்குச் சென்ற பளை வைத்தியசாலையின் அம்புலன்ஸே அவர்களை ஏற்றிச் சென்றது என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

காலை 8.30 மணியளவில் கிளி நொச்சி நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டார். பின்னர் உயிரிழந்தவர்களின் உடல்கள் கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டன. ஹைஏஸ் வாகனத்தின் இன்ஜின் பகுதியில் சிக்குண்டிருந்த உடல் இராணுவத்தினரின் மின்தூக்கி ஊடாக ஹைஏஸ் வாகனத்தை அகற்றியே மீட்கப்பட்டது.



சாவடைந்தவர்களின் உடல்கள் மிக மோசமாக சிதைவடைந்துள்ளன என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

வடக்கில் கடந்த 22 நாள்களில் 20 பேர் விபத்துக்களால் சாவடைந்துள்ளனர்.

(ற-5,21,ரி3,101,9,106,35)

## கிளி. தனியார் பஸ் உரிமையாளருடன் அமைச்சர் டெனீஸ்வரன் இன்று சந்திப்பு

கிளிநொச்சி, செப்.16
கிளிநொச்சி தனியார் பஸ் உரிமையாளர்களுக்கும், வடக்கு மாகாண போக்கு வரத்து அமைச்சருக்கும் இடையே இன்று அவசர சந்திப்பு ஒன்று இடம்பெற உள்ளது.

சந்திப்பு மன்னார் நகர சபை மண்டபத்தில் இன்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெறஉள்ளதுஎன்று வடக்கு போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

பொதுமக்களுக்குப் பாதுகாப்பானதும் பயனுறுதி வாய்ந்ததுமான சிறந்த போக்குவரத்துச் சேவையை வழங்கும்பொருட்டு பல்வேறு நடவடிக்கைகளை வட மாகாண போக்குவரத்து அமைச்சு மேற்கொண்டுள்ளது. கிளிநொச்சி மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்களை இன்று வெள்ளிக்கிழமை சந்திப்பதற்கு உள்ளேன். கிளிநொச்சி மாவட்டத்தில் பல பஸ் உரிமையாளர்கள் அற்றோணித்தத்துவத்தின் ஊடாக பஸ்களை கை மாற்றி இருப்பதும், பலர் சட்டத்துக்கு முரணாக பஸ்களை கையுதிர்த்திருப்பது தொடர்பிலும் பல்வேறு முறைப்பாடுகள் நாளாந்தம் கிடைக்கின்றன.

இந்தப் பிரச்சினைகளை உரிய முறையில் தீர்ப்பதற்கும், பெரும் முறைகேடுகள் காணப்படின் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்குமே சந்திப்பு இடம்பெறவுள்ளது. சந்திப்பில் வட மாகாண தனியார் பேருந்து உரிமையாளர் ஒன்றிய நிர்வாகத்தினரும், கிளிநொச்சி மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள், சங்க நிர்வாகத்தினர், அற்றோணித்தத்துவக்காரர்களும், அற்றோணித்தத்துவத்தை கொடுத்தவர்களும் தவறாது சமுகமளிக்க வேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் குறித்த விடயத்தோடு தொடர்புடைய பொருத்தமான ஆவணங்களையும் கொண்டு வர வேண்டும்– என்று அமைச்சர் குறிப்பிட்டார். (ற-21)



ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் நடத்தும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தர மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியில் நடைபெற்றது. கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மாணவர்கள், அனுசரணையாளர்கள், மாணவர்கள் அதில் கலந்து கொண்டனர். (ற)

## புதுக்குடியிருப்பு சந்தையில் விரைவில் இறைச்சிக் கடை

### பிரதேச சபை செயலாளர் தெரிவிப்பு

புதுக்குடியிருப்பு சந்தைத் தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள இறைச்சி கடை வெகுவிரைவில் திறக்கப்படவுள்ளது என்று புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலாளர் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு சந்தைத்தொகுதியில் அமைந்துள்ள கோழி இறைச்சிக் கடை திறக்கப்படாதுள்ளது. உணவுத் 'தேவைக்கு இறைச்சியைப் பெற்றுக் கொள்வதில் மிகுந்த சிரமத்தினை எதிர்கொள்கின்றோம் என்று பொதுமக்கள் தெரிவித்தனர். புதிதாக அமைக்கப்பட்டுள்ள இறைச்சிக் கடையை மக்கள் பாவனைக்காக திறந்து விடுவதன் ஊடாக தாம் சிறந்த பயனை அடைய முடியும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இறைச்சிக் கடையை வாடகைக்கு எடுத்து நடத்துவதற்கு விருப்பம் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு எமக்குக் கிடைத்துள்ளன. அவை தொடர்பாக ஆராய்ந்து கூடிய பெறுமதிக்குப் பெற்றுக்கொள்ள விரும்புகிறவருக்கு இறைச்சி கடை [illegible] இறைச்சிக் கடை மற்றும் கருவாட்டுக் கடைகள் அமைப்பதற்கான பணிகளும் முன்னெடுக்கப்படுகின்றன என்று புதுக்குடியிருப்பு பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார். (ம-ரி7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், செப்.16
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வட மாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் சிலாவத்தை, உடுப்புக்குளம், அளம்பில், குமுழமுனை, செம்மலை, நாயாறு, கொக்குத் தொடுவாய், கருநாட்டங்கேணி, கொக்கிளாய், கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், அந்தோனிப்பிள்ளை ஐஸ்தொழிற்சாலை ஆகிய இடங்களில் மின் தடைப்படும்.

வவுனியாவில் காலை 8.30 மணியிலிருந்து 5.30 மணிவரை நெளுக்குளம், கூமாங்குளம், நாகரிலுப்பைக்குளம், பொன்னாவரசங்குளம், அறுகம்புல் வெளி, நொச்சிக்குளம், சாம்பல்தோட்டக் குடியிருப்புத்திட்டம், பான்சின்னக்குளம், பாரதிபுரம், விநாயகபுரக்குடியிருப்புத்திட்டம், இராஜேந்திரகுளம் ஆகிய இடங்களில் மின் தடைப்படும். (ற-ரி)

# போக்குவரத்து சேவை வழங்குமாறு வீதியில் படுத்து மக்கள் போராட்டம்

## ஆச்சிபுரம் கிராமத்தில் நேற்று





வவுனியா, செப். 16
சிதம்பரபுரத்தில் இருந்து ஆச்சிபுரம் ஊடாக வவுனியா சாலைக்கு நாளாந்தம் காலையில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் மீண்டும் மாலை சிதம்பரபுரம் செல்லும் போது ஆச்சிபுரம் கிராமத்தினூடாகவே செல்ல வேண்டும். இவ்வாறு வலியுறுத்தி நேற்று பஸ் முன்பாக படுத்திருந்து போராட்டம் நடத்தப்பட்டது. ஆச்சிபுரம் கிராமத்தைச் சேர்ந்த பொது அமைப்புக்கள், மக்கள் அதில் பங்கெடுத்தனர். காலை சிதம்பரபுரத்தில் இருந்து ஆச்சிபுரம் ஊடாக பயணிகளை ஏற்றி வந்த தனியார் பஸ்ஸை ஆச்சிபுரம் பகுதியில் இடைமறித்து தமது கோரிக்கைக்கான பதிலை எதிர்பார்த்து 3 மணி நேரம் பஸ்ஸை நகர விடாது மக்கள் போராட்டம் நடத்தினர்.

வவுனியா சிதம்பரபுரத்தில் இருந்து ஆச்சிபுரம், எல்லப்பர் மருதங்குளம், முருகனூர் ஊடாக கடந்த காலங்களில் அரச பஸ் சேவையில் ஈடுபட்டது. தனியார் பஸ் சேவை ஆச்சிபுரத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, அரச பஸ் சேவையை நிறுத்தியது. தனியார் பஸ் ஒவ்வொரு நாளும் காலையில் சிதம்பரபுரத்தில் இருந்து புறப்பட்டு ஆச்சிபுரம், எல்லப்பர் மருதங்குளம், முருகனூர் ஊடாகவே வவுனியா செல்கின்றது.

அதில் பாடசாலை மாணவர்கள், ஊழியர்கள் வவுனியாவுக்குச் செல்பவர்கள் செல்கின்றனர். இந்த பஸ் மாலை, வவுனியாவில் இருந்து மீண்டும் திரும்பி வரும் போது ஆச்சிபுரத்தினூடாக வருவதில்லை. ஆச்சிபுரத்து மாணவர்கள், உத்தியோகத்தர்களை இடையில் இறக்கிவிட்டு சிதம்பரபுரத்துக்கு செல்கின்றது.

அதனால் நாங்கள் பெரிதும் பாதிப்படைகின்றோம். 4 கிலோமீற்றர் நடந்தே எமது கிராமத்துக்கு வருகின்றோம். காலையில் ஆச்சிபுரத்தினூடாக பயணிகளை ஏற்றிச் செல்லும் தனியார் பஸ் மீண்டும் திரும்பி வரும் போதும் அதே பாதையூடாகவே பயணிக்க வேண்டும். அதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகவே இந்த போராட்டத்தை ஆரம்பித்தோம்.- என்று மக்கள் தெரிவித்தனர்.

சிதம்பரபுரத்தை சேர்ந்த இளைஞர் கழகம், கிராம அபிவிருத்திச் சங்கம், பெண்கள் அபிவிருத்திச் சங்கம், கிராம மக்கள் எனப் பலரும் இணைந்து போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர். காலை 6.30 மணியளவில் ஒன்று கூடிய மக்கள் தனியார் பஸ்ஸை இடைமறித்து காலை 9 மணி வரை போராட்டத்தை நடத்தினர்.

சம்பவ இடத்துக்கு வந்த வவுனியா பொலிஸார் மக்கள் மற்றும் தனியார் பஸ் உரிமையாளர்களை அழைத்து சமரசம் செய்தனர். தனியார் போக்குவரத்து உரிமையாளர் சங்கத் தலைவரையும் அங்கு அழைத்து பொதுமக்களின் அடிப்படைப் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று கூறினர்.

குறித்த பகுதிக்குச் பஸ் சேவை இடம் பெறுவதில்லை, முச்சக்கர வண்டிகள் சேவையில் ஈடுபட்டுள்ளதால் தனியார் பஸ் சேவையை நாம் குறைத்துக் கொண்டுள்ளோம் என்று தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் தெரிவித்தார். அவருடைய கருத்தை மக்கள் மறுத்தனர்.

தனியார் பஸ் இந்தப் பகுதியூடான சேவையில் ஈடுபடவில்லை என்ற காரணத்தாலேயே முச்சக்கர வண்டிகள் சேவை வழங்குகின்றன. இங்கிருந்து கோவில்குளம் இந்துக்கல்லூரி, கோமரசன்குளம் மகாவித்தியாலயம், சமளங்குளம் அ.த.க பாடசாலை, வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரி போன்ற பாடசாலைகளுக்கு 60க்கும் மேற்பட்ட மாணவர்கள் சென்று வருகின்றனர். காலையில் மாணவர்களை பாடசாலைக்கு ஏற்றிச் செல்லும் பஸ் மாலையிலும் அவர்களை ஏற்றிய இடத்தில் இறக்கிவிட்டுச் செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பஸ் இங்கு வராத காரணத்தால் வைத்தியசாலைக்குச் செல்பவர்கள் கூட பெரும் அசௌகரியங்களை எதிர் கொள்கின்றனர். பஸ் மீண்டும் இந்தப் பாதையாலேயே வர வேண்டும்.- என்று மக்கள் பொலிஸாரிடம் வலியுறுத்தினர்.

பஸ் சேவை தொடர்பான முடிவைப் பெற்றுத் தருவோம் என்று பொலிஸார் தெரிவித்ததைத் தொடர்ந்து ஒன்பது மணியளவில் மக்கள் போராட்டத்தை முடித்து, தனியார் பஸ்ஸை விடுவித்தனர். (ற-5,21)

33 ஆம் நாள் நினைவஞ்சலியும்
நன்றி நவிலலும்



அமரர் சண்முகம்
சிவஞானம்
தோற்றம்
10.02.1940
மறைவு
15.08.2016

கடந்த 15.08.2016 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி அறிந்து அனுதாபம் மற்றும் உதவிகள் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (16.09.2016) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மானிப்பாய் - வடகிழக்கு,
மானிப்பாய்.
(J/4632)(13.17)
குடும்பத்தினர்.

# நல்லிணக்கத்துக்கு மக்கள் கருத்து கேட்பது காலம் கடத்தும் செயற்பாடு

## வலி.கிழக்கு பிரதேச மூத்த பிரசைகள் சுட்டிக்காட்டு

அச்சுவேலி, செப். 16
இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு பொதுமக்களிடமிருந்து ஆலோசனை கேட்பது, ஆணைக் குழுக்கள் நியமிப்பது ஆகியன காலம் கடத்தும் செயற்பாடுகள். இவ்வாறு வலி.கிழக்கு பிரதேச மூத்த பிரசைகள் காட்டமாகத் தெரிவித்தனர்.

தேசிய ஒருமைப்பாட்டுக்கும், நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் அனுசரணையுடன் 'கடந்த காலங்களைக் குணப்படுத்துவதனூடாக எதிர்காலத்தைக் கட்டியெழுப்புதல்' என்னும் தொனிப்பொருளில் தேசிய மீளிணக்க நிகழ்ச்சித் திட்ட செயலமர்வு நீர்வேலி தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க பொது மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக பிரிவு கிராம அபிவிருத்திச் சங்கங்களின் தலைவர்களுக்கு நடத்தப்பட்ட செயல் அமர்வில் 22க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். அவர்களில் இருபது பேர் ஓய்வுநிலை உத்தியோகத்தர்கள். வலி. கிழக்கு பிரதேச சிறுவர் மேம்பாட்டு அலுவலர் தலைமையில் நடைபெற்ற செயல் அமர்வில், இதன் நோக்கம் மற்றும் முன்னெடுப்புக்கள் தொடர்பாக தலைவர்கள் விளக்கம் அளித்ததை அடுத்து கருத்துப் பரிமாறல்கள் நடைபெற்றன.

இலங்கையின் இனப்பிரச்சினை, அதன் பூர்வீகத் தன்மை, அரச தலைவர்களின் முன்னெடுப்புக்கள், இனப் பிரச்சினைக்கான தீர்வுகளைக் காண்பதில் அரசுகள் காலத்துக்குக் காலம் காலங்கடத்தும் வகையில் செயற்பட்டமை, தீர்வுகள் தோல்வி அடைந்தமை தொடர்பில் கருத்துக்கள், முன்வைக்கப்பட்டு அறிக்கைக்கான முன்மொழிவுகள் எழுத்து வடிவில் குழு நிலை ஆய்வு மூலம் பெறப்பட்டன.

கருத்தரங்கில் உரும்பிராய்ப் பகுதியைச் சேர்ந்த கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் ஒருவர் கருத்துரைத்தார்.

அரசுகள் தீர்வுத்திட்டத்தை பன்னாட்டு ரீதியில் பல்தேசிய இனங்கள் வாழும் நாடுகளில் உள்ளது போல முன்வைத்து செயற்படுத்தத் தவறி விட்டன. இந்த விடயத்தில் பொது மக்களிடம் இருந்து கருத்துக்களை, அறிக்கைகளை அரசு கோரிப் பெறுவது 'வைத்தியர் ஒருவர் நோயாளியைக் கேட்டு அவரின் ஆலோசனை விருப்பத்துக்கு அமைய மருந்துகளை வழங்குவதற்கு ஒப்பானது. இது மருத்துவருக்கு ஏற்புடையதல்ல. இதன் மூலம் நோயாளி சுகமடைய முடியாது. சாவடைய நேரிடும்- என்று அவர் சுட்டிக்காட்டினார். இந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டு ஏனையவர்களும் கருத்துக்களை முன்வைத்தனர். (ற-5,11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லையிலும் மணல் சிக்கல் வீடுகள் அமைப்பதில் இழுபறி

## திட்டப் பயனாளிகள் பாதிப்பு

முல்லைத்தீவு, செப்.16

முல்லைத்தீவு மாவட்டத்துக்குட்பட்ட பகுதிகளில் வீட்டுத் திட்டம் கிடைத்துள்ள பயனாளிகள் வீடுகள் கட்டுவதற்கு மணலைப் பெற முடியாதுள்ளது என்று தெரிவித்தனர். மணைப் பெறுவதற்கு ஆவனசெய்ய வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வீட்டுத் திட்டங்கள் ஊடாக ஆயிரம் வீடுகள் கிடைத்துள்ளன. பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு வீடுகளுக்கான கட்டுமாணங்களை ஆரம்பித்துள்ள நிலையில் மணலுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கனியவளத் துறையால் ஒரு பிரதேச செயலகத்துக்கு ஒரு மாதம் 100 கியூப் மணல் அகழ்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பயனாளி ஒருவருக்கு ஒரு மாதத்துக்கு ஒரு டிராக்டர் மணலே அனுமதிக்கப்படுகின்றது. ஒரு வீட்டின் கட்டுமானத்தை முழுமையாக நிறைவு செய்வதற்கு 25 டிராக்டர் மணல் தேவைப்படுகின்றது. வீடு கட்டி முடிப்பதற்கு 25 மாதங்கள் தேவைப்படும் நிலை காணப்படுகின்றது. ஆயிரம் வீடுகளும் முழுமையாக முடிவடையாது. பலர் மணலை மண் அகழ்வுக்கு அனுமதி பெற்ற தனியார்களிடம் அதிக விலை கொடுத்துப் பெறுகின்றனர். அதிகாரிகள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். தமக்குத் தேவையான மணலை அரசு வழங்க வேண்டும்–என்றுவீட்டுத்திட்டப்பயனாளிகள் கோரிக்கை விடுத்தனர்.

சமூக அமைப்புகள் மணல் அகழ்ந்து வழங்க முன்வருவார்களாக இருந்தால் அனுமதி வழங்கலாம். சமூக அமைப்புகள் முன்வந்து பிரதேச செயலாளர் ஊடாக விண்ணப்பித் தால் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படும். வீட்டுத் திட்டப் பயனாளிகள் அவர்களிடம் நியாய விலையில் மணலைப் பெற்றுக் கொள்ளலாம். மணல் அகழ்வதற்கு உள்ளூர் அமைப்புகளுக்கு முன்னுரிமை வழங்குகின்றோம்.– என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார். (ற–ரி7,102)

# வீதி விளக்குகளை அணைக்கும் பொறுப்பை மக்களிடம் விடுங்கள்

## சாவகச்சேரி நகர சபையிடம் கோரிக்கை

சாவகச்சேரி செப். 16

தமது வீதிக்கு வீதி விளக்குப் பொருத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கும் பொது மக்கள், வீதி விளக்கு இரவு பகலாக ஒளிர்வதைக் கண்டும் காணாமல் இருக்கின்றனர் என்று விசனம் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி நகரசபையின் 'நகரத்தை ஒளிமயமாக்குவோம் ' திட்டத்தின் கீழ் சபை எல்லைக் குட்பட்ட பகுதிகளில் வீதி விளக்கு பொருத்தப்படாத முக்கியமான இடங்களில் வீதி விளக்குகள் பொருத்துவதற்கு 2016 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவுத் திட்டத்தில் 10 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது. 400 வீதி மின் விளக்குள் கொள்வனவு செய்யப்பட்டு பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க அனைத்து வீதிகளிலும் இலங்கை மின்சார சபையின் ஒத்துழைப்புடன் பொருத்தப்பட்டுள்ளன.

பொருத்தப்பட்டுள்ள வீதி விளக்குகள் இரவு பகலாக ஒளிர்ந்த வண்ணம் காணப்படுகின்றன எனவும் வீதியைப் பயன் படுத்துவோர் காலையில் அவற்றை அணைக்க முன்வருவதில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

சபை இயங்கிய காலத்தில் உறுப்பினர்களின் வேண்டுகோளின் பிரகாரம் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டன. சபை கலைக்கப்பட்ட பின்னர் தத் தமது வீதிகளுக்கு வீதி விளக்குகளைப் பொருத்துமாறு பொதுமக்கள் வழங்கிய வேண்டுகோளையும் முறைப்பாடுகளையும் ஏற்று 2016 ஆம் ஆண்டுக்கான சபையின் உத்தேச வரவு செலவுத் திட்டத்தில் 10 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு மின்விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டன. மின்சார சபையின் உதவியுடன் புதிய இடங்களிலும் முன்னர் பொருத்தப்பட்ட இடங்களில் பழுதடைந்த விளக்குகளும் புதுப்பிக்கப்பட்டன.

பொருத்தப்பட்ட வீதி விளக்குகள் இரவு பகலாக ஒளிர்கின்றன. அந்தப் பகுதியில் உள்ள குடியிருப்பாளர்களை அழைத்து மின்சாரத்தைச் சேமிக்கும் வகையில் இரவு வேளைகளில் மட்டும் பயன்படுத்திவிட்டு காலையில் அணைக்கும் பொறுப்பை வழங்க வெண்டும் என்று நலன்விரும்பிகள் சபையில் வலியுறுத்தியுள்ளனர்.

நகரசபையின் 'நகரத்தை ஒளிரச் செய்வோம் ' திட்டத்தினை வெற்றிகரமாகச் செயற்படுத்த வரியிறுப்பாளர்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும். திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி வீதி விளக்குகள் கொள்வனவு மற்றும் பொருத்தும் பணிகள் போன்றவற்றுக்கு செலவழிக்கப்பட்டு விட்டது.– என்று நகரசபையின் செயலாளர் கா.சண்முகதாசன் தெரிவித்தார். (ற–9)

# ஈத் முபாரக் வாழ்த்திலும் அரசியல்

புனித ஹஜ் பெருநாள் கொண்டாட்டம் குதூகலமாக கிழக்கில் இடம் பெற்றுள்ள நிலை யில், பெருநாள் வாழ்த்துத் தெரிவிப்பதில் கூட அரசியல் தலை தூக்கியுள்ளது.

கல்முனைப் பிரதேசத்தில் ஒட்டப்பட்டுள்ள "ஈத்முபாரக்" வாழ்த்து சுவரொட்டிகள் மூன்று, முஸ்லிம் அரசியலுக்கு எடுத்துக் காட்டாகக் காணப்படுகின்றன.



"கிழக்குத் தலைமை வேண்டியா, வன்னியக் கரடியை வழிபடுகிறோம், காட்டிக் கொடுப்போர் இனம் காணப்படுவர்" தேசியப்பட்டியல் எமக்கான முகாந்திரமுதிசம், இல்லையென்றால் தலைபுரளும், ஈத் முபாரக்" "தேசியப்பட் டியல் தந்தால் ஹக்கீம் செங்கோல் சாணக்கியன், தேசியம் பற்றிச் சிந்தித்தால் ஹக்கீம் கொடுங்கோல் அரக்கன்" போன்ற வாசகங்கள் ஈத்முபாரக் வாழ்த்துச் சுவரொட்டிகளில் காணப்படுகின்றன. இந்த அரசியல் மோதல் கிழக்கு முஸ்லிம்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது. (ற–5–30)

# வல்லிபுர ஆலய மகோற்சவ முன்னாயத்த கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.16

வல்லிபுர ஆழ்வார் ஆலய மகோற்சவத்துக்கான முன்னாயத்த ஏற்பாட்டுக் கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி ஆலயத்தில் அமைந்துள்ள கண்ணன் மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கூட்டத்துக்கு சம்பந்தப்பட்ட அனைத்துத்திணைக்கள உத்தியோகத்தர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவுறுத்தியுள்ளார். வல்லிபுர ஆழ்வார் ஆலய மகோற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. (ற–ரி)

# ஆவணி மாத குளிர்த்தி

யாழ்ப்பாணம், செப்.16

ஸ்ரீ அண்ணமார் தேவஸ்தான ஆவணி மாத திருக்குளிர்த்தி நாளை 17 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதிகாலை 4.30 மணிக்கு அபிசேக பூசையும் முற்பகல் 11 மணிக்கு விசேட பூஜையும் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பெருமான் வீதி உலாவும் இடம்பெறும். (ற–ரி)

# எல்லை அத்துமீறல் தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்துக

## வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச சபையிடம் வலியுறுத்து

அச்சுவேலி, செப்.16

வலி.கிழக்குப் கோப்பாய் பிரதேச வளலாய் கிராமத்தின் எல்லையில் வலி. வடக்கு தெல்லிப்பழை பிரதேச சபை எல்லை மீறி வருகிறது என்று எழுப்பப்படும் குற்றச்சாட்டு தொடர்பாக மாவட்டத்தில் உரிய தீர்வு காணப் பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கும், பொதுமக்களும் உண்மை நிலை தெளிவுபடுத்தப்படவேண்டும்.

இவ்வாறு வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

வலி.கிழக்குப் பிரதேச செயலகத்தில் கடந்த மே மாதம் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வளலாயில் நடைபெற்ற எல்லை மீறல் சுட்டிக் காட்டப்பட்டது. வளலாய் மக்களின் காணிகள் பல வலி. வடக்கு மக்களின் மீள் குடியேற்றத்துக்குப் பயன்படுத்தப்பட்டமை தொடர்பாகப் பொது நிறுவனங்களின் பிரதிநிதிகளால் முறைப்பாடும் செய்யப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்வது, வலி. வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலரிடம் விவரங்களைக் கோரிப் பெற்று மேல் நடவடிக்கைகளை மேற்கொள்வது எனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பாகக் கடிதம் மூலம் வலி. வடக்குப் பிரதேச செய லகத்துக்குத் தெரிவித்துள்ளபோதிலும் வலி. வடக்கு தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் இருந்து உரிய விளக்கமோ பதிலோ கிடைக்கவில்லை எனத் தெரி விக்கப்பட்டது.

"இது மக்களோடு தொடர்பான பிரச்சினை. இரண்டு பிரதேச செயலகங்களுக்கு இடையே உள்ள எல்லை வகுப்பில் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படக்கூடாது. நிர்வாக மட்டத்தில் தீர்வு காணப்படவேண்டும்.

இரண்டு பிரதேச செயலகங்களுக்கும் இடையில் உள்ள எல்லை தொடர்பான பிரச்சினைக்கு இடம்பெயர்வுக்கு முந்திய நில அளவைப் படத்தை வைத்துத் தீர்வு காண வேண்டும். இந்த விடயத்தில் பிரதேசசெயலர், மேல் நடவடிக்கைகளை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கும்பொது மக்களுக்கும் உண்மைநிலையை தெளிவுபடுத்த வேண்டும் – என்றனர்.

இந்தவிடயம் தொடர்பான மேலதிக தகவல் விபரங்களைசெயற்பாடுகளை அடுத்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் பிரதேச செயலர் தெரிவிக்க வேண்டும் எனக் கூறப்பட்டது . (ற–11)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



செல்வி அமிர்தினி கனகரட்ணம்
(அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை)

மண்ணில்
06.01.1982

விண்ணில்
17.08.2016

கடந்த 17.08.2016 அன்று சிவபதமடைந்த எமது மகள் அவர்கள் நோயுற்றிருந்த வேளையில் சிகிச்சையளித்த யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர் கள் மற்றும் வைத்தியசாலை அலுவலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் அன்னார் இறைபதம் அடைந்தவேளை அனுதாபம் தெரிவித்து மலர் வளையம் வைத்து கண்ணீர் அஞ்சலி செலுத்திய யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், அலுவ லக உத்தியோகத்தர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்களுக்கும், பளை / மத்திய கல்லூரி அதிபர், ஆசிரியர்களுக்கும், மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவர்களுக்கும், யா/ தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 2000 ஆம் ஆண்டு உயர் தர பழைய மாணவர்களுக்கும், தென்னை அபிவிருத்தி மற்றும் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் யாழ்.பிராந்திய பணிப்பாளர் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களுக்கும், வீரபத்திரர், குருநாதர் ஆலய தொண்டர் சபையினர்கள், மருதனார்மட சந்தை வெற்றிலை வியாபாரிகளுக்கும், அஞ்சலி உரை நிகழ்த்திய பிரம்ம குமாரிகள் ராஜயோக நிலையத்தினருக்கும், தொலைபேசி மூலமும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் மூலமும் பத்திரிகை மூலமும் அனுதாபங்களைத் தெரிவித்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் இறுதிக் கிரியையின் போது பல வழிகளிலும் உதவிய அன்புள்ளங்களுக்கும் உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (16.09.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

[illegible],
வித்தகபுரம், தெல்லிப்பழை.

குடும்பத்தினர்.

(J 4596) (13.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச சேவை தொழிலாளர் போராட்டம் தொடர்கிறது

## கோரிக்கைகள் நிறைவேறும் வரை

கொழும்பு, செப். 16

தமது கோரிக்கைகள் நிறைவேறும்வரை தமது போராட்டத்தை நிறுத்தப் போவதில்லை என்று அரசசேவைதொழிலாளர்கள் திணைக்கள அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ந்து தமது போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று அந்தச் சங்கத்தின் தலைவர் ஐ.சி.கமகே தெரிவித்தார்.

அரச சேவை தொழிலாளர்கள் திணைக்கள அதிகாரிகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முதல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொழிலாளர் திணைக்களத்தின் ஆணையாளர் சாந்தனி அமரதுங்க வெளியிட்ட அறிக்கையில், தொழில் திணைக் கள அதிகாரிகளின் விடுமுறைகள் அனைத்தும் உடன் நீக்கப்பட்டுள்ளதாக கூறியிருந்தார்.

இவர்களின் வேலை நிறுத்தம் காரணமாகப் பொது மக்களின் உரிமைகள் மீறப்பட்டிருப்பதாக கூறிய அவர், அனைத்து ஊழியர்களும் நேற்றைய தினம் கடமைக்கு சமுகமளிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

தமது விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டிருப்பதை ஏற்றுக் கொள்வதில்லை என்றும், கோரிக்கைகள் நிறைவேறும் வரை தொடர்ந்து வேலை நிறுத்தம் முன்னெடுக்கப்படும் என்றும் அரச சேவை தொழிலாளர்கள் திணைக்கள அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் ஐ.சி.கமகே தெரிவித்தார். (த-5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சிமாற்றம் நிகழாதிருந்தால் நிலமை என்ன?

## தன்னை விமர்சிப்பவர்களிடம் கேள்வி எழுப்புகிறார் ஜனாதிபதி

கொழும்பு, செப். 16

அரசையும், என்னையும் விமர்சிக்கின்ற எல்லோரிடமும் ஒரு கேள்வியை முன்வைக்க விரும்புகின்றேன். ஜனவரி 8 ஆம் திகதி ஆட்சிமாற்றம் நிகழ்ந்திருக்காவிட்டால் நாட்டின் நிலமை எப்படிப்பட்டதாக இருந்திருக்கும்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மலித் ஜயதிலக்கவினால் எழுதப்பட்ட 'நான் கண்ட ஜனவரி 08' நூல் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் பிற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கொழும்பு கிங்ஸ்பெரி விடுதியில் இடம்பெற்றது. இங்கு கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

ஜனவரி 08 மாற்றம் நிகழ்ந்திருக்காவிட்டால் இன்று நாட்டின் நிலமை எத்தகையதாக இருந்திருக்கும் இந்தக் கேள்வியை அரசையும், என்னையும் விமர்சிக்கின்ற எல்லோரிடமும் கேட்க விரும்புகின்றேன்.

இந்த அனுபவங்களின்றிச் சிலர், நாடு எதிர்நோக்கியுள்ள பெரும் பொருளாதார நெருக்கடி மற்றும் பன்னாட்டு ரீதியாக எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதற்கு அரசு எடுத்து வருகின்ற செயற்பாடுகளை விமர்சித்து வருகின்றனர். விமர்சனங்களை முன்வைப்பதை விடுத்து அவற்றுக்கு அவர்களிடம் உள்ள தீர்வுகளை முன்வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

ஜனவரி 8 ஆம் திகதி கிடைத்த வெற்றியின் பெறுபேறுகளை நாட்டுக்கு பெற்றுக் கொடுக்க அர்ப்பணிப்புடன் செயற் படுவது அந்த வெற்றிக்காக உழைத்த எல்லோருடையதும் பொறுப்பாகும். நாட்டுக்காக இன்று நாம் செய்யவேண்டிய பணிகளைச் செய்வதற்கு ஒன்றிணையுமாறு ஜனவரி 8 வெற்றிக்கு பங்களித்த, பங்களிக்காத எல்லோருக்கும் அழைப்பு விடுக்கின்றேன்.

ஜனவரி 8 மாற்றத்தை உண்மையாகவும் யதார்த்தமாகவும் கண்டு அது குறித்து எழுதிய ஆயிரக்கணக்கானவர்களில் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரே அதனை மிகச் சரியாக எழுதியுள்ளார்கள். சமூக நீதி, சுதந்திரம், ஜனநாயகம் தொடர்பாகவும் ஊழல் மோசடிகள், அநீதிகள் தொடர்பாகவும் எழுதுகின்ற பலருக்கு ஜனவரி 8 மாற்றம் குறித்து உண்மையாக எழுதுவதற்கு இன்னும் முடியாமல் இருப்பது குறித்து கவலையடைகின்றேன்.

ஜனவரி 8 மாற்றம் தொடர்பான பல உண்மைகள் இன்னும் மறைந்திருக்கின்றன. அவற்றை அச்சமின்றி வெளிக்கொண்டு வருவதற்கு 'நான் கண்ட ஜனவரி 8' நூலின் மூலம் மலித் ஜயதிலக்க எடுத்துள்ள முயற்சியை நான் பாராட்டுகின்றேன்.

ஜனவரி 8 மாற்றம் அரசியலில் எவ்வளவு தூரம் சிக்கலானதொன்று என்பதும் ஆய்வு செய்யப்பட வேண்டியது. அது பற்றி அறிந்துள்ள எல்லோருக்கும் நன்கு தெரியும். அந்த மாற்றம் தொடர்பாக பேசப்பட வேண் டியவை பேசப்படவேண்டிய வர்களால் பேசப்படுவது இன்று மிகவும் முக்கியமாகும் - என்றார் ஜனாதிபதி. (த-5)

# அணுப் பரிசோதனை; இலங்கை கண்டனம்

கொழும்பு, செப். 16

வடகொரியா அணுப் பரிசோதனை மேற்கொண்டமை தொடர்பில் இலங்கை அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

கடந்த ஒன்பதாம் திகதி வடகொரியா ஐந்தாவது அணுப் பரிசோதனையை மேற்கொண்ட நிலையில் அயலுறவுத்துறை அமைச்சு கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளது.

இரண்டாவது அணுப் பரிசோதனையை வடகொரியா நடப்பு ஆண்டு மேற்கொண்டுள்ளதாக அயலுறவுத்துறை அமைச்சு கூறியுள்ளது.

கொரியத் தீபகற்பத்தின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகளைத் தவிர்ப்பதுடன், பன்னாட்டு கடப்பாடுகளுக்குக் கட்டுப்பட்டுச் செயற்படவேண்டும் எனவும் வடகொரியாவை இலங்கை கோரியுள்ளது.

பெலஸ்ரிக் ரக ஏவுகணை மூலம் செலுத்தக் கூடிய அணுகுண்டைத் தாம் வெற்றிகரமாகப் பரிசோதனை செய்துள்ளதாகக் கடந்த வெள்ளிக்கிழமை வடகொரியா அறிவித்திருந்தது.

இந்த அணுகுண்டுப் பரிசோதனை தொடர்பில் வடகொரியாவின் நெருக்கிய நட்பு நாடு உள்ளிட்ட பல்வேறு உலக நாடுகள் கடும் கண்டனங்களை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# ஈழப் போராட்ட வரலாற்றில் அகிம்சையின் ஒரே வடிவம் திலீபன்



ந.லோகதயாளன்

தமிழீழவிடுதலைப்போராட்ட வரலாற்றில் அகிம்சைப் போராட்ட வடிவமான உணவு ஒறுப்புப் போராட்டத்தை முதன் முதலில் நடத்தி முடித்த தியாகி திலீபனின் போராட்டம் நடைபெற்று நேற்று 29 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அப்போதைய யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த இராசையா பார்த்தீபன் என்னும் திலீபன் 1987 ஆம் ஆண்டு நல்லூர் வீதியில் தொடர்ச்சியாக 12 நாள்கள் உணவு ஒறுப்புப் போராட்டத்தை நடத்தினார்.

தமிழீழ மண் முழுவதும் இந்திய இராணுவம் அமைதிப்படை என்னும்பெயரில்நிலைகொண்டிருந்த காலத்திலேயே தியாக தீபம் திலீபனின் போராட்டம் நடந்தது.

தமிழ் மக்களுக்கான தாயகத்தில் தமிழ் மக்களின் இருப்பு உத்தரவாதப்படுத்தப்படும் என்று வழங்கிய உறுதிமொழியின் அடிப்படையில் புலிகளின் வசம் இருந்த பெருமளவு ஆயுதங்கள் கையளிக்கப்பட்டன.

இருப்பினும் இதற்குப் பிற்பாடும் இலங்கை அரசு திருகோணமலையில் மிக வேகமாகச் சிங்களக் குடியேற்றங்களை நிறுவியது.

இதே காலத்தில் ஈ.என்.டி.எல்.எவ் அமைப்பை உருவாக்கி புலிகளின் முக்கிய உறுப்பினர்களையும் சுட்டுக் கொன்றது. இதன் விளைவாகவே புலிகள் யாரை நம்பி ஆயுதங்களை ஒப்படைத்தனரோ அவர்களிடமே நீதி கேட்க விழைந்தனர். 1987 ஆம் ஆண்டு திலீபன் தங்கியிருந்த கொக்குவில் பொற்பதி வீதியில் அமைந்திருந்த இல்லத்தில் ஓர் இரவு புலிகளின் உறுப்பினர்களுக்கு அவசரக் கூட்டம் ஒன்று இடம்பெற்றது. இந்த வீடே பின்னர் 2002 ஆம் ஆண்டு சமாதான காலத்தில் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை செயலகமாக விளங்கியது.

அந்தக் கூட்டத்தில் புலிகளின் அப்போதைய உறுப்பினர்களான றூட் சிறி, ரமேஸ் மாஸ்ரர், ராஜன், நவீன், மாறன், பிரசாத் உள்ளிட்ட பலர் நிலமைகள் தொடர்பில் கூடி ஆராய்ந்தனர். இருப்பினும் இரவு உறுதியான முடிவுகள் எவையும் எட்டப்படவில்லை. அதிகாலையில் எழுந்த திலீபன் அங்கிருந்த ராஜனை (தவ்வல்) எழுப்பி உடன் புறப்படு என அழைத்துச் சென்றார்.

அவ்வாறு அழைத்துச் சென்றது மூத்த எழுத்தாளரும் தமிழ் உணர்வாளருமான மு.திருநாவுக்கரசுவிடம். அங்கு சென்று தனது சிந்தனையை முதலில் தெரிவித்து அதற்கான ஆலோசனையைப் பெற்றார் திலீபன். அவ்வாறு உரையாடும்போதே திருநாவுக்கரசு திலீபனிடம், இந்த முயற்சிக்கு இந்தியா சாதகமான பதிலை வழங்குமா என்பது சந்தேகம். அதிலும் குறிப்பாக டிக்சிற் (இலங்கைக்கான இந்தியாவின் அப்போதைய தூதுவர்) கண்டு கொள்ளமாட்டார். நாம் அநியாயமாக உங்கள் உயிரை இழக்கவேண்டிவரும் எனத் தெரிவித்திருந்தார். ஆயினும் திலீபன் மனம் தளரவில்லை. இதனையடுத்து மோட்டார் சைக்கிளில் அங்கிருந்து ராஜனையும் அழைத்துக் கொண்டு முற்பகல் 11 மணியளவில் கந்தர்மடம் பகுதியில் உள்ள பேபி ஸ்ரூடியோவுக்கு அருகில் இருந்த ஒழுங்கையில் உள்ள மன்மதன் வீட்டுக்குச் சென்றார். ராஜன் வீட்டின் முன்னால் அமர்ந்திருக்க வீட்டின் உள்ளே இரு மணிநேரம் பேச்சுக்கள் இடம்பெற்றன.

அந்த வீட்டின் அறையில் பேச்சுக்கள் இடம்பெறும் சமயம் அங்கு ஓர் தட்டச்சு இயந்திரம் சடசடக்கின்றது. அதனை இயக்கிகொண்டிருந்தவர் தேவர். இவ்வாறு இரு மணிநேரச் சந்திப்பின் நிறைவில் வெளியே வந்த திலீபன் ராஜனை அழைத்து மோட்டார் சைக்கிளில் ஏறும்படி கூறும் போது புன்னகையுடன், உணவு ஒறுப்புப் போராட்டத்துக்குத் தலைவர் அனுமதி வழங்கிவிட்டார் - என்றார்.

இவ்வாறுதான் திலீபனின் உணவு ஒறுப்புப் போராட்டம் கருக்கட்டியது. இந்தச் சம்பவம் நடைபெற்று ஓரிரு தினங்களின் பின்னர் தான், திலீபன் நல்லூர் வீதியில் போராட்டம் நடத்தத் தொடங்கினான்.




## புதுவிதியாக்கு முருகா

தேரோடிக் களைத்தனையோ
தீர்த்தமாட வா முருகா,
தீராத நோயெல்லாம்
தீர்த்திடுவாய் முருகா,
போரோடு நொந்த மண்ணைப்
புதுவிதியாக்கு முருகா,
புண்ணிய வாழ்வுதர
பூம்புனலில் ஆடிவா
- கே.எஸ்.சிவஞானராஜா

## தாயாய் பசிதீர்ப்பான் முருகன்

சந்நிதியானை, எண்ணி வாழ்ந்தால்,
வாழ்க்கை எல்லாம் சுகமாகும்,
அவன் தேரில் வரும், காட்சி கண்டால்,
கல்லு மனமும் கனியாகும்,
நாடிவரும், அன்பர்க்கு முருகன்
வான் மழை போல, அருள் கொடுப்பான்,
தன்னைத் தேடிவரும் யாவர்க்கும் முருகன்,
தாயாய் இருந்து பசி தீர்ப்பான்.

உன் கோயில் மணி ஒலிக்கையிலே,
மன துன்பங்கள், யாவும் விலகக் கண்டேன்
அரோகரா, என்ற ஓசையிலே, மக்கள் எல்லாம்
ஒன்றாய் இணையக் கண்டேன்
கர்ப்பூர ஒளியினிலே,
நான் என்ற மமதை அழிய கண்டேன்,
வேலுடன் உன்னைப் பார்க்கையிலே,
என் கண்கள் கலங்கி, என்னை மறந்தேன்

விரதம் இருந்துன்னை, நினைக்கையிலே,
ஏழையின் பசியின் கொடுமை, கண்டேன்
பலவிதமான காவடியில்
உன் பக்தர்கள் கொண்ட பாசம் கண்டேன்
உலகெங்கும் இருந்து வரும் கூட்டத்திலே,
உன்புகழின் மேன்மையை அறிந்து கொண்டேன்
அன்னதானம் வழங்கையிலே,
உன் பக்தர்கள் பசி போக்கும், புனிதம் கண்டேன்.

த. விமலசிங்கம்
வீமன் காமம், தெல்லிப்பழை.

# எரிபொருள்களுக்கான விலைச் சூத்திரம் தயார்

## *அமைச்சர் சந்திம தெரிவிப்பு*

கொழும்பு, செப். 16

எரிபொருள்களுக்கான விலைச் சூத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. நிதியமைச்சு உட்பட பல்வேறு தரப்பினருக்கிடையே பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது. இறுதி முடிவு விரைவில் வெளியாகும். இவ்வாறு அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

'விட்போல்' என்ற எரிபொருள் விநியோகிக்கும் நிறுவனம் இலங்கையில் கறுப்புப் பட்டியலிடப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தை எண்ணெய் விநியோகிக்கும் பட்டியலில் மீளவும் இணைத்து கொண்டது தொடர்பான விவரங்கள் எனக்குத் தெரியாது. எரிபொருள் கேள்விக் கோரலுக்கான குழுவே இதனைத் தீர்மானிக்கும். எனவே இது தொடர்பில் முழுமையான அறிக்கை கோரியுள்ளேன்.

அதேவேளை எரிபொருள்களுக்கான விலைச் சூத்திரத்தை நான் தயாரித்து விட்டேன். இது தொடர்பில் நிதியமைச்சு உட்பட இதனோடு தொடர்புபட்ட திணைக்களங்களுடன் பேச்சு இடம்பெற்று வருகிறது. விரைவில் இறுதி முடிவு அறிவிக்கப்படும்.

எண்ணெய் விநியோகிக்கும் குழாய் திருத்தப் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நாடு முழுவதும் இது முன்னெடுக்கப்படும். 4 நாடுகளில் இது தொடர்பான கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

எண்ணெய்விநியோகக்குழாய்களின்மேலேசட்டவிரோதமாக குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை அகற்றப்படும். அதன்போது அவர்களுக்கு வீடுகள் வழங்கப்படும். இது தொடர்பில் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவுடன் பேச்சு நடத்தியுள்ளோம். இவர்களுக்கு நட்டஈடு வழங்கவும் வழங்குவதற்கும் நிதி அமைச்சர் ரவிகருணாநாயக்க இணக்கம் தெரிவித்துள்ளார் - என்றார். (த-5)



செல்வச்சந்நிதியானுக்கு
இன்று (16.09.2016) வெள்ளிக்கிழமை
16 ஆம் திருவிழா
தீர்த்தத் திருவிழா

திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :

SB TRAVELS AND TOURS (PVT) LTD
212, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Indian Visa Online
விண்ணப்பப் படிவம்
பூர்த்தி செய்வதற்கு
100/= மட்டுமே.

இங்கு அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்களையும், வீசாக்களையும் மிகச் சிறந்த முறையில பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவுக்கான வீசாக்கள் வெகு விரைவிலும், மலேசியா மற்றும் பல நாடுகளுக்கான விசாக்களும் பயணக்காப்புறுதி (Travel Insurance), Hotel முன் ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

ஐரோப்பிய நாடுகளுக்கான பயணச்சீட்டில் விசேட விலைக்கழிவுகளும், விசா ஆலோசனைகளும் வழங்கப்படும்.

021 222 7 111
021 222 7 666
021 222 8 555
021 222 9 555
076 691 1080,81,82,83

sbtravels212@gmail.com
sbtravelsjaffna@gmail.com
www.sbtravels.lk / sbairfares.com

(C/25101) (10.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழ் மக்களின் உரிமைகளை உறிஞ்சிக் குடிக்கும் போக்கு ஏன்...?

**நே**ற்று வியாழக்கிழமை, இராசையா பார்த்திபன் என்ற நாமம் கொண்ட தியாகி திலீபனின் 29ஆவது நினைவு தினம். தமிழ் மக்கள் வாழும் நாடுகளில் அவனுக்கு உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

1987ஆம் ஆண்டு இலங்கைக்குள் - மிகக் குறிப்பாக வடக்கு, கிழக்கில்- ஆக்கிரமிப்புப் படையாக நிலை கொண்டு அட்டூழியம் புரிந்த இந்திய இராணுவத்துக்கு எதிராக, வடக்கில் கிளர்ந்து எழுந்து அறப்போராட்டம் நடத்திய திலீபனின் நாமம் இலங்கை நாட்டின் சரித்திரத்தில் ஊன்றிப் பதியப்பட வேண்டிய ஒன்றாகும். அதுமட்டுமன்றி இலங்கை வாழ் தமிழ் மக்களின் நெஞ்சங்களை உருக்கிய வரலாறு அது.

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணா நோன்பிருந்து தனது உயிரை உருக்கி மாய்ந்த செம்மல் அவன்.

- பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழர்களை- கைதிகளை விடுவிக்க வேண்டும்.
- தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்படும் சிங்களக் குடியேற்றத்தை உடனடியாக நிறுத்த வேண்டும்.
- வடக்கு, கிழக்கில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவதை உடன் நிறுத்த வேண்டும்.
- இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையின் கீழ் ஊர்காவற்படை என்ற தொகுதியினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களைத் திரும்பப் பெற வேண்டும்.
- தமிழர்களின் கிராமங்களில் உருவாக்கப்பட்ட பொலிஸ் நிலையங்கள் மூடப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளையும், மேலும் சில கோரிக்கைகளையும் வலியுறுத்தி திலீபன் உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்தான் என்பதும் தமிழர் போராட்டத்தின் கருக்களாக அமைந்தன எனலாம்.

ஆனால், இருபத்தொன்பது (சுமார் மூபத்து) ஆண்டுகள் கடந்து சென்ற போதிலும், அவை கொழும்பு அரசுகளால் முன்னெடுக்கப்படவில்லை; விரித்தும் பார்க்கப்படவில்லை!

அண்ணளவாக, முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் திலீபன் தனது உயிரைத் துறந்த பின்னரும், வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள், தமக்குரிய அழிக்க முடியாத உரிமைகளை முழுமையாகப் பெறுவதற்கான கீற்றுத்தானும் தென்படவில்லை.

ஆயுதங்கள் மௌனித்த பின்னரும் கூட திலீபன், அப்போதைய அரசிடம் கேட்ட கோரிக்கைகள் மண்ணுக்குள் புதைக்கப்பட்ட நிலையே உயர்ந்து நிற்கின்றது.

சுமார் முப்பது ஆண்டுகள் கழித்தும், தமிழ் மக்களுக்கு உரிய (தார்மீக) உரிமைகள் குறித்து நல்லாட்சி அரசேனும் சுண்டிப் பார்க்குமா என்பது ஒரு சதவீதமேனும் இதுவரை வெளிச்சமாகத் தெரியவில்லையே!

யாரொடு நோவோம், யார்க்கெடுத்துரைப்போம் என்ற நிலை மேலும் பருத்துப் பெருத்து, தமிழ் மக்களுக்குரிய உரிமைகளை உறிஞ்சிக் குடிக்கும் நிலையே தொடர்கிறது...!

# வடக்கு–கிழக்கு இணைப்புக்கு எதிரான அரசின் ராஜதந்திர நகர்வு– "சுதந்திர கிழக்கு

**சுதந்திர கிழக்கு என்ற தொனிப்பொருளின்கீழ், தொடர்ந்தும் விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அறிய முடிகின்றது. இது தவிர, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான தமிழ் அரசியல் புள்ளிகளையும் இந்த வேலைத் திட்டத்துக்குள் உள்வாங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அறியக் கிடைத்துள்ளது.**

எம்.ஐ.முபாறக்

**இ**லங்கையின் அரசியல் தீர்வு என்ற விடயத்தை நோக்கும்போது, அதில் இருக்கின்ற மிகப் பெரிய சிக்கலான விடயம், வடக்கு– கிழக்கு இணைப்புத்தான். வடக்கு– கிழக்கை இணைக்காமல் வழங்கப்படும் தீர்வு தமக்குத் தேவை இல்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கூறுகின்றது. ஆனால், அரசோ, அப்படி இணைக்க முடியாது என்ற நிலைப்பாட்டில் உள்ளது. மறுபுறம் சிங்களவர்களும் கிழக்கில் உள்ள முஸ்லிம்களும் இணைப்பை எதிர்க்கின்றனர்.

ஆட்சி மாற்றத்துக்கு வடக்கு- கிழக்கு தமிழர்கள் பெரும் பங்களிப்பு வழங்கியமைக்காகவும், தமிழரின் பிரச்சினையை இனியும் நீடிக்க விடக்கூடாது என்ற காரணத்துக்காகவும் அரசியல் தீர்வொன்றை முன்வைக்க வேண்டிய கட்டாயத்துக்குள் இந்த அரசு தள்ளப்பட்டுள்ளது.

அவ்வாறு முன்வைக்கப்படும் அரசியல் தீர்வு தமிழர்களின் பிரச்சினையை முழுமையாகத் தீர்க்கவும் வேண்டும். ஏனைய சிங்கள–முஸ்லிம் மக்களைப் பாதிக்கவும் கூடாது. அவ்வாறான ஒருதீர்வு அமைகின்றபோதுதான் முழு நாடும் திருப்தியடையக் கூடியதாக–அரசின் ஆயுள் காலத்தை அதிகரிக்கக் கூடியதாக இருக்கும்.

இந்த அடிப்படையில் பார்க்கும் போது, வடக்கு–கிழக்கு இணைப்பு, காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் அடங்கலான சமஷ்டி முறைத் தீர்வே தமிழரின் பிரச்சினைகளை முழுமையாகத் தீர்க்கும் என்று தமிழர்கள் வாதிடுகின்றனர். ஆனால், தமிழர் தரப்பின் இந்த நிலைப்பாடானது, நாட்டை இரண்டாகப் பிரித்து தனித் தமிழீழத்தை உருவாக்கக் கூடியது என்ற ஒரு கருத்து சிங்கள மக்கள் மத்தியில் நிலவத் தொடங்கியுள்ளது. இந்தக் கருத்தை இப்போது மகிந்த தரப்பு, சிங்கள மக்கள் மத்தியில் ஆழமாகப் பரப்பி வருவதால், தமிழர்களுக்கு நியாயமான தீர்வை வழங்க அரசு விரும்பினாலும், அது முடியாத காரியமாகவே இருக்கின்றது.

இந்தக் கருத்து ஆழமாக வேரூன்றிய நிலையில், தமிழர்கள் கேட்கும் அந்தத் தீர்வை அரசு கொடுக்குமாக இருந்தால், அரசின் இருப்புக்கே அது ஆபத்தாக அமைந்துவிடும் என்று அரசு கருதுகின்றது. இதனால் மூவின மக்களும் முரண்படும் விடயங்களை நீக்கிவிட்டு, பதிலுக்கு அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயங்களை தீர்வுப் பொதிக்குள் உள்ளடக்குவது பற்றி அரசு ஆலோசிக்கின்றது.

அந்த வகையில், சிக்கலான விடயமாக இருப்பது வடக்கு- கிழக்கு இணைப்புத்தான். இதை நிராகரித்து தமிழர்களையும் பகைத்துக்கொள்ள முடியாது. இதை நிறைவேற்றி சிங்கள- முஸ்லிம் மக்களையும் பகைத்துக்கொள்ள முடியாது என்ற நிலையில் அரசு இருப்பதால், இந்தப் பிரச்சினையை வேறொரு விதத்தில் கையாள்வதற்கு அரசு முடிவெடுத்துள்ளது.

இணைப்புக்கு எதிரான மக்கள் குரலை, கிழக்கு மண்ணில் வலுப்படுத்துவதுதான் அந்தத் திட்டம். இதன் மூலம் வடக்கு-கிழக்கு இணைப்பு நிராகரிக்கப்படும் போது, அது அரசின் முடிவல்ல; கிழக்கு மக்களின் முடிவு என்றும், அந்த மக்களின் விருப்பத்தை மீறி எதையும் செய்ய முடியாது என்றும் கூறி, இந்த இணைப்பைத் தவிர்ப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

அரசுடன் இணைந்து செயற்படும் முஸ்லிம் கட்சிகள் அரசின் இந்த ராஜதந்திர நகர்வுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளன. அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிர, ரிஷாத் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், முன்னாள் அமைச்சர் அதாவுல்லாவின் தேசிய காங்கிரஸ் மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய கட்சிகள் இப்போது களத்தில் குதித்துள்ளன.

"சுதந்திர கிழக்கு" என்ற பெயரில் வடக்கு-கிழக்கு இணைப்புக்கு எதிரான இந்தப் போராட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதன் முதலாவது கூட்டம் கடந்த வாரம் ஏறாவூரில் இடம்பெற்றது. அதாவுல்லா உள்ளிட்ட மேற்படி கட்சிகளின் பிரமுகர்கள் இதில் கலந்துகொண்டு இணைப்புக்கு எதிராக உரையாற்றினர்.

'சுதந்திர கிழக்கு' என்ற தொனிப் பொருளின் கீழ் தொடர்ந்தும் விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று அறியமுடிகின்றது. இதுதவிர, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான தமிழ் அரசியல் புள்ளிகளையும் இந்த வேலைத் திட்டத்துக்குள் உள்வாங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அறியக் கிடைத்துள்ளது.

ஆகவே, இந்த விவகாரம் கிழக்கில் ஆழமாக வேரூன்றக்கூடிய சாத்தியங்கள் அதிகமாக இருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. அரசின் இந்த ராஜதந்திர நகர்வை முறியடிப் பதற்கு தமிழ்த் தரப்பு எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கப் போகின்றது என்ற கேள்வி இன்று அனைவராலும் முன்வைக்கப்படுகின்றது.

வடக்கு-கிழக்கு இணைப்பை கிழக்கு முஸ்லிம்கள் எதிர்ப்பதற்குக் காரணம், கிழக்கில் முஸ்லிம்களின் விகிதாசாரம் குறைந்துவிடும் என்பதனாலாகும். அவ்வாறு குறையும்போது முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராக வரமுடியாது. முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராக வரக்கூடிய வாய்ப்பு கிழக்கு மாகாணத்தில் மாத்திரமே இருப்பதால், அந்த அரசியல் அந்தஸ்தை இழப்பதற்கு முஸ்லிம்கள் விரும்பவில்லை. இதன் காரணமாகத்தான் முஸ்லிம்கள் வடக்கு-கிழக்கு இணைப்பை நிராகரிக்கின்றனர்.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ, வடக்கு-கிழக்கை இணைத்து தமிழ்-முஸ்லிம்கள் ஒன்றிணைந்து ஆட்சி செய்யும் ஒரு பூமியாக மாற்றுவோம்-தமிழ் பேசும் மக்களின் தாயகமாக மாற்றுவோம் என்று கூறுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவ்வாறானதொரு நிலை ஏற்படும்போது, இப்போது இருக்கின்ற முஸ்லிம்களின் அரசியல் அந்தஸ்து எவ்வாறு பாதுகாக்கப்படும் என்ற கேள்வி முஸ்லிம்களின் தரப்பில் இருந்து முன்வைக்கப்படுகின்றது.
இந்த இணைப்பை எதிர்ப்பதற்கு முஸ்லிம்கள் முன்வைக்கும் காரணம் இதுவாக இருக்கின்றபோது, சிங்களவர்கள் இதை எதிர்ப்பதற்கு வேறு காரணம் உண்டு. வடக்கு- கிழக்கு இணைப்பு நிச்சயம் தமிழீழம் என்ற தனி நாட்டின் உருவாக்கத்துக்கே இட்டுச் செல்லும் என்பதுதான் சிங்களவர்கள் கூறும் காரணமாக இருக்கின்றது.
இவ்வாறான கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் உரிய பதிலை வழங்காது-இது தொடர்பில் அந்தந்தச் சமூகங்களுடன் பேசாது, வெறுமனே வடக்கு-கிழக்கு இணைப்பு என்ற கோசத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைப்பது எவ்வளவு தூரம் வெற்றியளிக்கும் நகர்வாக இருக்கும் என்று சொல்ல முடியாது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கையை நியாயப்படுத்தி-அந்தக் கோரிக்கைகளை விளக்கி ஏனைய இனங்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் பொறிமுறை ஒன்றை கூட்டமைப்பு இதுவரையும் தொடங்காதது ஏன் என்ற கேள்வியும் இன்று மக்களால் முன்வைக் கப்படுகின்றது. வெறுமனே கோரிக்கைகளை மாத்திரம் முன் வைத்துவிட்டு, அதற்கான நியாயங்களை மக்களுக்கு விளக்கிக்கூறாமைதான், ஏனைய இனத்தவர்கள் கூட்டமைப்பின் கோரிக்கைகளை நிராகரிப்பதற்குக் காரணம் என்று சொல்லலாம்.
தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசியல் தீர்வொன்று அவசியம் என்ற நிலைப்பாட்டில் இந்த நாட்டு மக்கள் அனைவரும் உள்ளனர். அதற்காக இல்லாத பிரச்சினைகளுக்கும் தீர்வை வழங்கி புதிய பிரச்சினைகள் உருவாகிவிடக்கூடாது என்பதில் அவர்கள் உறுதியாக இருக்கின்றனர்.
அந்த வகையில், தமிழ்த் தரப்புக் கேட்கும் வடக்கு-கிழக்கு இணைப்பு, காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் தமிழரின் பிரச்சினைக்கான தீர்வு அல்ல என்றும், இவை இல்லாத பிரச்சினைகளுக்காகக் கோரப்படும் தீர்வுகள் என்றும் -சிங்களவர்கள் கருதுகின்றனர். இதனால்தான் இந்தக் கோரிக்கைகளை அவர்கள் நிராகரிக்கின்றனர். உண்மையில் அவர்கள் அவ்வாறு கருதுவது சரியா?

> வடக்கு-கிழக்கு இணைப்பை கிழக்கு முஸ்லிம்கள் எதிர்ப்பதற்குக் காரணம் கிழக்கில் முஸ்லிம்களின் விகிதாசாரம் குறைந்துவிடும் என்பதனாலாகும். அவ்வாறு குறையும்போது முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராக வரமுடியாது. முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராக வரக்கூடிய வாய்ப்பு கிழக்கு மாகாணத்தில் மாத்திரமே இருப்பதால், அந்த அரசியல் அந்தஸ்தை இழப்பதற்கு முஸ்லிம்கள் விரும்பவில்லை. இதன் காரணமாகத்தான் முஸ்லிம்கள் வடக்கு-கிழக்கு இணைப்பை நிராகரிக்கின்றனர். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ, வடக்கு-கிழக்கை இணைத்து தமிழ்-முஸ்லிம்கள் ஒன்றிணைந்து ஆட்சி செய்யும் ஒரு பூமியாக மாற்றுவோம்-தமிழ் பேசும் மக்களின் தாயகமாக மாற்றுவோம் என்று கூறுகின்றது.

இந்தக் கோரிக்கை இல்லாத பிரச்சினைகளுக்கான தீர்வா? அல்லது இருக்கின்ற பிரச்சினைகளுக்கான தீர்வா? என்று தமிழ் தரப்பு ஏனைய இன மக்களுக்கு விளக்கிக்கூற வேண்டும்.
அவ்வாறு இல்லாதபட்சத்தில், தமிழர் தரப்பின் கோரிக்கைகள் தொடர்ந்து நிராகரிக்கப்படவே செய்யும். அந்த நிலையில், அரசின் 'சுதந்திர கிழக்கு' என்ற வேலைத் திட்டமும் வெற்றியடைந்துவிடும். இதை முறியடிக்க கூட்டமைப்பு என்ன செய்யப்போகின்றது என்று அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றனர்.

## பொது மக்களது சேவைக்கான காணி நன்கொடை சமூக நன்மைக்கு நற்பயன் அளிப்பதே

நீண்ட காலமாக தமிழ் மக்களோடு மக்களாக சிறந்த சேவையை ஆற்றிவருவோரில் சுகாதார சேவையினரும் உள்ளடங்குவர். இந்தச் சேவையில் பொதுச்சுகாதாரப் பணிகளை களத்தில் மிகத்திறம்பட ஆற்றியதால் எம்மக்கள் அடைந்த நன்மைகள் பற்பல. தமது சேவையைத் திறம்பட ஆற்றிவரும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் குடும்பநல உத்தியோகத்தர்கள், பொதுச்சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்கள் போன்றோரின் பணிகள் பாராட்டுக்குரியவை. ஆனால் நீண்டகாலமாக பணியாற்றிவரும் இவர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் காணப்படும் குறைபாடுகளில் பிரதானமாக நிரந்தரமான பயிற்சி நிலையம் ஒன்று இல்லாத நிலை மனவருத்தத்தை அளிக்கின்றது.
70களில் தெல்லிப்பழைப் பகுதியில் குடும்ப நல உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு வந்தது. 1997இல் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களுக்கான பயிற்சி நிலையங்கள் யாழ்ப்பாணம், குருநாகல், மட்டக்களப்பு, கடுகன்னாவ, காலி ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்பட்டன. அந்தக்காலகட்டத்தில் யாழ்ப்பாணப் பயிற்சி நிலையம் நடமாடும் பயிற்சி நிலையமாகவே இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.
2005க்குப் பின்னர் 800 இற்கு மேற்பட்டவர்களை பயிற்றுவித்துள்ள யாழ்ப்பாணத்துப் பயிற்சி நிலையம் மட்டும், தற்காலிகமாக பண்ணை மார்பு நோய் சிகிச்சை நிலைய கட்டடத்தில் செயற்பட்டு வருகின்றது. இதனால் மாணவர்கள் மிகவும் சிரமப்பட்டு கற்கவேண்டியுள்ளதோடு மன உளைச்சலுக்கும் உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. அதேவேளை வெளியிலிருந்து வரும் விரிவுரையாளர்களும் மார்புநோய் சிகிச்சை நிலையக் கட்டடம் என்றதும் சற்று மனக் கஷ்டத்திற்கு ஆளாகிப் பின்னடிக்கின்றார்கள்.
நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் சுகாதாரப்பகுதியில் பல தரப்பட்ட அபிவிருத்திப் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன. அவற்றில் பொதுச்சுகாதாரப் பயிற்சி நிலையம், உணவுப் பகுப்பாய்வு நிலையம், நீர்ப்பகுப்பாய்வு நிலையம் போன்றவற்றை விருத்தி செய்வதால் மக்களுக்கான நல்ல சேவைகளை ஆற்றமுடியும். இவை பொதுச்சுகாதார சேவைக்கான அடிப்படை வளங்களாகும்.
மக்களுக்காக சிறந்த சேவைகளை வழங்க வேண்டியவர்களுக்கு முழுமையான சிறந்த பயிற்சியை வழங்குவதே சாலப் பொருத்தமாகும். ஆதலால், நிரந்தரமான கட்டடம் ஒன்றை அமைக்கக் காணிநிலம் வேண்டும்.
தெல்லிப்பழை வைத்தியசாலையை அண்மித்த பகுதியாக இருந்தால் மிகவும் பொருத்தமாக இருக்கும். நிலபுலனுடையோர், நல்மனம் படைத்தோர் எவராயினும் காணியை நன்கொடையாக வழங்க விரும்பினால் அது குறித்து யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் தொடர்புகொள்ளலாம். இது நல்லஉள்ளங்களுக்குச் சமர்ப்பணம்.

க.தெய்வேந்திரம்
சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் போதனாசிரியர்,
யாழ்ப்பாணம்.


## செய்தியை வெளியிட்டதன் மூலம் முக்கிய கடத்தலை முறியடிக்க உதவியது உதயன் பத்திரிகை

கிளிநொச்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர், உதயன் பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்த வவுனியா பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் புதிதாக அவசர சேவையொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதான செய்தியை வாசித்து அறிந்துள்ளார். அதன் காரணமாகக் குறித்த புதிய அவசர சேவையினூடாக, மாங்குளம் பொலிஸ் பிரிவில் கொக்காவில் பிரதேசத்தில் இருந்து மரக்கடத்தல் தொடர்பில் மேற்கண்ட சேவைப்பிரிவுக்கு தகவலொன்று கிடைக்கப்பெற்றது. அதன்படி என்னால் முல்லைத்தீவு பிரதேசத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து, மேற்கண்ட சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவுப் பிரதேச மது ஒழிப்புப் பிரிவினர், மேற்கண்ட மரக்கடத்தல் குழுவினரைச் சுற்றி வளைத்துவெற்றிகரமாக அவர்களைக் கையும்மெய்யுமாகப் பிடித்ததுடன், பல இலட்ச ரூபா பெறுமதியான 24 முதிரை மரக்குற்றிளுடன் அவற்றை ஏற்றி வந்த வாகனத்தையும் ஒரு சந்தேக நபரும் கைதுசெய்துள்ளனர். அவ்வாறு வெற்றிகரமாக இந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கு உதவும் வகையில் மேலே குறிப்பிடப்பட்ட அவசரசேவைதொடர்பில் உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட குறித்த செய்தியை பத்திரிகைக்கு வழங்கிய செய்தியாளருக்கும், பிரதம ஆசிரியருக்கும் மற்றும் சகல உத்தியோகத்தர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேசபந்து தென்னகோன்.
பிரதிப் பொலிஸ்மா அதிபர். வன்னி மாவட்டம்.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதுபவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாகிஸ்தானின் கராச்சியில் ரயில் தடம்புரண்டு விபத்து

லாகூர், செப். 16
பாகிஸ்தானின் கராச்சி நகரில் நேற்றுமுன்தினம் ரயிலொன்று தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில், 6 பேர் சாவடைந்ததுடன், 150 பேர் காயமடைந்தனர்.
இயந்திரக் கோளாறே ரயில் தடம்புரண்டமைக்குக் காரணம் எனக் சொல்லப்படுகிறது. 6 பேர் சம்பவ இடத்திலேயே சாவடைந்தனர். 150 பேர் காயமடைந்தனர். அவர்களில் 10 பேரின் நிலமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-ரி4)

# இது எங்க ஏரியா

மொஸ்கோ, செப்.16
ஆர்டிக் துருவப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பூகோள ஆய்வு மையத்தை போலாக்கரடிகள் முற்றுகையிட்டன. ரஷ்யாவின் வடக்குப் பகுதியில் பூளோக ஆய்வு மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஆய்வு ஒன்றை மேற்கொள்வதற்காக 5 ஆய்வாளர்கள் சமீபத்தில் அங்கு சென்றனர். அவ்வாறு சென்றவர்களையும், ஆய்வு மையத்தையும் போலாக்கரடிகள் முற்றுகையிட்டன. அவற்றை விரட்டுவதற்காகச் சென்ற ஆய்வாளர்களின் இரு



நாய்களையும் குதறிக் கொன்றன. இதனையடுத்து தமது உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதை அவசர உதவிக்குழுவுக்கு ஆய்வாளர்கள் வெளிப்படுத்தினர். இதையடுத்து அவர்கள் உலங்குவானூர்திகள் மூலம் காப்பாற்றப்பட்டனர். இந்தத் தகவல்களை பன்னாட்டு செய்தி ஊடகமான சி.என்.என். வெளிப்படுத்தியது. (ம-ரி4)

# உடல் அழகுப் பதிவுகளால் உளப்பிரச்சினை ஏற்படலாம்

## ஆய்வில் தகவல்

லண்டன், செப்.16
சமூக வலைத்தளங்களில், அதிகளவில் உடற் பயிற்சி, உடல் அழகு ஒளிப்படங்களை பதிவு செய்யும் நபர்களின் உளவியல் நிலை ஒரு வகையில் பாதிப் படைந்துள்ளதாக ஆய்வில் தெரியவந்தது. லண்டனில் உள்ள புரூனல் பல் கலைக்கழகம் நடத்திய ஆய்விலேயே இந்த முடிவு பெறப்பட்டது.
உடற்பயிற்சியைமேற்கொள்வது போன்ற படங்களை வெளியிடுவதும், தமது உடலின் ஒளிப் படங்களைக் காண்பிப்பதும், அடிக்கடி தமது தமது செயற்பாடுகளைப் பதிவு செய்வதும், ஒரு வகையான உளவியல் ஏக்கம் என வெளிப்படுத்திய குறித்த ஆய்வு, தாழ்வு மனப்பான்மை உடையவர்களே சமூக வலைத்தளங்களில் அதிக அன்றாடப் பதிவுகளை மேற்கொள்ளுகிறார்கள் எனவும் குறிப்பிட்டது. (ம-ரி4)





# இதுவே எங்கள் இப்படிக்கு சிரிய

டமஸ்கஸ், செப். 16
சிரிய அரச தரப்புக்கும், அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுவுக்கும் இடையில் ஏற்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை காரணமாக ஒரு முழுநாளை அமைதியான சூழலுக்குள் செலவிட்டனர் சிரியக் குழந்தைகள்.
சிரிய ஜனாதிபதி ஆசாத்தை பதவி நீக்கம் செய்யும் முனைப்பில் அவரது அதிருப்தியாளர்கள் தொடங்கிய போராட்டம் உள்நாட்டுப் போராக உருவெடுத்தது. ஒன்றன் பின் ஒன்றாக ஏராளமான கிளர்ச்சிக் குழுக்கள் செயற்பட ஆரம்பித்தன. சிரிய அரசுக்கு ஆதரவாக ரஷ்யாவும், கிளர்ச்சிப் படைகளுக்கு ஆதரவாக அமெரிக்காவும் செயற்பட்டன. ஐக்கிய நாடுகள் சபையின் கருத்தின்படி கடந்த ஐந்து வருடங்களாக இடம்பெற்ற இந்தப் போர்களால்
சிரியாவில் கிட்டத்தட்ட 3 ல
டைந்தார்கள் என அறிய
வருடத்தின் ஆரம்பத்தில் ஐ
யுடன் அமெரிக்கா இணை
தத்தை ஏற்படுத்த முனை
ஆனால் ரஷ்யாவின் சில
போர் நீண்டு கொண்டே
ணியின் முனிச் நகரில் க
நடைபெற்ற உயர்மட்டப்
அமெரிக்கா, ரஷ்யா இ
ஏற்பட்டது. இதன் அடிப்ப
நாடுகளும் இணைந்து சிரி
கட்கிழமை நள்ளிரவின் பி
படையும் கிளர்ச்சிக் குழுக்க
செய்ய வேண்டும் என அ
சிரிய அரச படையும் கிளர்

# சூறாவளியின் விளைவு; தாய்வானில் மண்சரிவு

பீஜிங், செப்.16
மணிக்கு 230 மைல் வேகத்தில் தாய்வானைத் தாக்கிய சூறாவளியினால் புஜியன் மாகாணத்தில் நிலச்சரிவு ஏற்பட்டது. கடல் சிறிதளவில் கொந்தளிக்கிறது. அடுத்த 48 மணி நேரத்துக்குள் மேலும் சில இயற்கை அனர்த்தங்களும் ஏற்படும்எனஎச்சரிக்கைவிடப்பட்டது.
மொறாண்டிணைப்பெரிப்பட்குறித்த புயலால் நூற்றுக்கணக்கான வீடுகள், கட்டடங்கள் என்பன தரைமட்டமாகின. ஒருவர் சாவடைந் ததுடன் 44 பேர் காயமடைந்தனர் என தாய்வானுக்கான செஞ்சிலுவைச்சங்க ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.
9 லட்சம் வீடுகள் மின்சாரத்தை இழந்ததுடன், 5 லட்சம் பேருக்கான நீர் விநியோகம் தடைப்பட்டது. மீட்புப்பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்படுகின்றன. இடிபாடுகள் அதிகம் உள்ளதால் சாவடைந்தவர்கள், காயமடைந்தவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டது. பொருள் சேதத்தின் மதிப்பு இன்னும் அறிவிக்கப்படவில்லை. (ம-ரி4)



# இந்தியாவில் அதிகரித்துவருகின்ற சிறுவர் திருமணமும் விவாகரத்தும்

புதுடில்லி, செப்.16
இந்தியாவில் சிறுவர் திருமணங்கள் அதிகரித்து வருவதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. சிறுவர் விவாகரத்துக்காக பதிவு செய்துள்ள எண்ணிக்கையிலிருந்தே சிறுவர் திருமணங்கள் அதிகரித்துள்ளதாகச் சொல்லப்படுகிறது.



நடப்பு வருடத்தில் மட்டும் இதுவரை 12 ஆயிரத்து 10,5 சிறுவர்கள் விவாகரத்துக்காகப் பதிவு செய்துள்ளனர். 10 முதல் 14 வயதுக்கு உட்பட்டவர்களே அவ்வாறு பதிவு செய்துள்ளனர். மகாராஷ்டிரா, உத்தர பிரதேசம், குஜராத், பெங்கால், பீகார், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் சிறுவர் திருமணங்கள் அதிகம் நடைபெறுவதாக வெளிப்படுத்தப்பட்டது. (ம-ரி4)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ள் சறுக்குப்பலகை
# யக் குழந்தைகள்

தட்ட 3 லட்சம் மக்கள் சாவ ன அறியவருகிறது. இந்த பத்தில் ஐக்கியநாடுகள் சபை கா இணைந்து போர் நிறுத் த முனைப்புக் காட்டியது. வின் சில நிபந்தனைகளால் காண்டே சென்றது. ஜேர்ம நகரில் கடந்த சனிக்கிழமை ர்மட்டப் பேச்சுவார்த்தையில் ஷ்யா இடையே இணக்கம் அடிப்படையில் இந்த இரு ணைந்து சிரியாவில் கடந்த திங் ரவின் பின்னர் சிரிய அரச க் குழுக்களும் போர் நிறுத்தம் என அறிவித்தன. இதற்கு யும் கிளர்ச்சிக் குழுக்களும் சம்மதம் தெரிவித்தன. இதனையடுத்து மிகமிக நீண்ட இடைவெளியின் பின்னர் ஒரு நாளை ஓரளவு அமைதியான சூழலுக்குள் நேற்று முன் தினம் செலவிட்டுள்ளார்கள் சிரியக் குழந்தைகள். சிரிப்பைத் தொலைத்த அவர்களின் முகங்கள் நேற்றுமுன்தினம் மீண்டும் அதை நினைவு படுத்திக் கொண்டன. கிளர்ச்சிக்குழு ஆயுதக் குழுவாக மாற்றம் பெற்ற பின்னர் பிறந்த சில குழந்தைகளுக்கு விளையாட்டு என்றால் என்ன வென்பது நேற்றுமுன்தினம் தான் தெரிந்திருக் கும். சில குழந்தைகள் கட்டட இடிபாடுகளுக்குள் சென்றுவிளையாடினார்கள், சிலர்கட்டடங்களையே விளையாட்டுப் பொருளாக்கினார்கள். அவர் களின் ஒருநாள் முழுக்கவத்தையும் பன்னாட்டு செய்தி நிறுவனமான ரொயிட்டர்ஸ் அழகாகப் பதிவுசெய்து வெளிப்படுத்தியது. (ம-ரி4)

# ஆலயத்துக்குள் அரசியல் பேசியதால் பாதியில் நிறுத்தப்பட்டார் டொனால்ட்



வொஷிங்ரன், செப்.16

அமெரிக்காவின் மெச்சிக்கன் மாகாணத்தில் பின்ட் நகரில் உள்ள மெதடிஸ்த தேவாலயம் ஒன்றுக் குள் வைத்து அரசியல் பேசியதன் காரணத்தால் டொனால்ட் ட்ரம்பின் பேச்சு பாதியில் நிறுத்தப்பட்டது.


அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது. அமெரிக்கா வின் இரு பெரும் கட்சிகளில் குடி யரசுக் கட்சியின் வேட்பாளராக டொனால்ட் ட்ரம், ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக ஹிலாரி கிளிங்டன் ஆகியோர் உள்ளனர். தேர்தல் முழக்கங்கள் சூடு பிடித் துள்ளன. இந்த நிலையில் அமெ ரிக்காவின் மெச்சிக்கன் மாகா ணத்தில் பின்ட் நகரில் உள்ள மெதடிஸ்த தேவாலயம் ஒன்றுக்குச் சென்றிருந்த டொனால்ட் ட்ரம் புக்கு, அவரது திட்டங்கள் தொடர் பாக உரையாட வாய்ப்பு வழங்கப் பட்டது. ஆனால் அவர் தனது திட் டங்களையல்லாமல் எதிர் வேட் பாளரான ஹிலாரி மீது கடும் விமர் சனங்களை முன்வைத்தார். இதனையடுத்து பாதியில் குறுக் கிட்ட பெண் போதகர் ஒருவர் அரசி யல் விமர்சனங்களை முன் வைக்கும் இடம் இதுவல்ல எனக் கூறி தடுத்து நிறுத்தினார். இந்தத் தகவல்களை பன்னாட்டு ஊடக மான சி.என்.என். வெளிப்படுத்தி யது. (ம-ரி4)

# அதிர்ந்தது அந்தமான்

## *5 ரிச்டர்*

அந்தமான் தீவில் நேற்று அதி காலை ஐந்து ரிச்டர் அளவில் நில நடுக்கம் ஏற்பட்டதாக பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

உயிர்ச்சேதமோ சொல் லிக்கொள்ளும் படியான பொருள்சேதமோ ஏற்படவில்லை. அதிகாலை வேளையில் நிலநடுக்கம் ஏற்பட்டதால் மக் களிடையே பதற்றம் நிலவிய தாக ஊடகங்கள் மேலும் குறிப் பிட்டன. (ம-ரி4)





# தமிழர்களுக்கு எதிராக தமிழர்கள் இது மாண்டியா நகரின் நிலமை

தமிழ்நாட்டுக்குக் காவிரியிலிருந்து தண்ணீர் வழங்கப்பட்டமையைக் கண்டித்து கர்நாடகாவின் மாண்டியா நகரிலுள்ள தமிழர்கள் நேற்று முன்தினம் தமிழ்நாட்டுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். நேற்றுமுன்தினமும், நேற்று மதியம் வரையும் கர்நாடக அமைப் புக்கள் போராட்டத்தில் ஈடுபடவில்லை. ஆனால் கர்நாடகாவின் மாண் டியா நகரில் வசிக்கும் நூற்றுக்கணக்கான தமிழர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். வெற்றுக்குடங்களை ஏந்தியிருந்த அவர்கள், கர்நாடகாவில் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லையென்றும், தமிழ்நாடு, கர்நாடகாவிலுள்ள தமக்கும் கன்னடர்களுக்குள்ளும் இருக்கும் சகோதரத்துவத்தைக் குழப்புகிறது என்றும் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தனர். இந்தத் தகவலை இந்திய ஊடகமான தி இந்து வெளிப்படுத்தியது. (ம-ரி4)

# கர்நாடகாவைக் கண்டித்து இன்று முடங்கும் தமிழ்நாடு

தமிழர்களுக்கு எதிராக கர்நாடகாவில் நடந்த கலவரங்களைக் கண்டித்து இன்று தமிழ்நாட்டில் முழு அடைப்புப் போராட்டம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தச் செயலைக் கண்டித்து இன்று தமிழ்நாடு முழுதும் முழு அடைப்புப் போராட்டம் நடத்தப்படத் தீர்மானிக் கப்பட்டது.

தமிழ்நாட்டில் பயிரிடப்பட்ட 40 ஆயிரம் ஏக் கர் சம்பாவின் விளைச்சலுக் காக காவிரியில் இருந்து தமிழ் நாட்டுக்கு தண் ணீர் வழங்கு மாறு கர்நாட காவை உத்தர விட்டது உச்ச நீதிமன்றம்.



கோப்புப்படம்

தமிழ் நாட்டுக்கு காவிரி அலை புரண்டதையடுத்து கர்நாடகாவில் போராட்டங்கள், கலவரங்கள் பல நடத் தப்பட்டன. தமிழர்களது பல வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

விவசாய சங்கங் களின் இந்த முடி வுக்கு வணிகர் கழகங்கள் பல ஆதரவு தெரிவித் ததுடன், தமிழ்நாட் டில் உள்ள பல மான அரசியல் கட்சிகளில் ஒன் றான தி.மு.க. வும் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது. முழு அடைப்புக்கு பெரும் ஆதரவு இருக்கின்ற கார ணத்தினால் இன்று [illegible] இயல்பு வாழ்க்கை [illegible] கப்படும் என்று எதிர்வு கூறப்படு கிறது. (ம-ரி4)



மழைக் கடவுளான இந்திரனை வழிபடும் இந்திரஜித் விழா நேபாளத்தில் நேற்று மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்ரெம்பர் மாத பலன் 2016

செப்ரெம்பர் 1 - 30 வரை

## மீனம்

அடுத்தவர்களைப் பற்றி கவலைப்படாமல் நீங்கள் நினைத்ததுதான் சரி என்று திடமான நம்பிக்கையுடன் எதையும் செய்யும் மீன ராசியினரே! நீங்கள் சமூக சிந்தனை அதிகம் இருப்பவர்கள். இந்தக் காலகட்டத்தில் செவ்வாய் – புதன் – குரு – கேது ஆகியோர் ராசியைப் பார்க்கிறார்கள். எதிலும் சாதகமான நிலை காணப்படும். எல்லா நன்மைகளும் உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும். வாக்கு வன்மை ஏற்படும். உங்கள் பேச்சுக்கு மற்றவர்கள் செவிசாய்ப்பார்கள். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். தொழில் ஸ்தானத்தில் தன பாக்கியாதிபதி செவ்வாய் சஞ்சரிக்கிறார். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும்; இலாபம் கூடும். பழைய பாக்கிகள் வசூலாகும். வியாபாரம், தொழில் தொடர்பான நிலை சாதகமான பலன் தரும். புதிய வருவாய்களைக் கிடைக்கப் பெறுவீர்கள். பணியாளர்கள் மூலம் நன்மை உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாக எதையும் செய்து முடித்து பாராட்டுப் பெறுவார்கள். கௌரவம் கூடும். நிலுவைத் தொகை வந்து சேரும். பதவி உயர்வு கிடைக்கலாம். குடும்பத்தில் கணவன்–மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும்.

வாகனம் வாங்கும் அல்லது புதுப்பிக்கும் பணியில் ஈடுபடுவீர்கள். பயணம் மூலம் சாதகமான பலன் கிடைக்கும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். உறவினர்களிடம் இருந்து வந்த கருத்து மோதல்கள் மறையும். பெண்களுக்கு உங்கள் வார்த்தைகளால் மதிப்புக் கூடும். தொலை தூரத் தகவல்கள் நல்ல தகவல்களாக வரும். எதிர்பார்த்த பணம் வரும் வாய்ப்பு உள்ளது. கலைத்துறையினருக்கு எந்த விவகாரத்தில் சிக்கினாலும் சாமர்த்தியமாகத் தப்பித்துக் கொள்வார்கள். விருந்து கேளிக்கை நிகழ்ச்சிகளில் பங்கேற்க நேரிடும். புத்திக் கூர்மையான பேச்சின் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். அரசியல் துறையினருக்கு உங்கள் வளர்ச்சியில் இருந்த முட்டுக்கட்டைகள் நீங்கும். பயணங்கள் செல்ல நேரலாம். பணவரத்து திருப்தி தரும். கடினமாக உழைக்க வேண்டி இருக்கும். அதன் மூலம் நல்ல பலன்கள் கிடைக்கப் பெறுவீர்கள். மேலிடத்தின் கனிவான பார்வை உங்கள் மீது விழும். மாணவர்களுக்கு கல்வியில் திறமை அதிகரிக்கும். உங்களது செயல்களுக்கு பாராட்டுக் கிடைக்கும். மனதில் தைரியம் கூடும்.

**பரிகாரம்:** வியாழக்கிழமையில் தட்சிணாமூர்த்தியை வணங்குவதும் வயதானவர்களுக்கு உதவிகள் செய்வதும் எல்லா நன்மைகளையும் தரும். செல்வச் சேர்க்கை உண்டாகும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:** செவ்வாய், வியாழன்.




அன்ரனி மார்க்

# உலகை அழிவிலிருந்து மீட்கவேண்டுமானால் ஓசோன் படலத்தின் பாதுகாப்பு அவசியம்!

**இன்று ஓசோன் பாதுகாப்புத் தினம்**

பல ஆயிரம் ஆண்டுகளாகப் பூமியில் உள்ள ஜீவ ராசிகள் சூரியனில் இருந்து வெளியேறும் ஆபத்தான ஊதா வெப்பக்கதீர் வீச்சுக்களில் இருந்து இன்று வரையும் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன. நாம் வாழும் பூமி கிரகத்தைக் காப்பாற்றும் ஓர் ஒப்பற்ற சிறப்பு வாய்ந்த படலம்தான் இந்த ஓசோன் படலமாகும். மனிதர்களின் தொழில் முயற்சிகளால் வெளியேற்றப்படும் இரசாயனங்கள், வாயுக்கள் போன்றன ஆகாயத்தில் உள்ளவாயு மண்டலத்தை அடைந்து ஓசோன் படலத்தைச் சேதமாக்குகின்றன. இதை அவதானித்த ஐக்கிய நாட்டு சுற்றாடல் திட்டஅதிகாரிகள் இறுதித் தீர்மானத்தின் மூலம் இந்த ஓசோன் படலத்தைப் பாதுகாப்பதற்கான ஓர் அரசியல் திட்டவரைவைத் தயாரித்தார்கள். இதன்படி 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16ம் திகதி மொன்றியேல் பிரகடனத்தை நிறைவேற்றினர். இதன் நோக்கம் ஆபத்தான இரசாயன வஸ்துக்களில் இருந்தும் கெட்டவாயுக்களில் இருந்தும் ஓசோன் படலத்தைப் பாதுகாத்தலாகும். இதனால் வருடா வருடம் செப்டம்பா 16ஆம் திகதிகளில் உலகம் முழுவதும் ஓசோன் பாதுகாப்புத்தினம் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டுவருகின்றது.

இந்தமொன்றியேல் பிரகடனத்தின் பலனாகக் குறிப்பிட்டகாலத்துக்குள் வளிமண்டலத்தில் இரசாயனப் பொருள்கள், அசுத்தமானவாயுக்கள் வளிமண்டலத்தில் சோவதுகுறைந்துள்ளது. ஒட்டுமொத்தமாக இந்த நூற்றாண்டின் நடுப்பகுதிமுடியமுன்பு மனிதர்களின் செயற்பாடுகளினால் வெளியேறும் அசுத்தமானவாயுக்கள், இரசாயனப் பொருள்கள் குறைக்கப்பட்டு வளிமண்டலம் ஆதியில் இருந்த நிலைக்குத் திரும்ப வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனாலும் யதார்த்தமாகப் பார்ப்போமாக இருந்தால் ஓசோன் மண்டலத்தில் துவாரங்கள் அதிகரித்து சேதங்கள் பெருகிவருவதை அவதானிக்க முடியும். இதனால், இன்று உலகம் முழுவதும் வெப்பம் அதிகரித்து மழை குறைவடைந்து நாடுகள் பூராகவும் வறட்சிகள் ஏற்பட்டு பயிர் அழிவுகள் ஏற்பட்டிருக்கின்றன. தாவரங்களின் வளர்ச்சியும் இன விருத்தியும் குறைவடைந்து வருகின்றது. இதனால், காடுகள் வனாந்தரமாக மாறும் நிலை ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே 48 வீதமாக இருந்த காடுகள் அழிந்த 29 வீதமாகிவிட்டன. மேற்படி காடுகளின் அழிவு இன்னும் அதிகரிக்குமே ஒழிய, காடுகளின் அபிவிருத்தியை அதிகரிப்பதற்கான செயற்திட்டங்கள் ஒன்றுமில்லை. இதனால், காட்டுமரங்களிலிருந்து வெளியேறும் ஒட்சிசன் வாயு குறைவடைந்து காணப்படுகின்றது. சுவாசிக்கும் காற்று ஏன் நஞ்சாக இருக்கின்றது? குடிக்க ஏன் தண்ணீர் இல்லை? ஏன் மழை இல்லை? என்பதற்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் இருக்கின்றது. ஏன் என்றால் இப்போதே நாம்




சுவாசிக்கும் காற்று, உண்ணும் உணவு, குடிக்கும் தண்ணீர் உட்பட அனைத்தும் மாசுபட்டுள்ளன.

மனிதன் சீவிக்க வேண்டுமாயிருந்தால் ஒரு நாளைக்கு மூன்றுசிலிண்டர் அளவான ஒக்சிசன் வாயுவை சுவாசிக்க வேண்டும். ஓர் ஒட்சிசன் சிலிண்டரில் விலை ரூபா 700 ஆகும். எனவே, கடும் வறட்சி ஏற்படுமாயிருந்தால் தாவரங்கள் ஒளித் தொகுப்பைச் செய்ய முடியாது. இந்தத் தாவரங்களும் மரங்களும் இருப்பதனால் இவை நச்சு வாயுக்களான காபனீரொட்சைட் போன்றவற்றைச் சுவாசித்து தேவையான ஒக்சிசன் வாயுவை வெளியேற்றுகின்றன. இந்த ஒட்சிசன் வாயுவை நாம் பணமின்றி இலவசமாகச் சுவாசித்து வருகின்றோம். விஞ்ஞான ஆராய்ச்சிகளின்படி ஓசோனைப் பாதிப்பதில் முக்கியபங்கை வகுப்பது குளிர்சாதனப் பெட்டிகளும், குளிரூட்டி போன்றவற்றின் பாவிப்புக்களும், இவற்றின் திருத்தவேலைகளும் அதனைத் துப்புரவுசெய்யும் வேலைகளுமாகும். 1913 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தபௌதீக சாஸ்திர வல்லுநரான சாள்ஸ் பெப்றி மற்றும் ஹென்றிபுசோன் என்போரினால் இந்த ஓசோன் படலம் கண்டுபிடிக்கப்பட்டது. ஓசோன் படலமானது பூமியின் மேல் ஆகாயத்தில் எல்லாப்பகுதிகளிலும் நிறைந்துள்ளது. இந்தப்பகுதி புவியின் மேற்பரப்பில் இருந்து 10-25 மைல் உயரத்தின் மேல் அமைந்துள்ளது. இது சூரியனிலிருந்து வெளிவரும் ஊதா நிற வெப்பக் கதிர்வீச்சில் இருந்து உலகத்தையும், உயிர்களையும் பாது காத்து வருகின்றது. ஓசோன் படையானது புவிக்கு நன்மை பயக்கும் விதத்தில் செயற்பட்டுவருகின்றது. இன்றைய உலகமானது பொய் அபிவிருத்தி என்ற செயற்பாட்டின் மூலம் பலவிதமானயந்திரமயமானதொழிற்சாலைகளைஆரம்பித்துள்ளது. இதில் இருந்து வெளியேறும் புகைகளினால் இரசாயனப்பதார்த்தங்களினாலும் ஓசோனில் ஓட்டைகள் ஏற்படுவதுடன் ஓசோனின் கனவளவை அல்லது அதன் படைகளின் தடிப்பையும் குறைக்கக்கூடும். அல்லது அவை படிப்படியாகவும் சிதைந்து போகவும் கூடும். இதனால் அதிகூடிய வரட்சி மூலம் குடிப்பதற்கே தண்ணீர் இல்லாமலும் போகலாம். மழை இல்லாமல் போகலாம். காடுகள் அழிந்து போகலாம். இப்படியானநிலைஏற்படும் போது ஜீவராசிகள் ஒட்சிசன் இல்லாமலும் போகலாம். புதிய விவசாயச் சேனைச் செய்கைகளுக்காகவும் றோட்டுக்களுக்காகவும் அபிவிருத்தி வேலைகளுக்காகவும் மனிதர்கள் காடுகளை அழித்து அதற்கு நெருப்பு வைக்கின்றார்கள். இதனால், ஏற்படும் நெருப்புச் சுவாலைகள் வளிமண்டலத்தை அடைந்து ஓசோன் படலத்தை அழிக்கின்றன. உலகமெங்கும் ஆரம்பிக்கப்பட்டு இருக்கும் அனல் மின்சாரநிலையங்களும் வானில் பறக்கும் ஆகாய விமானங்களின் புகைகளும் புதிய கிரகங்களைக் கண்டு பிடிக்க ஆராய்ச்சி செய்யச்சொல்லும் இயந்திர ஜெட் கலன்களும் கூடியகெதியில் இந்த ஓசோன் படைகளைச் சிதைவடையச் செய்து அழிக்கக் கூடும். ஐ.நாவின் 1987 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வெளியிட்ட மொன்றியேல் பிரகடனத்தையும் மீறி உலகத்தில் மேற்படி ஆபத்தான வாயுக்களாலும் இரசாயனப் பதார்த்தங்களாலும் ஓசோன் மண்டலம் முற்றாக அழிக்கப்படக் கூடும். மேலும் போர்களினாலும் ஆகாயத்தில் மேல் பறக்கும் போர் விமானங்களினாலும் அணுகுண்டுகளினாலும் இரசாயனக் குண்டுகளினாலும் உலகம் இந்த நூற்றாண்டு முடிய முன்பு அழிந்து சாம்பலாகக்கூடும். ஐ.நா சபையும் விஞ்ஞானிகளும் கல்விமான்களும் அரசியல் தலைவர்களும் உன்னிப்பான கவனத்தை எடுத்து உலகத்தை வரப்போகும்; ஆபத்தில் இருந்து காப்பாற்றுவார்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில்: சாரி



# மாணவர்களின் பின்னணியை அறிந்தால் ஆசிரியரின் பணிச்சுமை குறைந்துவிடும்

அமெரிக்காவின் டென்வர் நகரில் டவுல் ஆரம்பப் பள்ளி ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார் கைல் ஸ்வார்ட்ஸ். மூன்றாவது வகுப்பு மாணவர்களுக்குப் பாடம் நடத்துமாறு தலைமை ஆசிரியை கூறினார். வகுப்பறைக்குச் சென்ற ஸ்வார்ட்ஸ், இந்தக் குழந்தைகளைப் பற்றி தகவல் தெரிந்தால் அவர்களுடன் நட்பை வலுப்படுத்திக் கொள்வதற்கு உதவியாக இருக்கும் என்று நினைத்தார். எனவே, என் ஆசிரியருக்கு இது தெரிந்தால் நல்லது என்று உங்கள் மனதில் எதை நினைக்கிறீர்களோ அதை எழுதுங்கள் என்று எல்லாக் குழந்தைகளிட மும் கூறினார். வகுப்பறைக்கு வந்தாலே ஏதாவது பாடத்தை எழுது, கணக்கைப் போடு என்று சொல்லும் ஆசிரியர்களைவிட, இவர் வித்தியாசமாக இருக்கிறாரே என்று குழந்தைகளுக்கு ஒரே மகிழ்ச்சி. அத்துடன் தங்களு டைய பிஞ்சு மனங் களில் இருந்ததை அப்படியே கொட்டிவிட்டார்கள். அதைப் படித்த கைலுக்கு மகிழ்ச்சி, நெகிழ்ச்சி, அதிர்ச்சி, ஆம், அவர்கள் அளித்த தகவல்கள் அப்படிப்பட்டவை.

வீட்டுப் பாடம் எழுத என்னிடம் பென்சில்கள் இல்லை என்பதை ஆசிரியர் தெரிந்துகொண்டால் மகிழ்ச்சி என்று ஒருவன் தன் குடும்ப வறுமையை நாசூக்காகச் சுட்டிக்காட்டியிருந்தான்.

வீட்டில் பாடம் படித்தேனா என்று சரிபார்த்துக் கையெழுத்துப் போட வீட்டில் என் அம்மா, நான் கண் விழிக்கும் நேரம் இருப்பதில்லை என்று தன்னுடைய தாய் அதிகாலையிலேயே வேலைக்குச் சென்றுவிடுவதை ஏக்கத்தோடு பதிவு செய்திருந்தான் இன்னொருவன்.

**அப்பாவைப் பார்க்காத குழந்தை**

எனக்கு மூன்று வயதாக இருக்கும்போதே அப்பாவைக் குடியேற்றத்துறை அதிகாரிகள் மெக்ஸிக்கோவுக்கு நாடு கடத்திவிட்டார்கள். கடந்த ஆறு ஆண்டுகளாக நான் அப்பாவை நேரில் பார்த்ததே இல்லை என்று–ஒரு மாணவன் தன்னுடைய குழந்தைப் பருவமே நொறுங்கிக் கிடப்பதை அழகாக வெளிப்படுத்தியிருந்தான்.

கைல் ஸ்வார்ட்ஸ் இப்போது ஆசிரியையாகி ஐந்து ஆண்டுகளாகிவிட்டன. குழந்தைகளின் நிலைமை என்ன, எப்படிப்பட்ட குடும்பங்களிலிருந்து வருகிறார்கள், அவர்களுடைய கவலை என்ன, ஆசை என்ன என்பதை முழுமையாக உள்வாங்கிக்கொண்டால்தான், அவர்கள் ஏன் சில விடயங்களுக்கு முக்கியத்துவம் தருகிறார்கள், சிலவற்றைக் கவனிக்கத் தவறுகிறார்கள், சிலவற்றைப் புரிந்துகொள்ள மறுக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார். வகுப்பறைக்கு வெளியே அவர்களைப் பாதிக்கும் விடயங்களைச் சரிசெய்தால்தான், வகுப்பில் அவர்களால் படிப்பில் சிறந்து விளங்க முடியும் என்பதை அனுபவபூர்வமாகவே உணர்ந்திருக்கிறார். தனக்குக் கிடைத்த அந்த அனுபவத்தைத் தன்னைப் போன்ற சக ஆசிரியர்களிடம் கடந்த ஆண்டு பகிர்ந்துகொண்டார். இதற்காக ருவிற்றரில் ஐ விஷ் மை டீச்சர் நியூ (i wish my teacher knew) என்ற ஹேஷ்டேக்கை உருவாக்கினார். அது அப்படியே வைரசானது. பிற ஆசிரியைகளும் அதையே பின்பற்றித் தங்களுடைய மாணவர்களைப் பற்றிய புதிய தகவல்களை அறிந்து வியப்படைந்தார்கள். பலர் அதில் முக்கியமானவற்றை கைல்ஸ்வார்ட்ஸுக்கே அனுப்பி வைத்தார்கள்.

இதையே அடிப்படையாக வைத்து, ஐ விஷ் மை டீச்சர் நியூ: ஹவ் ஒன் கொஸ்டின் கேன் சேஞ்ச் ஃபார் அவர் கிட்ஸ் (I Wish My Teacher Knew: How One Question Can Change For Our Kids) என்ற தலைப்பில் ஒரு புத்த கத்தையே எழுதிவிட்டார் ஸ்வார்ட்ஸ். ஒரு மாணவனின் வளர்ச்சியில் பெற்றோர்களும் வகுப்பு ஆசிரியர்களும் முக்கியமான பங்காளிகள் என்று கருதுகிறார்–ஸ்வார்ட்ஸ்.

அவருடைய கருத்தை வாஷிங்டன் நகரைச் சேர்ந்த மெலோடி மோலினாஃப் என்ற தாய் ஆமோதிக்கிறார். அவருக்கு 9, 11 வயதுகளில் இரண்டு மகன்கள். எங்களுடைய குழந்தைகளை நன்றாக வளர்ப்பதில் ஆசிரியர்கள் எங்களுக்குப் பங்காளிகள்; இந்தப் பெரும் பொறுப்பை நாங்கள் ஆசிரியர்கள் மற்றும் பள்ளிக்கூடங்களின் தோள்களில் ஏற்றியிருக்கிறோம். என்னுடைய மகன்களுக்குப் பாடம் சொல்லித்தரும் ஆசிரியர்கள் அவர்களுக்கு முன்னால் உள்ள சவால்கள் என்ன என்பதை உணர்ந்தவர்களாக இருக்க வேண்டும். எதைச் சொல்லித் தருகிறோம் என்பதுடன் எவருக்குச் சொல்லித் தருகிறோம் என்பதும் முக்கியம் என்கிறார் மெலோடி மோலினாஃப்.

**பெற்றோர்களின் ஆர்வம்**

இதே நிலையை நான் எதிர்த்தரப்பிலிருந்து பதிவுசெய்ய விரும்புகிறேன் என்கிறார் 4 ஆவது வகுப்புக்குப் பாடம் நடத்தும் மேரி கிளேமேன். இதுவரை நான் 500–க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்குப் பாடம் சொல்லித் தந்திருக்கிறேன். அவர்கள் பெருக்கல், வகுத்தல் பாடங்களைக் கற்றுக்கொள்வதற்கு முன்னதாகவே, அவர்கள் எப்படி வகுப்பில் நடந்துகொள்கிறார்கள், எப்படி உணர்ச்சிவசப்படுகிறார்கள் என்று அறிந்துகொள்ள அவர்களுடைய பெற்றோர் ஆர்வம் காட்டுகின்றனர் என்று வியக்கிறார் மேரி கிளேமேன்.

என்னுடைய மாணவர்களை நன்றாகத் தெரிந்துவைத்திருந்தால், நான் இந்தத் தவறுகளைச் செய்திருக்கவே மாட்டேன் என்று தன்னு டைய புத்தகத்தில் சில விடயங்களைக் குறிப்பிடுகிறார் ஸ்வார்ட்ஸ். ஸ்வார்ட்ஸின் வகுப்பில் கிறிஸ் என்ற மாணவன் அறிவியலில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தான். அறிவியலை மேலும் அறிவதற் கான ஒரு கோடைக்காலப் பயிற்சி முகாமுக்கு அவனுடைய பெயரைப் பரிந்துரை செய்துவிட்டு, அந்த மாணவனுக்குப் பெரிய சலுகையைச் செய்து விட்டதாக அகமகிழ்ந்திருந்தார் ஸ்வார்ட்ஸ். மிகுந்த வறுமையில் வாடிய அவனுடைய பெற்றோரால் பணம் செலவழித்து அவனை அந்த முகாமுக்கு அனுப்பிவைக்க முடியவில்லை என்று சில நாள்களுக்குப் பிறகுதான் ஸ்வார்ட்ஸுக்குத் தெரிந்தது.

> என்னுடைய மாணவர்களை நன்றாகத் தெரிந்துவைத்திருந்தால், நான் இந்தத் தவறுகளைச் செய்திருக்கவே மாட்டேன் என்று தன்னுடைய புத்தகத்தில் சில விடயங்களைக் குறிப்பிடுகிறார் ஸ்வார்ட்ஸ். ஸ்வார்ட்ஸின் வகுப்பில் கிறிஸ் என்ற மாணவன் அறிவியலில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தான். அறிவியலை மேலும் அறிவதற்கான ஒரு கோடைக்காலப் பயிற்சி முகாமுக்கு அவனுடைய பெயரைப் பரிந்துரை செய்துவிட்டு, அந்த மாணவனுக்குப் பெரிய சலுகையைச் செய்து விட்டதாக அகமகிழ்ந் திருந்தார் ஸ்வார்ட்ஸ்.

**பெற்றோர்களே முதல் ஆசிரியர்கள்**

தனிப்பட்ட முறையிலும் குடும்பத்தாலும் சோகத்தில் ஆழ்ந்துவிடும் மாணவர்களின் வாட்டத்தைப் போக்க வகுப்பறைகளால் முடியும் என்று நம்புகிறார் ஸ்வார்ட்ஸ். வகுப்பறைச் சூழல் மூலம் குழந்தைகளின் துயர குறைத்து விட முடியும் என்கிறார். இதற்காக ஒவ்வொரு வகுப்பிலும் படிக்கும் மாணவர் களின் துயரங்கள், இழப்புகள் பற்றிய தகவல்கள் திரட்டப்படுவது அவசியம் என்கிறார். குடும்பத்தார் இவற்றை யெல்லாம் வகுப்பாசிரியர்களிடம் மனம் விட்டுக் கூறினால், அவர்கள் அந்த மாணவர்களுக்கு ஆதரவாக நடந்துகொள்வதுடன், நல்ல ஆறுதலையும் வழங்கித் தேற்ற முடியும் என்கிறார். குழந்தைகளுக்குப் பெற்றோர்கள் தான் சிறந்த முதலாசிரியர்களாக இருக்க முடியும். நாங்கள் அவர்களுடன் இணைந்து செயற்பட்டு கல்வியைப் புகட்ட முடியும் என்று நம்பிக்கையுடன் கூறுகிறார்.

வகுப்புக்குள் நுழைந்ததுமே வரவு எடுத்துவிட்டு, பாடத்தைச் சொல்லிக்கொடுத்தால் போதும், அதற்கே நேரம் போதவில்லை என்று ஆசிரியர்கள் முணுமுணுக்கக்கூடும்.

ஆனால், மாணவர்களின் நிலமை அறியாமல் நீங்கள் மணிக்கணக்கில் பாடம் நடத்தினால் கூடப் பயன் இல்லை. சில நிமிடங்களைக் கூடுதலாகச் செலவிட்டு உங்களுடைய மாணவர்களின் பின்னணியையும் தெரிந்துகொள்ளுங்கள் என்கிறார் ஸ்வார்ட்ஸ்.

*நன்றி: த இந்து தமிழ்*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


உதயன் சிறுவர் பகுதியில் 'வர்ணம் தீட்டுவோம் வாங்க' என்ற தலைப்பில் வெளியிடப்படும் சித்திரங்களை, சிறுவர்கள் பலர் ஆர்வத்துடன் வர்ணம் தீட்டி அவற்றை எமக்கு அனுப்பியும் வைத்து வருகின்றனர். அவர்களுக்கு உற்சாக மூட்டும் வகையில் கச்சிதமான விதத்தில் வர்ணம் தீட்டப்படும் சித்திரங்கள் வெள்ளிக்கிழமைகளில் இந்தப் பகுதியில் வெளியிடப்படுகின்றன.



சி.வினுசிகா,
பராசக்தி பாலர் பகல் இல்லம்



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....





# வரலாற்றில் இன்றைய தினம்

1863 - அமெரிக்காவுக்கு வெளியே முதற் கல்வி நிறுவனம் அமெரிக்க மனித நேயர் கிறிஸ்தோபர் றொபேட் என்பவரால் துருக்கியின் இஸ்தான் புல்லில் றொபேட் கல்லூரி எனும் பெயரில் தொடங் கப்பட்டது.

1908 - ஜெனரல் மோட்டார் கூட்டுத்தாபனம் தொடங்கப்பட்டது.

1920 - வோல் ஸ்ரீற் குண்டு வெடிப்பு நியூயோர்க் நகரில் மோர்கன் கட்டடத்துக்கு வெளியே குதிரை வண்டி ஒன்றில் பொருத்தப்பட்ட குண்டு வெடித்ததில் 38 பேர் உயிரிழப்பு. 400 பேர் வரை காயம டைந்தனர்.

1947 - கத்லீன் சூறைக் காற்று டோக்கியோ சைரமா மற்றும் டோன் ஆற்றுப் பகுதியைத் தாக்கியதில் 1930 பேர் கொல்லப்பட்டனர்.

1955 - சோவியத் யூனியனின் சுலு வகை நீர் மூழ்கிக் கப்பல் பலஸ்ரிக் ஏவுகணையை ஏவிய முதல் நீர்மூழ்கிக் கப்பலாகியது.

1959 - முதலாவது வெற்றிகரமான நிழற்படப் பிரதியந்திரம் (போட்டோ - கொப்பியர்) அறிமுக செய்து காட்டுகை நியூயோர்க் நகரில் தொலைக்காட்சியில் நேரலையாக ஒளிபரப்பட்டது.

1961 - அமெரிக்க தேசிய சுழல்காற்று ஆராய்ச்சித் திட்டத்துக்கமைய சில்வர் அயடைட் நிரம்பிய 8 கொள்கலன்கள் போடப்பட்டதில் காற்றின் வேகம் 10 வீதத்தால் குறைக்கப்பட்டது.

- நான்சி எனும் பெயரிலான சூழல் காற்றால் ஜப்பான் ஒசாகாவில் ஏற்பட்ட நிலச்சரிவில் 173 பேர் வரை கொல்லப்பட்டனர்.

1961 - அப்துல் சலாமை தலைவராகக் கொண்டு பாகிஸ்தானில் விண் மற்றும் உயர் காலநிலை ஆய்வு ஆணையகம் நிறுவப்பட்டது.

1975 - பப்புவா நியூகினி ஆஸ்திரேலியாவிடமிருந்து சுதந்திரம் பெற் றது.

2002 - வரலாற்றுத் திருப்பமான புதிய அத்தியாயம். அரசு - புலிகள் ஒரே மேசையில் சந்தித்தனர். தாய்லாந்தில் பேச்சு களை கட் டியது. பிரபாவுக்கு பீரிஸ் பாராட்டு. ரணிலுக்கு பாலா புகழ் மாலை.

2003 - போரின் கோரத்தால் மனங்களில் ஏற்பட்ட மாறா வடுக்களை மாற்றுவதற்கு நடவடிக்கையெடுக்குமாறு அமைச்சர் ரவூப் ஹக் கீம் வேண்டுகோள்.

2006 - தியாகி தீலிபனின் நினைவு நிகழ்வை தேசியத் தலைவர் ஆரம்பித்து வைத்தார்.

- பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் வழங்கிய தண்டனைக்கு எதிராக ஜெனிவா மனித உரிமைக் குழுவின் பணிப்புரையை ஏற்க மறுத்து இலங்கை நீதிமன்றம் நிராகரிப்பு.

- கொழும்பில் காணாமல் போனோரைத் தேடி அறிவதற்கான அமைப்பு ஒன்றை இடதுசாரி முன்னணி அமைத்தது.

## உலகப் பழமொழிகள்

**துருக்கி**

1. ஏழையின் முதல் குழந்தை கடன்.
2. பசிக்காதபோதும் உண்பவன் தன் பற்களாலேயே தனக்கு சவக்குழி பறிக்கிறான்.
3. பேசுகிறவனைவிட கேட்பவனுக்கு அதிக அறிவு வேண்டும்.
4. விளக்கு, அதன் வெளிப்பகுதிக்கு ஒளி தருவதில்லை.
5. வாழ்க்கைத் தோ்வின் முடிவு வெளியாகும் முன்னே எழுதியவன் வாழ்க்கை முடிந்து விடுகிறது.
6. குழந்தையைக் கண்டித்து வளர்க்காதவன் பின்னாளில் தன்னைத் தானே நொந்து கொள்வான்.

# நீங்கள் எதை நினைக்கின்றீர்களோ அதுவாகவே ஆகி விடுவீர்கள்

ஆசிரியர் ஒருவர் வகுப்பில் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். மாணவர்கள் ஆர்வத்தோடு உன்னிப்பாக் அவதானித்துக் கொண்டிருந்தனர். ஆனால், ஒரு மாணவன் மட்டும் பாடத்தைக் கவனிக்காது ஏதோ யோசித்துக்கொண்டிருந்தான். ஆசிரியர் அதனைக் கண்டார். அவன் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டார். எனவே, அவனைத் தன்னருகில் வரச் சொன்னார்.

"பாடத்தைக் கவனிக்காது அப்படி என்ன சிந்தனையில் ஆழ்ந்திருந்தாய்" எனக் கேட்டார். அதற்கு அம் மாணவன் "தமது வீட்டில் அழகிய காளை ஒன்று இருப்பதாகவும், அதன் நினைவே தனக்கு எப்போதும் இருப்பதாகவும்" கூறினான். ஆசிரியர் அதற்கு அவனிடம் "எதிரில் தெரியும் குன்றில் அமர்ந்து உன் அழகிய காளையைப் பற்றி எண்ணியபடி இரு" என்று கூறினார்.

அந்த மாணவனும் தொடர்ந்து ஏழு நாள்கள் அந்தக் குன்றின் மேல் அமர்ந்து காளையை எண்ணியபடி இருந்தான். அதன்பின் இப்படி இருப்பது அவனுக்கே வேண்டாம் என்று போய்விட மறுபடியும் பள்ளிக்குச் சென்றான். பள்ளிக்கு வந்தவன், வகுப் பறையின் வெளியே நின்று கொண்டிருந்தான்.

ஆசிரியர் அவனிடம் "உன் காளையைப் பற்றிய தியானம் முடிவடைந்து விட்டால் வகுப்பு அறைக்குள் வரலாமே" என்றார். அதற்கு அந்த மாணவன் "இனி மேல் நான் குன்றுக்குப் போக மாட்டேன். காளையையும் நினைக்க மாட்டேன், ஆனாலும், வகுப்பறைக்குள் என்னால் வர முடியாது" என்றான்.

இந்தப் பதிலால் ஆச்சரியம் அடைந்த ஆசிரியர் ஏன் எனக் கேட்டார். அதற்கு அவன் "எனது தலையின் இரு மருங்கிலும் வளர்ந்துள்ள கொம்புகள் என்னை வகுப்பறைக்குள் நுழையவிடாமல் தடுக்கின்றன" என்றான்.

இடைவிடாது காளையைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்த மாணவனுடைய மனம் அவனையும் காளையாகவே சிந்திக்கத் தூண்டியது.



இதில் இருந்து ஒரு முகப்படுத்தப்பட்ட மனதால் முடியாதது எதுவுமே யில்லை. தெய்வத்தின் மீதும், நல்லஎண்ணங் களின் மீதும் மனதை ஒரு நிலைப்படுத்துவோமேயானால், நாம் என்றும் உண்மைபேசு பவர்களாகவும், தீய எண்ணங்கள் மனதில் இல்லாதவர்களாக வும் வாழ்வோம் என்று புரிந்து கொள்ளலாம்.

- துளசி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இதுதான் முன்மாதிரியோ?

கொழும்பு அரசின் அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதற்கான தயார்ப்படுத்தல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு, வரவு-செலவுத் திட்டத்துக்கு பொதுமக்கள் மற்றும் சிவில் அமைப்புக்களிடமிருந்து யோசனைகளை நிதி அமைச்சுக் கோரியுள்ளது. கடந்த காலங்களில் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெற்றிருக்கவில்லை. இந்த ஆண்டு முதன் முறையாக இவ்வாறு செயற்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மக்கள் பங்களிப்புடனான வரவு-செலவுத் திட்டத்தை தயாரிக்கும் நோக்குடன் நிதி அமைச்சு இதனைக் கோரியிருக்கின்றது.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் காலத்தின் போதும், சபை செயற்பட ஆரம்பிக்கின்ற காலத்திலும், முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் திரும்பத் திரும்ப ஒரு விடயத்தை வலியுறுத்திக் கூறி வந்தார்.

வடக்கு மாகாண சபை இலங்கையிலுள்ள ஏனைய மாகாண சபைகளுக்கு முன்மாதிரியான சபையாக இருக்கும். அவ்வாறுதான் நாம் செயற்படுவோம். வடக்கு மாகாண தேர்தல் பரப்புரை மேடைகளிலும், ஆட்சி பீடம் ஏறிய பின்னரும் இதைச் சொல்லி வந்தார். இதனை இப்போது சொல்வதில்லை என்பது வேறு விடயம்.

வடக்கு மாகாண அரசு அடுத்த நிதி ஆண்டுக்கு 10 ஆயிரத்து 200 மில்லியன் ரூபா நிதி தேவை என்று கொழும்பு அரசிடம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றது. இந்த நிதித் தேவை, அடுத்த ஆண்டு எவ்வாறான அபிவிருத்தி வேலைகள் ஒவ்வொரு அமைச்சின் ஊடாகவும் மேற்கொள்ளப்படவுள்ளன என்பதை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த வரவு - செலவுத் திட்டத்தை தயாரித்தவர்கள் யார் என்பது கேள்வியாகவே உள்ளது. வடக்கு மாகாண சபையின் மக்கள் பிரதிநிதிகள், மேற்படி வரவு-செலவுத் திட்டம் தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது என்று தெரிவிக்கின்றனர். எதிர்க் கட்சி உறுப்பினர்கள் மாத்திரமல்ல ஆளும் கட்சி உறுப்பினர்களும் இதே கருத்தை முன்வைக்கின்றனர். 2014ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபையின் வரவு- செலவுத் திட்டம் மீதான விவாதத்தின்போது, ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாரோ தயாரித்து அனுப்புகின்ற வரவு-செலவுத் திட்டத்திற்கு நாம் கை உயர்த்த முடியாது, எம்மிடம் ஆலோசனைகள் பெற்றுத் தான் வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

ஆனால் அது இன்னமும் செயலுறுப் பெறவில்லை. வழமை போன்று யாரோ தயாரிக்கின்ற வரவு-செலவுத் திட்டத்தை வெறுமனே உறுப்பினர்கள் ஆதரிக்கின்ற நிலைதான் இந்த ஆண்டும் ஏற்படப் போகின்றது.

வடக்கு மாகாண சபை அமைய முன்னர் - மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட முன்னர்- இங்குள்ள அதிகாரிகளே வரவு-செலவுத் திட்டத்தை தயாரித்தார்கள். ஆளுநரின் அங்கீகாரத்துடன் அவை நடைமுறைப் படுத்தப்பட்டன.


மக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கிய வடக்கு மாகாண சபை உருவாக்கப்பட்ட பின்னரும் அதே நிலைமைதான் தொடர்கின்றது. அதனை மாற்றியமைக்க எவரும் முன்வரவில்லை.

எவ்வாறான அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும், எதனை முதன்மைப்படுத்த வேண்டும் என்ற மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்கள் காதில் வாங்கிக் கொள்ளப்படுவதாக இல்லை. அப்படியானால் மக்கள் பிரதிநிதிகள் ஏன் ? கடந்த காலங்களைப் போன்று அதிகாரிகளே சகலவற்றையும் செய்து முடிக்கலாமே?

கொழும்பு அரசு மக்களின் கருத்துக்களை உள்வாங்கி வரவு-செலவுத் திட்டத்தை தயாரிக்க எத்தனிக்கின்ற சூழலில், எல்லோருக்கும் 'முன் மாதிரியாகச்' செயற்படுவோம் என்று அறிக்கை விட்ட வடக்கு அரசு, மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களைக்கூட உள்வாங்கி வரவு-செலவுத் திட்டம் தயாரிக்காத போக்கை என்னென்பது.

இதுதான் எல்லோருக்கும் 'முதன்மையாக முன்னுதாரணமாக' செயற்படுவோம் என்பதன் அர்த்தமாக? நல்லவேளை கொழும்பு அரசு அந்த முன்மாதிரியைப் பின்பற்றவில்லை.



# மனித உடல் வடிவில் காட்சியளிக்கும் ஆலயம்

காரை. எம்.பி. அருளானந்தன்

ஒரு மனிதனுடைய உடலமைப்பை ஆதாரமாகக் கொண்டே திருக்கோயில்கள் அமைத்து வழிபாட்டுக்கு உரிய வகையில் பேணப்படுகின்றன.

குண்டலினி சக்தி உறங்கிக் கிடக்கும் மூலாதாரமே கொடிமரமாகச் சித்திரிக்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளது. கொடிமரத்தில் காணப்படும் 32 வளையங்கள் மனித உடலின் முதுகுத் தண்டிலுள்ள 32 எலும்புகளைக் குறிப்ப தாகும். '32' என்பது எண்கணிதத்தில் குருவின் ஆதிபத்தியத்தில் மிகுந்த சிவாக்கியத் திற்குரியதாகும். மேலும் மனிதனுடைய முப்பத்திரண்டாவது வயதில் அறிவு பிரகாசிக்கின்றது.

மேலும் கொடி மரத்தில் காணப்படும் கொடிக்கயிறுகள் இடகலை, பிங்கலை என்ற நாடிகளைக் குறிக்கின்றன. அவற்றின் வழியே மூச்சை சரியான முறையில் அமைத்து யோகம் பயிலும்போது ஆத்மா 'ஆனந்தம்' எனப்படும். இறையடியை அடைந்து பிறவியிலாப் பெரு நிலையை அடைகிறதென்பதைக் குறிக்கவே திருவிழாவின்போது 'கொடியேற்றம்' நடைபெறுகிறது.

எண்ணங்களின் பிறப்பிடமாக விளங்கும் தொப்புளினிடத்தில் சிவனுடைய வாயிற் காப்போனாகிய நந்தியைப் நிறுத்துவதன் மூலம் எண்ணங்களை அடக்கி மனதைத் தூய்மைப்படுத்த வேண்டும் என்பது உணர்த்தப்படுகிறது.

காமம், பொறாமை, ஆணவம் போன்ற தீமைகளை இருதயத்திலிருந்து நீக்க வேண்டுமென்பதை - பலியிடப்படவேண்டுமென்பதை 'பலிபீடம்' குறிக்கிறது.

கர்ப்பக்கிரகம் அல்லது மூலஸ்தானத்தை பிரம்ம கபால உருவில் அமைப்பது வழக்கம். புருவ மத்தியில் ஆக்ஞை சக்கரத்தில் ஆன்ம நேய ஒருமைப்பாடு ஏற்படும் பொழுது ஆன்ம ஒளி ஏற்படும் என்பதைக் குறிக்கவே லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

**தத்துவம்**

கோபுர வாயில்
மூலாதாரம்– அதிதேவதை, விநாயகர், முருகன்
சுவாதிட்டானம் –பிரம்மா,சரஸ்வதி பிருதிதத்துவம்
மணிபூரகம்– திருமால், லட்சுமி அப்புதத்துவம்
அனாகதம்– சிவம், சக்தி தேயுதத்துவம்
விசுத்தி– மகேசன் மகேஸ்வரி வாயுதத்துவம்
ஆக்ஞை –சதாசிவன் மனோன்மணி ஆகாயதத்துவம்
கர்ப்பக்கிரகத்தின் மேலுள்ள கோபுரம் பரவெளித்தத்துவமாகிய நந்தனத்தைக் குறிப்பதாகும்.

**ஆலயத்தில் காணப்படும் ஆறு மண்டபங்கள்**

மூலாதாரம் – கர்ப்பக்கிரகமாகவும்
சவாதிட்டானம்– அர்த்தமண்டபமாகவும்
மணிபூரகம் –மகாமண்டபமாகவும்
அநாகதம்– ஸ்நபன மண்டபமாகவும்
சுத்தி – அலங்கார மண்டபமாகவும்
ஆக்ஞை– சபா மண்டபமாகவும்
குறிக்கப்படுகின்றது. ஆயிரங்கால் மண்டபம், மூளையிலிருக்கும் ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரை போன்ற உள் மணியையும், பக்கத்திலுள்ள தீர்த்தம் மூளையின் பக்கத்தில் உள்ள நீர் நிலையையும் குறிப்பதாகும்.

இதைக் குறிக்கவே கோயில்களில் உள்ள தெப்பக்குளத்தில் தாமரை மலர்கள் வளர்க்கப்படுகின்றன.

நடராஜருடைய பஞ்சசபா மண்டபங்களையும் பஞ்ச கோசங்களாக பாவிப்பதுண்டு. அன்னமயகோசம் இராஜசபையாகவும், பிராணமயகோசம் தேவசபையாகவும், மனோமயகோசம் நிருத்தசபையாகவும், விஞ்ஞானமயகோசம் கனகசபையாகவும், ஆனந்தமயகோசம் சிற்சபையாகவும் விளங்குகிறது.

இதுவே பூரணத்துவமிக்க 'ஆலயம்' என்று அமைப்புக்குரிய வடிவம். அதுவே மனித உடல் வடிவில் காட்சியளிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 8 | | 2 | | | | |
| | | 4 | | | 6 | | 9 | 8 |
| | | | | | | 3 | | |
| 5 | | | 4 | | 1 | | 3 | |
| | 6 | 9 | 3 | | 2 | 7 | 1 | |
| | 1 | | 7 | | 9 | | | 5 |
| | | 6 | | | | | | |
| 9 | 8 | | 6 | | | 5 | | |
| | | | | 3 | | 4 | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 2 | 8 | 5 | 7 | 3 | 6 | 9 | 1 |
| 7 | 1 | 5 | 9 | 6 | 4 | 3 | 2 | 8 |
| 3 | 6 | 9 | 1 | 8 | 2 | 4 | 7 | 5 |
| 5 | 3 | 2 | 4 | 9 | 8 | 7 | 1 | 6 |
| 8 | 4 | 6 | 7 | 5 | 1 | 9 | 3 | 2 |
| 9 | 7 | 1 | 2 | 3 | 6 | 5 | 8 | 4 |
| 6 | 5 | 3 | 8 | 2 | 7 | 1 | 4 | 9 |
| 2 | 9 | 4 | 3 | 1 | 5 | 8 | 6 | 7 |
| 1 | 8 | 7 | 6 | 4 | 9 | 2 | 5 | 3 |



மனைவி:
இன்றைக்கு வெயில் ரொம்ப அதிகமா இருக்கு, நீங்க ஆபிஸ் போக வேண்டாங்க!
கணவன்:
என்னை நம்பு செல்லம்... சத்தியமா எனக்கு வத்தல் போடத் தெரியாது!



**மருத்துவர்:** நம்ம வைத்தியசாலை விளம்பரத்துக்கு ஒரு நல்ல பஞ் டயலொக் சொல்லு?
**தாதியர்:** சுவட்டிட்டு வாங்க; தூக்கிட்டுப் போங்க, பணம் எங்களுக்கு பிணம் உங்களுக்கு...

சார் கார் வாங்கனுமெண்டு லோன் கேக்குறிங்க..., எங்களுடைய வங்கியில கணக்கு இருக்கா உங்களுக்கு...!



இல்ல சார்....
ஆனா பேஸ்புக்கில நாலு கணக்கு இருக்கு சார்... அது போதுமுங்களா...?!




## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** தன்னம்பிக்கையுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். பிள்ளைகள் விரும்பியதை வாங்கிக் கொடுப்பீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை நிலைக்கும்.

**இடபம்:** உங்களின் பேச்சில் இனிமை நிறைந்திருக்கும். தொல்லை கொடுத்தவர் இடம் மாறிச் செல்வர். தொழிலில், உற்பத்தி, விற்பனை, அதிகரிக்கும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். அரசு தொடர்பான உதவி கிடைக்கும்.

**மிதுனம்:** சிலர் தவறான ஆலோசனை சொல்லலாம், கவனம். தொழில், வியாபாரத்தில், மறைமுகப் போட்டி அதிகரிக்கும். பணவரவு கிடைப்பதில் தாமதம் உண்டாகும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவது நல்லது.

**கடகம்:** குடும்பத்தில் பணத்தேவை அதிகரிக்கும். தகுதிக்கு மீறி, எவருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில், மந்த நிலை ஏற்படலாம். இலாபம் சுமாராக இருக்கும். கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை.

**சிங்கம்:** கடந்த கால விடயங்களை நண்பரிடம் பேசி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில், புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். வருமானம் அதிகரிக்கும். குடும்பத் தேவை, தாராள பணச் செலவில் நிறைவேறும்.

**கன்னி:** அனைவரிடமும் அன்புடன் பழகுவீர்கள். பேச்சிலும், செயலிலும், நேர்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். தாராள பணவரவு கிடைக்கும். சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**துலாம்:** நீண்டநாள் முயற்சி நிறைவேற வாய்ப்பு உண்டாகும். நண்பர்கள் தேவையான உதவியை மனமுவந்து வழங்குவர். தொழில், வியாபாரத்தில், நல்ல முன்னேற்றம் ஏற்படும். வருமானம் திருப்தியளிக்கும்.

**விருச்சிகம்:** எதிர்வரும் சிரமங்களை தாமதமின்றி சரி செய்யவும். நல்லவர்களின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில், அளவான மூலதனம் போதும். வருமானம் சுமாராக இருக்கும்.


**தனுசு:** மனதில் இருந்த குழப்பம் நீங்கும். தொழில், வியாபார வளர்ச்சி பெற, தகுந்த பணி புரிவீர்கள். வருமானம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு, பிரச்சினையில் நல்ல தீர்வு கிடைக்கும்.

**மகரம்:** சிலரது பேச்சு உங்களை சங்கடப்படுத்தலாம். பொது இடத்தில் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில், வருமானம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**கும்பம்:** மனதில் நல்லெண்ணம் அதிகரிக்கும். உயர்வுதாழ்வு கருதாமல், அனைவரிடமும் பழகுவீர்கள். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட வளர்ச்சிப்பணி நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும்.

**மீனம்:** முக்கிய பணி நிறைவேற தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் சராசரி அளவில் இருக்கும். அடுத்தவர் பார்வையில் அதிக பணம் செலவழிக்க வேண்டாம். உடல் நலனில் அக்கறை தேவை.

**shiyamala**
புத்தகத்துக்குள் மயிலிறகு குட்டி போட்டதுதான், குழந்தைகளுக்கான முதல் தன்னம்பிக்கை விதை!
16



# அமெரிக்காவில் இளையராஜா இசை நிகழ்ச்சி

ஒரு காலத்தில் திரைப்பட இசை நிகழ்ச்சிகளை கடுமையாக விமர்சித்தவர் இளையராஜா. "நான் சாப்பிட்டதை திரும்ப வாந்தி எடுப்பது போன்றதுதான் என் பாடலை நானே மேடையில் பாடுவது" என்று கடுமையாக சொன்னவர் இளையராஜா. ஆனால், இப்போது அவரது மன நிலையில், கருத்தில் மாற்றம். நான்கு சுவர்களுக்குள் பாடியதை மக்கள் திரள் முன் பாடுவது அவர்களுக்கும் தனக்கும் சுகமான அனுபவம் என்று கருதுகிறார். அதனால் அடிக்கடி உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இசை நிகழ்ச்சி நடத்துகிறார்.
தற்போது அமெரிக்காவில் சுற்றுப் பயணம் செய்து; இசை நிகழ்ச்சி நடத்தி வருகிறார். அண்மையில் கலிபோர்னியாவில் இசை நிகழ்ச்சி நடத்தினார். முதல் நாள் தெலுங்கிலும் மறுநாள் தமிழிலும் இசை நிகழ்ச்சிகள் நடந்தது. தொடர்ந்து நாளை சனிக்கிழமை டெக்சாஸ் மாநிலத்தில் உள்ள டல்லாஸ் நகரிலும், நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஜார்ஜியா மாநிலத்தில் உள்ள அட்லாண்டா நகரிலும் இசை நிகழ்ச்சி நடத்துகிறார். அதன்பிறகு எதிர்வரும் 24 ஆம் திகதி நியூஜெர்சி மாநிலத்தில் உள்ள நியூயோர்க்கிலும், 25ஆம் திகதி வாஷிங்டனிலும் இசை நிகழ்ச்சிகள் நடத்துகிறார். இதற்கான ஏற்பாடுகளை அமெரிக்காவில் உள்ள [illegible] நிறுவனம் செய்துள்ளது என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கறிவேப்பிலை சாதம்

**தேவையான பொருள்கள்**

அரிசி - 1 கப்
கறிவேப்பிலை - 1 கப்
கடலைப்பருப்பு - 1 தேக்கரண்டி
உளுத்தம் பருப்பு - 1 தேக்கரண்டி
தாளிக்க
கடுகு, நெய், உப்பு - சிறிதளவு

**செய்முறை**

அரிசியை வேக வைத்து உதிரியாக வடித்து ஆறவைத்துக் கொள்ளவும்.

சட்டியில் நெய் ஊற்றி நன்கு கழுவிய கறிவேப்பிலையை நெய்யில் வறுத்து மிக்சியில் அரைத்துக் கொள்ளவும்.

சட்டியில் நெய் ஊற்றி, கடுகு போட்டுத்தாளித்து உளுத்தம் பருப்பு, கடலைப் பருப்பு போட்டு பொன்னிறமாக வறுக்கவும். தற்போது, ஆற வைத்த சாதத்தில் அரைத்த கறிவேப்பிலை, நெய்யில் வறுத்த பருப்பு வகைகளை ஒன்றாகக் கொட்டி தேவையான அளவு உப்புப் போட்டு கலந்து கொள்ளவும்.

சுவையான கறிவேப்பிலை சாதம் தயார். இது உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது.

## நாளை

புரட்டாதி-01
சனிக்கிழமை -17.09.2016
திதி: பிரதமை மு.இ.11.24
நட்சத்திரம்: பூரட்டாதி மு.ப.07.22
ராகுகாலம்: 09.03-10.33 வரை
சுபநேரம்:03.03-04.33 வரை
மஹாளயபக்ஷ ஆரம்பம்

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 50 | 40 | 60 | 40 | 40 | 30 | 50 |
| கத்தரி | 60 | 50 | 60 | 60 | 40 | 40 | 90 | 35 |
| கரட் | 80 | 100 | 100 | 100 | 100 | 100 | 110 | 100 |
| மரவள்ளி | 70 | 80 | 100 | 80 | 80 | 60 | 80 | 60 |
| பயிற்றை | 50 | 60 | 80 | 40 | 40 | 40 | 100 | 60 |
| பாகல் | 100 | 70 | 120 | 100 | 100 | 120 | 150 | 70 |
| கருணைக்கிழங்கு | 100 | 120 | 120 | 160 | 100 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 110 | 90 | 90 | 30 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 80 | 80 | 100 | 80 | 80 | 120 | 90 | 70 |
| பூசணி | 40 | 40 | 40 | 30 | 30 | 60 | 70 | 30 |
| தக்காளி | 50 | 50 | 50 | 50 | 40 | 80 | 120 | 40 |
| வாழைக்காய் | 80 | 70 | 60 | 80 | 100 | 80 | 70 | 40 |
| கீரை | 30 | 20 | 40 | 20 | 30 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 30 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 80 | 70 | 100 | 70 | 100 | 200 | 70 |
| புடோல் | 50 | 40 | 40 | 60 | 40 | 40 | 70 | 50 |
| கோவா | 80 | 90 | 80 | 80 | 80 | 100 | 90 | 50 |
| வெண்டி | 80 | 60 | 60 | 80 | 40 | 40 | 70 | 30 |
| போஞ்சி | 160 | 180 | 180 | 120 | 170 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 100 | 100 | 100 | 90 | 100 |
| தேங்காய் | 40 | 25 | 50 | 35 | 30 | 20 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 180 | 200 | 280 | 220 | 300 | 200 | 120 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | 10 | 10 |
| கறிமிளகாய் | 120 | 100 | 120 | 120 | 100 | 100 | 200 | 70 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 160 | 140 | 200 | 120 | 160 | 200 | 80 | 100 |

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 650 | 500 | 700 | 700 | 800 | 700 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 300 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 700 | 600 | – |
| பாரை | 550 | 600 | 400 | 800 | 600 | – | 440 |
| சுறா | 500 | 650 | 500 | 800 | 800 | – | 600 |
| சீலா | 300 | 500 | 300 | 600 | 500 | 400 | – |
| விளை | 650 | 500 | 300 | 600 | 500 | – | 500 |
| முரல் | 300 | 500 | 300 | 500 | 400 | – | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 500 | – | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 600 | – | – |
| ஓரா | 400 | 400 | 300 | – | 450 | 300 | – |
| திரளி | 300 | 300 | 100 | 150 | 250 | 200 | 350 |
| நகரை | 250 | 300 | 100 | 250 | 300 | 300 | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 120 | 150 | – |
| ஒட்டி | 300 | 250 | 200 | – | 300 | 300 | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 400 | – | 150 |
| மதனம் | 150 | 250 | – | 400 | 300 | – | 300 |
| கொய் | 100 | 200 | 50 | 70 | 80 | 100 | – |
| பாலை | 400 | 200 | 300 | 400 | 400 | – | – |
| வாழை | 100 | 200 | – | 400 | 300 | – | – |

## இது புதுசு



ஆண்களுக்கான தோல் வடிவமைப்பு செருப்புக்கள் அறிமுகமாகியுள்ளன. தோலினால் தயாரிக்கப்பட்ட திறந்த செருப்புகளான இவை, நெடுநாள் பாவனையுடையவையாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை, ஆயிரத்து 400 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

## மைக்ரோவேவ் அவனில் சமைக்கும் போது



- மைக்ரோவேவ் அவனில் உணவை சமைக்கும் போது எந்த உணவை எவ்வளவு நேரம் சமைப்பது என்று தெரியாதபட்சத்தில், குறைந்த நேரத்தில் சமைப்பது நல்லது.
- உணவை அதிகப்படியான நேரம் சமைத்தால் மிகவும் குழைந்து போய்விடும். அல்லது அதிகமான நேரம் வைத்திருக்கும் போது தீய்ந்து போகவும் வாய்ப்பு உண்டு. ஏன் சில உணவுப் பொருள்கள் தீப்பிடித்து எரியும் அபாயமும் உண்டு.
- எனவே, எந்த உணவாக இருந்தாலும் ஒரு அளவான நேரத்தில் வைத்து சமைப்பது மிகவும் அவசியம். அப்படி சரியான நேரம் தெரியாதபட்சத்தில் குறைவான நேரத்தில் சமைப்பது நல்லது.
- ஒரு வேளை சமைத்து எடுத்ததும், உணவுப் பொருள் வேகாமல் இருந்தால், மீண்டும் ஓரிரு நிமிடங்கள் மைக்ரோவேவ் அவனில் வைத்து எடுக்கலாம்.
- இதனால் உணவு சரியான ருசிக்கு வந்து விடும். அடுத்த முறை சமைக்கும் போது சரியான நேரத்தை நீங்கள் தெரிந்து கொள்ள இயலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## நுட்பம்



### கடலில் சிக்கியவர்களை மீட்கும் ரோபோ அறிமுகம்

வளைகுடா நாடுகளில் முதன்முறையாக கடற்கரைப் பகுதியில் ஆபத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணிகளுக்காக புதிய நவீன ரோபோக்கள் அறிமுகம் செய்யபட்டுள்ளன. 11 கிலோ, 125 செ.மீ உயரம் உள்ள இந்த ரோபோக்கள் ரிமோட் மூலம் இயக்கப்படும். அது மனிதனை விட 12 மடங்கு அதி வேகமாக நீந்திச் செல்லும் திறன் உடையது. மணிக்கு 35 கிலோ மீற்றர் வேகத்தில் செயல்படும். தொடர்ந்து 130 கிலோ மீற்றர் தொலைவு வரை பயணம் செய்யும் வகையில் சக்தி வாய்ந்த மின்கலங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

சிவப்பு நிறத்தில் ரப்பர் பொருள்களால் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த ரோபோக்களால் கடலில் சிக்கியவர்களை எளிதில் அடையாளம் காண முடியும். இவை கடலில் தத்தளிப்பவர்களின் அருகில் சென்றவுடன் சிறிய படகு போன்று விரியும் தன்மையுடையது. கடலில் சிக்கியவர்கள் படகில் ஏறியவுடன் அவர்களை மீட்டுக் கரைக்குத் திரும்பும். ஒரே சமயத்தில் 5 பேர் வரை இந்த ரோபோ மூலம் மீட்க முடியும். எந்த ராட்சத அலையிலும் செயல்படும் வகையிலும், ரேடியோ அலைக் கற்றைகள் மூலம் கட்டுப்படுத்தப்படுவதால் தொலை தொடர்பு பாதிக்கப்பாது என்று தெரிவிக்கப்பட்டது.



### அப்பிள் வழங்கும் இலவச செயலிகள்

அப்பிள் நிறுவனம் காசு கொடுத்து தரவிறக்க வேண்டிய சில செயலிகளை இலவசமாக வழுங்குகிறது.

மொத்தமாக 11 செயலிகளை குறித்த காலத்திற்கு இலவசமாகப் பெற முடியும். ஐபோன்–7, ஐபோன்–பிளஸ் முதலான ஸ்மார்ட்போன்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ள தருணத்தில், இலவச தரவிறக்கம் பற்றிய அறிவித்தல் வெளியாகிறது.

இவற்றில் Future என்ற செயலி முக்கியமானது. இது உங்கள் நாளேட்டை இலகுவாக்க வழிவகுக்கும். அன்றாடப்பணிகளை பதிவு செய்து வைக்கும் பட்சத்தில், சகல பணிகளையும் ஒரே பார்வையில் காண இந்தச் செயலி உதவும்.

IPhocus என்ற செயலி போனைப் பயன்படுத்தி வீடியோ படம் பிடிக்கையில், கமெரா அசைவுகளைக் கட்டுப்படுத்த உதவுகிறது.

புதிய தயாரிப்புகள் அறிமுகப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இலவசமாக செயலிகளை வழங்குவது அப்பிளின் மரபு. இவை எத்தனை காலத்திற்கு இலவசமாக கிடைக்கும் என்பதை உறுதிப்படுத்தும் தகவல்கள் வெளியாகவில்லை. (கு)



# யாழ். இளைஞர்களுக்கு வலுவூட்டும் களனி சக்தி

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு வலுவூட்டும் களனி சக்தி யாழ்ப்பாண குடாநாட்டைச் சேர்ந்த இளைஞர்களை, இலத்திரனியல் தொழில்நுட்பவியலாளர்களாக தரமுயர்த்தும் களனி கேபிள்ஸின் களனி சக்தி ஒரு வருட நிபுணத்துவம் வாய்ந்த நிகழ்ச்சித் திட்டத்தின் முதல் கட்டம் பூர்த்தியடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சிகளைப் பூர்த்தி செய்த முதல் தொகுதி மாணவர்களுக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தில்நடைபெற்ற வைபவத்தின்போது சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வில், யாழ். பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரான மூத்த பேராசிரியர். வசந்தி அரசரட்ணம், களனி கேபிள்ஸ் பிஎல்சியின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மஹிந்த சரணபால, யாழ். பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி. ஏ.அற்புதராஜா, களனி கேபிள்ஸ் பிஎல்சி சந்தைப்படுத்தல் பொது முகாமையாளர் அனில் முனசிங்க மற்றும் களனி சக்தி கற்கைப் பணிப்பாளர் ரி. திருவரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

**வணிகம்**

இலத்திரனியல் தொழில்நுட்பப் பிரிவில் சுயதொழில்வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்த சுமார் 50 இளை ஞர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இவர்களுக்கு சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், இல்லங்கள் மற்றும் தொழிற் சாலைகளில் வயர்களை பதிவது தொடர்பான அறிவும் வழங்கப்பட்டிருந்தது. இந்த நிகழ்வை யாழ். பல்கலைக் கழகத்தின் பொறியியல் பீடம் ஏற்பாடு செய்திருந்தது. களனி சக்தி முதல்தொகுதி 50 மாணவர்கள் தமது கற்கைகளை பூர்த்தி செய்துள்ளதைத் தொடர்ந்து, இரண்டாம் தொகுதிக்கு ஆயிரக்கணக்கான விண்ணப்பங்களிலிருந்து மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். களனி சக்தி நிபுணத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் என்பது, களனி சவிய மற்றும் களனி சக்திநிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரான ஜயந்த விஜேசிங்க மற்றும் யாழ். பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி. ஏ.அற்புதராஜா ஆகியோரினால் களனி கேபிள்ஸ் பிஎல்சியின் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மஹிந்த சரணபாலவின் ஆலோசனைகளுக்கமைய ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

முதல் தொகுதி மாணவர்களுக்கான சான்றிதழ்கள் பகிரும் நிகழ்வில் வர்த்தக நாம அபிவிருத்தி முகாமையாளர் சன்ன ஜயசிங்க, விற்பனை முகாமையாளர் (ஏற்றுமதிகள்) தேவிந்த லொரரென் சுஹேவா, விற்பனை முகாமையாளர் (வலு மற்றும் சக்தி ரோஹண வாத்துவகே, விற்பனைக் கட்டுப்பாட்டாளர் ரால்வ் ரொரன், மனித வளங்கள் முகாமையாளர் கிஹான் விதானகம, வலய விற்பனை முகாமையாளர் கே.ஏ.ராஜ்குமார் மற்றும் உதவி விற்பனை முகாமையாளர் ரி.என்.கே.டி. சில்வா ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (த)

## வெளிநாட்டு முதலீட்டாளரை கவர அரசு நடவடிக்கை

வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவரும் நோக்கில் அரசு பல நடவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காணிகளைக் குத்தகைக்கு எடுக்கும் வெளிநாட்டவர்களிடம் இருந்து 300 சதவீத வரி அறவிடப்படுகின்றது. இதன் முதற்படியாக, இந்த வரியை மீளப்பெற்று வெளிநாட்டவர்களுக்குச் சகாயத்தை ஏற்படுத்த அரசு தீர்மானித்துள்ளது. இதற்கு ஏற்ற வகையில், காணி தொடர்பான சட்டத்தை மாற்றத் தீர்மானித்துள்ளதாக, காணி அமைச்சின் செயலாளர் ஐ.எச்.கே. மஹாநாம தெரிவித்துள்ளார்.

இந்த வரியை மீளப் பெறுவதன் மூலம் வெளிநாட்டு முதலீட்டாளர்களை அதிக எண்ணிக்கையில் கவர முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் இந்தச் சட்டம் திருத்தி அமைக்கப்படுவது தொடர்பான அரச வர்த்தமானி இந்த வாரத்தில் வெளியிடப்படும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (து)

## நாணய மாற்று விகிதம்

| | |
|---|---|
| பஹ்ரைன் (தினார்) | -386.08 |
| ஐ.இராச். (பவுண்டு) | -192.66 |
| ஐரோப்பியா (யூரோ) | -163.64 |
| சுவிஸ் (பிராங்) | -149.49 |
| ஐ.அமெ.(டொலர்) | -145.50 |
| கனடா(டொலர்) | -110.12 |
| ஆஸி.(டொலர்) | -108.53 |
| சிங்கப்பூர் (டொலர்) | -106.49 |
| கட்டார் (ரியால்) | -39.95 |

## சாதனையாளர்களுக்கு ஊக்கமளிக்கும் சியெட்

இமய மலை சாதனையாளர்களுக்கு சியெட் ஊக்கமளிப்பு ஆற்றல், உற்சாகம், மனோதிடம், பொறுமை இவை அனைத்தும் ஒன்றிணைந்து இரு இலங்கையர்களை உலகின் மிகவும் உயரமான இமய மலையின் உச்சிக்குக் கொண்டு சென்றன.

இலங்கையின் முன்னணி டயர் உற்பத்தியாளர்களான சியெட் களனி ஹோல்டிங்ஸ் தனது ஊழியர்களுக்கு இதிலிருந்து சிறந்த முன் அனுபவத்தைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் இந்தச் சாதனையாளர்களுடன் உற்சாகச் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

இமயமலை சிகரத்தை அடைந்த சாதனையாளர்களான ஜயந்த இரு உதுமபலா மற்றும்யோலுன் பீரிஸ் ஆகியோருடனேயே இந்தச் சந்திப்பு இடம் பெற்றது. களனியில் உள்ள நிறுவனத்தின் தலைமையகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சகல நிலைகளையும் சேர்ந்த ஊழியர்களும் சியெட் முகாமைத்துவக் குழுவோடு இணைந்து பங்கேற்றனர்.

எமது ஊழியர்களுக்கு பயிற்சி அளித்தல், உற்சாகமூட்டல், எழுச்சியூட்டல் என்பனவற்றை வழங்கி அவர்களை தொடர்ச்சியாக முன்னேற்றுவது எமது வெற்றியின் முன்னணிக் காரணிகளுள் ஒன்றாகத் திகழுகின்றது. இந்த அதிசயிக்கத்தக்க இலங்கையர்கள் இருவரினதும் வியக்கத்தக்க ஆற்றல் வெற்றித் திட்டத்துக்கு தேவையான ஆழமான உள்ளார்ந்த காரணியை வழங்குகின்றது என்று சியெட் களனியின் முகாமைத்துவப் பணிப்பாளர் விஜய் கம்பீர் கூறினார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

# இலங்கையிடம் மன்னிப்புக் கேட்டதாம் டென்மார்க்

கொழும்பு, செப். 16

நுழைவிசைவுக்கு விண்ணப்பிக்கக் கூடிய நாடுகளில் தமிழீழத்தை அங்கீகரித்தமை தொடர்பில் டென்மார்க் அரசு இலங்கையிடம் மன்னிப்புக் கோரியதாக, அயலுறவுத் துறை அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளன கொழும்பு ஊடகங்கள்.

நுழைவிசைவு விண்ணப்பத்தை நிரப்பும் படிவத்திலுள்ள நாடுகள் தொடர்பான பிரிவில் தமிழீழமும் டென்மார்க் குடிவரவுத் திணைக்கள இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இலங்கை அயலுறவுத்துறை அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய இந்த விடயம் டென்மார்க் அரசின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. இதன் காரணமாக டென்மார்க் அரசு இலங்கையிடம் மன்னிப்புக் கோரியதாகவும், தமிழீழத்தை நீக்குவதாக உறுதியளித்ததாகவும் அயலுறவுத்துறை அமைச்சின் உயர் அதிகாரி குறிப்பிட்டார் என்று அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, ஆஸ்திரேலிய குடித்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விவரவியல் திணைக்களம் இணையம் மூலமான குடித்தொகைக் கணக்கெடுப்பில் தமிழீழத்தை ஒரு நாடாக அடையாளம் கண்டிருந்தது. இலங்கையின் எதிர்ப்புக் காரணமாக ஆஸ்திரேலியாவும் தமிழீழத்தைக் கணக்கெடுப்புப் பட்டியலில் இருந்து நீக்கியது.

டென்மார்க் அரசு தமிழீழத்தை ஒரு நாடாக அங்கீகரித்தமை தொடர்பில் பிவித்துறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில விமர்சனம் வெளியிட்டிருந்தார்.

செல்வாக்குமிக்க புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மிகவும் நெருக்கமாக மேற்குலக நாடுகளின் அரசுகளுடன் செயற்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியிருந்தார். 2009ஆம் ஆண்டு தமிழீழ விடுதலை புலிகளின் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மேற்குலக அரசுகளுடனான ஒத்துழைப்பை மேம்படுத்தியுள்ளதாகவும் உதய கம்மன்பில தெரிவித்தார். (வ-5)

## 10 வருடங்களின்...

ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி தியாக தீபம் திலீபன் உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம் பித்தார். 29ஆம் ஆண்டு நினைவு நாள், தமிழர் வாழும் தேசம் எங்கும் எழுச்சியுடன் நேற்று நினைவுகூரப்பட்டது.

தமிழர் தாயகத்தில் 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் திலீபனின் நினைவு நாள் பகிரங்கமாக நினைவு கூரப்படவில்லை. 7 ஆண்டுகளின் பின்னர் - நேற்றைய தினம் நல்லூரில் அமைந்துள்ள திலீபனின் நினைவுத் தூபியில் பகிரங்கமாக நினைவேந்தல் நடைபெற்றது.

நல்லூர் கோயில் சுற்றாடலில், திலீபன் உணவு ஒறுப்புப் போராட்டம் மேற்கொண்ட இடத்தில் முதலில் அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் நல்லூர்க் கோயிலின் பின்புறமாகவுள்ள திலீபனின் நினைவுத் தூபியில் முதன்மை அஞ் சலி நடைபெற்றது.

இராணுவத்தினரால் இடித்தழிக்கப்பட்டு எஞ்சியுள்ள தூபிக்கு மலர் தூவி, ஈகச்சுடரேற்றி, அகவணக்கம் செலுத்தி ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் அஞ்சலி செலுத்தினர். (வ-5-32-101-106)

## மகாவலி...

சொந்தமான நிலங்களை பிடிக்கும் நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பிடிக்கப்பட்டுள்ள பகுதியில் இரு பௌத்த ஆலயங்களும் நிறுவப்பட்டுள்ளதாக, கிழக்கு மாகாண சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டினர்.

பொலனறுவையிலிருந்து முன்னெடுக்கப்படும் சிங்களக் குடியேற்றங்கள் மேற்படி தமிழ் பகுதிக்குள் மூன்று கிலோ மீற்றர் வரை ஊருடுவியுள்ளன என்று அவர்கள் குற்றம் சுமத்தினர்.

பொலனறுவையிலிருந்து சிங்களக் குடியேற்றங்கள் மட்டக்களப்பின் கோரளைப்பற்று தென்பகுதிக் கிராமங்களை நோக்கி நகரத் தொடங்கியுள்ளன. மாதவனை என்ற இடத்தில் பௌத்த ஆலயம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. சில நாள்களிற்கு முன்னர் இந்தப் பகுதியில் காணமற்போன கால்நடைகளைத் தேடிச்சென்ற தமிழ் கிராமத்தவர்கள் சிலர் தாக்கப்பட்டனர்.

இலங்கை அரசு அபிவிருத்தி என்ற பெயரில் முன்னெடுத்துவரும் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தை சிங்களக் குடியேற்றங்களை முன்னெடுப்பதற்காகவே பயன்படுத்துகின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் குற்றம் சுமத்துகின்றனர். (வ-5)

## சீமானின்...

சென்னையில் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தலைமையில் நேற்று நடந்த பேரணியில் தொண்டர் ஒருவர் திடீரெனத் தீக்குளித்தார்.

கர்நாடகாவில் தமிழர்கள் மீது ஏற்படுத்தப்பட்டுள்ள வன்முறைகளைக் கண்டித்து தமிழகத்தில் முழு அடைப்புப் போராட்டம் நடைபெறவுள்ள நிலையில், சென்னை எழும்பூரில் 'நாம் தமிழர்' கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தலைமையில் நேற்று பேரணி நடைபெற்றது.

பேரணியில் இயக்குநர்கள் அமீர், சேரன் மற்றும் ரவி மரியா உள்ளிட்டோரும் ஏராளமான கட்சித் தொண்டர்களும் பங்கேற்றனர். பேரணியில் திருவாரூரைச் சேர்ந்த விக்னேஸ்குமார் பங்கேற்றார்.

பேரணியில் சென்ற விக்னேஸ்குமார் திடீரெனத் தீக்குளித்தார். இதனால், உடல் முழுவதும் பலத்த தீக் காயம் ஏற்பட்டது. உடனடியாக அருகில் இருந்தவர்கள் தண்ணீர் மற்றும் வேப்பம் இலை கொண்டு தீயை அணைத்தனர். பின்னர் விக்னேஸ்குமாரை மீட்டு கீழ்ப்பாக்கம் அரச மருத்துவமனையில் சிகிச்சைக்காக அவரைச் சேர்த்தனர். அங்கு அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. (வ-5)

## யாழ்....

மாணவர்கள் குரல் எழுப்பினர். இதனை அடுத்து வீட் டின் உரிமையாளர் பொலிஸாருக்குச் சம்பவம் தொடர்பில் அறிவித்தார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் அத்துமீறி வீட்டிற்குள் நுழைந்து தாக்குதல் நடத்திய மாணவர்கள் தொடர்பில் கேட்டறிந்து, அவர்களை இனம் கண்டு கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. இருதரப்பு மாணவர்களையும் சமாதானமாகச் செல்லுமாறு பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தமக்கு அறிவிக்கப்படவில்லை என்று யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்தது.

இதேவேளை, கடந்த மாதம் யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற விஞ்ஞான பீட புது மாணவர்கள் வரவேற்பு நிகழ்வில் தமிழ் - சிங்கள மாணவர்களுக்கு இடையே இடம்பெற்ற அடிதடி விவகாரம் இனவாதமாகப் பரப்புரை செய்யப்பட்டு ஜனாதிபதி மட்டத்துக்குச் சென்று தீர்த்து வைக்கப்பட்ட நிலையில், நேற்றுமுன்தினம் அதேபோன்றதொரு சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-4,10)

## நாளை...

நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வுக்கான விழா மேடை அமைக்கும் பணி நேற்று இடம்பெற்றது. இராணுவத்தினரே இந்தப் பணியை முன்னெடுத்தனர். அத்துடன் யாழ். மாவட்டச் செயலகச் சுற்றாடலைத் துப்புரவு செய்யும் பணியும் நடைபெற்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நடப்பு ஆண்டு தேசிய தைப்பொங்கல் நிகழ்வு யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற போது கலந்து கொண்டிருந்தார். அதன் பின்னர் தற்போது யாழ். மாவட்டத்திற்கு வருகை தருகிறார்.

இதேவேளை, ஜனாதிபதி பிரதமர் உள்ளிட்டோர் பங்கெடுக்கும் நிகழ்வுகளுக்கான மேடை ஒழுங்கமைப்பு, ஒலி ஒளி அமைப்புக்கள் என்பனவற்றை இராணுவத்தினரே மேற்கொண்டு வருகின்றனர். கடந்த 9ஆம் திகதி ஜனாதிபதி கலந்து கொண்ட நிகழ்வுக்கான ஒழுங்கமைப்புக்களையும் இராணுவத்தினரே முன்னெடுத்திருந்தனர். (வ-5-ரி)

## பள்ளிமுனைக்...

கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், கடந்த முதலாம் திகதி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சிக்குக் கடிதம் அனுப்பியிருந்தார்.

இந்தக் கடிதத்திற்குப் பதிலளித்துள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், கடல்வழியாக இடம்பெறும் கடத்தல் உள்ளிட்ட குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த கடற்படையினர் மேற்படி பிரதேசத்தில் நிலை கொண்டிருக்க வேண்டிய தேவை உள்ளது. இதனால் காணியை விடுவிக்க முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தமது காணியை விடுவிக்குமாறு வலியுறுத்தி பாதிக்கப்பட்ட மக்களால் மன்னார் மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. அந்த வழக்கு நிலுவையில் உள்ளது. வழக்கு முடிவுறும் வரையில் மேற்படி காணியில் எந்தவொரு நடவடிக்கையையும் எந்தத் தரப்பினரும் மேற்கொள்ள முடியாது என்று நீதிமன்றம் கடந்த வாரம் உத்தரவிட்டது. (வ-5-21)

## மரண அறிவித்தல்

### லூக்காஸ் பற்றிமா மனோகரன்

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)

அன்னை மடியில்: 08.08.1947 — ஆண்டவன் அழைப்பில்: 13.09.2016



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லூக்காஸ் பற்றிமா மனோகரன் 13.09.2016 செவ்வாய்க்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தி லூக்காஸ் - மேரி மாகிறட் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் ஜெராட் சுவேந்திரன் (ஜேர்மனி), பிறிஜற் வனஜா (ஜேர்மனி), செல்வநாயகி (விஜயா) ஆகியோரின் பாசமிகு மூத்த சகோதரனும், ஜோண் விஜேந்திரன், ஜசிந்தா, எட்வின் பீரிஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும், Dr. றொஷாணி பியூறன் (ஜேர்மனி), றொஷாந்தன், காலஞ்சென்ற அன்ரோ நிஷாந்தன் மற்றும் Dr. சுகிர்தனன் (ஜேர்மனி), Dr. தர்ஷனன் (அயர்லாந்து), மிதுர்ஷனன் (B.Sc.), கீர்த்தனா ஆகியோரின் பாசமிகு மாமனும், சியாம், பிரவீன் ஆகியோரின் பாசம் மிக்க பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (17.09.2016) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பண்டத்தரிப்பு புனித செபமாலை அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி நிறைவேற்றப்பட்டு புனித செபமாலை அன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"அன்பகம்"
புனித அந்தோனியார் வீதி,
பண்டத்தரிப்பு.

தகவல்:
அல்வின் எட்வின் பீரிஸ்
விஜயா.


(ஜே.4626)
(13.18)

077 704 8999

## மரண அறிவித்தல்கள்

### திருச்செல்வம் பாலச்சந்திரன்

தோற்றம்
09 . 01 . 1965



மறைவு
27 . 08 . 2016

யாழ்ப்பாணம்,கொட்டடியைப் பிறப்பிடமாகவும், Canada Toronto வை வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் பாலச்சந்திரன் 27.08.2016 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திருச்செல்வம் - செல்வரஞ்சிதம் தம்பதிகளின் அன்பு மகனும், ரேவதியின் அன்புக் கணவரும், கௌசிகா (கனடா), தனுஷா (கனடா), சந்தோஷ் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,பிரேமச்சந்திரன் (பிரேம்- கனடா), தர்மச்சந்திரன் (தர்மா -கனடா), லக்கிச்சந்திரன் (லக்கி-கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.09.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எக்டின்டன் Toronto Canada வில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரதானவீதி, வீமன்காமம்,
தெல்லிப்பழை.

தகவல்: மனைவி,
மைத்துனர் (கிருபாகரன்)

011 243 7560 (V/103) (11,17)

### திருமதி பொன்மணி கதிர்காமத்தம்பி



யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் செட்டித் தெரு, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்மணி கதிர்காமத்தம்பி 14.09.2016 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம்பிள்ளை - செல்வப்பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், கதிர்காமத்தம்பியின் அன்பு மனைவியும், கௌரி, சிவராசா அனுசியா, குகபாலன்,சுகந்தி ஆகியோரின் அன்புத் தாயும், பாலேந்திரா (சுவிஸ்), தேவசிகாமணி (சிங்கப்பூர்), உதயதர்சினி (தெல்லிப்பழை) ஆகியோரின் மாமியும், பாரிஜா, பவித்திரா (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2016) வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோரியடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

325, பிரதான வீதி,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

021 226 4920

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக் கட்சி – கூட்டமைப்பு இடையே எந்தவொரு உடன்படிக்கையும் இல்லை

## அமைச்சர் பைசர் முஸ்தப்பா தெரிவிப்பு

கொழும்பு, செப். 16

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே எந்தவொரு உடன்படிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மையக் குழு உறுப்பினரும் அமைச்சருமான பைசர் முஸ்தப்பா நேற்றுத் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கினால் எதிர்வரும் தேர்தல்களில் இரண்டு கட்சியும் ஒன்றிணைந்து போட்டியிடலாம் என்று, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மையக் குழு உறுப்பினரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளருமான மகிந்த அமரவீர குறிப்பிட்டார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று கொழும்பில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் அமைச்சர் பைசர் முஸ்தப்பா கலந்து கொண்டார்.

மேல் மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய சில தினங்களுக்கு முன்னர் வெளியிட்ட கருத்துத் தொடர்பில், பைசர் முஸ்தப்பாவிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து போட்டியிடும் அறிகுறி காணப்படுகின்றது. இதன் ஒரு கட்டமாக எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், ஜனாதிபதியுடன் பேசியுள்ளதாக இசுரு தேவப்பிரிய குறிப்பிட்டுள்ளார். இது உண்மையா?" என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு,

சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இடையில் எந்தவொரு உடன்படிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான ஜனாதிபதியின் முன்னெடுப்புக்கள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் திருப்தி வெளியிட்டிருந்தார்.

இதனை அடிப்படையாக வைத்து எமது கட்சியின் ஒரு சில அரசியல்வாதிகள் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். அதில் உண்மையில்லை.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ் - முஸ்லிம் என்ற பாகுபாடின்றி பல்வேறு கருத்துக்களைக் கொண்ட கட்சிகளுடன் கூட்டமைப்பாக எதிர்வரும் தேர்தல்களில் போட்டியிட தற்போது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. ஐக்கிய தேசிய கட்சி பல்வேறு தமிழ்க் கட்சிகளுடன் கூட்டமைப்பாக செயற்பட்டு வருகின்றது. அதேபோன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் அனைத்து இனங்களையும் சேர்ந்த கட்சிகளுடன் இணைந்து செயற்பட தயாராகவுள்ளது என்றார் அமைச்சர் பைசர் முஸ்தபா.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் அமைச்சர் மகிந்த அமரவீர, கொழும்பில் நேற்று நடைபெற்ற பிறிதொரு செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில்:

நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இதுவரை எந்தவொரு பேச்சும் நடத்தவில்லை. உத்தியோகப்பற்றற்ற முறையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஒரு சில உறுப்பினர்கள் இது தொடர்பில் எம்முடன் பேசியுள்ளார்கள்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆதரவு வழங்கினால், நிச்சயம் எதிர்வரும் தேர்தலில் ஒன்றாகப் போட்டியிடத் தயாராகவுள்ளோம் – என்றார்.

(வ-5,38)

# மக்கள் களரி நாடக விழாவில் இன்று சுவர்க்கத்தைத் தேடி ஆவணப்படம்

யாழ்ப்பாணம் செப் 16

மக்கள் களரி நாடகவிழா செம்மணி வீதியில் உள்ள சாதனா பாடசாலை மைதானத்தில் அமைக்கப்பட்டிருக்கும் மக்கள் களரி நகரும் அரங்கில் கடந்த 7ஆம் திகதி முதல் நடைபெற்று வருகிறது.

இந்த நாடகவிழாவில் இன்று வெள்ளிக்கிழமை இலங்கையின் மூத்த நாடகம் மற்றும் திரைப்பட கலைஞரான தர்மசிறி பண்டார நாயக்கவின் 'சுவர்க்கத்தை தேடி' என்ற ஆவணப் படம் திரையிடப்படுகின்றது. இலங்கை வரலாற்றின் தொடக்கம் தொட்டு 1959ஆம் ஆண்டு பிரதமராக இருந்த எஸ்.டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்க கொல்லப்பட்டது வரை ஆவணப்படம் விரிகிறது. இன்று மாலை 6.30 மணிக்கு மக்கள் களரி நகரும் அரங்கில் இந்தத் ஆவணப்படம் காட்டப்படுவதோடு, இது தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டது.

மேலும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு குழந்தை ம.சண்முகலிங்கம் மொழிபெயர்த்த "வெண்கட்டி வட்டம்' என்ற நாடகத்தின் பிரதி புத்தகமாக வெளியிடப்படுகின்றது.

அத்துடன் எதிர்வரும் 21ஆம் திகதி மு.ப. 6.30 மணிக்கு அரங்கேறும் 'சரண்தாஸ்' நாடகத்துடன் நாடகவிழா இனிதே நிறைவுபெறுகிறது. மறுநாள் 22ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு கொழும்பு, இலங்கை மன்றம் நிறுவனத்தினது, டிஜிட்டல் அக்கடமி ஏற்பாடு செய்திருக்கும் குறுந்திரைப்படங்கள் மற்றும் திரைப்படங்கள் நகரும் அரங்கில் திரையிடப்படவிருக்கின்றன. அன்றைய தினம் மாலை 5.00 மணிக்கு 'நாளைய அரங்கை நோக்கி' என்ற தலைப்பில் கலந்துரையாடல் இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டது.

இந்தநிகழ்வில் குழந்தை ம.சண்முகலிங்கம், கலாநிதி சுனில் விஜேசிறிவர்தன, சண்முகம் முத்துலிங்கம், சோ.பத்மநாதன், அ.யேசுராசா, சாமிநாதன் விமல், ரதிதரன் போன்றோர் கலந்துகொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(வ-ரீ)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஓய்வுநிலை படை அதிகாரிகள்

## களமிறக்குவதில் மகிந்த அணி தீவிரம்

கொழும்பு, செப். 16

ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை உள்ளூராட்சி தேர்தலில் களமிறக்குவது தொடர்பில் மகிந்த அணியினர் தீவிர கலந்துரையாடல் நடத்தியுள்ளதாகத் தெரியவருகின்றது.

பொது எதிரணி உறுப்பினர்களுக்கும், மகிந்த ராஜபக்சவுக்கும் இடையேயான கலந்துரையாடல் மரியானையிலுள்ள மகிந்தவின் இல்லத்தின் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான குமார வெல்கம, பந்துல குணவர்தன, வாசுதேவ நாணயக்கார, காமினி லொக்குவே உட்பட மேலும் பலர் சந்திப்பில் பங்கேற்றனர்.

மூன்றரை மணிநேரம் நடைபெற்ற கலந்துரையாடலில், உள்ளூராட்சி சபைத் தேர்தல் குறித்தே கூடுதல் கவனம் செலுத் தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. தேர்தலை விரைந்து நடத்துவதற்கு அரசுக்கு எவ்வாறு அழுத்தம் கொடுக்கலாம், தொகுதிகளை எவ்வாறு பலப்படுத்தலாம் என்பது பற்றி கருத்துப் பரிமாற்றல்கள் இடம்பெற்றுள்ளன. ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் களமிறக்க வேண்டும் என்ற யோசனையும் முன்வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(வ-5)

SUPER BALL
සුපර් බෝල්
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 550
சீட்டிழுப்பு திகதி 2016.09.15
வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
02 23 32 35 0
சுப்பர் ஜக்பொட்
ரூ.50,659,360/=
வெல்லப்படவில்லை

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 1297
சீட்டிழுப்பு திகதி 2016.09.15
வெற்றி இலக்கங்கள்
16 48 50 55 C
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 24,508,320/=

புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
42-3339 லேடன் லொறி, 26 - 7530 இசுசுலொறி
விற்பனை விலைமனுக்கோரல்

01. எமது சங்கத்திற்குச் சொந்தமான நல்ல நிலையில் உள்ள 42-3339 லேடன் லொறியும் 26-7530 இசுசுலொறியும் விற்பனை செய்யப்படவுள்ளது. இதற்கான விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

02. இவற்றை நேரில் பார்வையிட விரும்புவோர் விடுமுறை தவிர்ந்த ஏனைய கிழமை நாள்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை சங்கத்தில் பார்வையிட்டு விலை மனுக் கோரல் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து 30.09.2016 ஆம் திகதிக்கிடையில் பதிவுத் தபாலில் சங்கத்திற்கு அனுப்பி வைக்கவும். இதற்கு பின்னர் வரும் விலை மனுக் கோரல் எதுவும் கொள்ளப்படமாட்டாது. இவ் விற்பனை தொடர்பான இறுதித் தீர்மானம் இயக்குநர் சபையில் முடிவு செய்யப்படும்.

தலைவர் / பொது முகாமையாளர்.
புங்குடுதீவு – நயினாதீவு பல நோ.கூ.சங்கம்

துயர் பகிர்கின்றோம்

யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் கதிர்காமத்தம்பி சிவராசா அவர்களின் பாசமிகு தாயார்

கதிர்காமத்தம்பி பொன்மணி

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பணிப்பாளர் சபையினரும், செயலாளரும், நிர்வாகத்தினரும்
யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம்
530, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# நயினையில் இன்று பௌர்ணமி விழா

தீவகக் கல்வி வலயத்தின் பௌர்ணமி விழா இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு நயினாதீவு அமுத சுரபி மண்டபத்தில் நடைபெறவுள்ளது என விழா ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவும் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரும் கலந்து கொள்ளவுள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-ரீ)

## பல்லாயிரக்...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

சந்நிதி முருகன் ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்று வியாழக்கிழமை பக்திப் பரவசமாக இடம்பெற்றது.

அதிகாலையில் இடம் பெற்ற சிறப்பு பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து அடியவர்களின் அரோகரா கோசத்தின் மத்தியில் முருகப் பெருமான் தேர் ஏறி அடியவர்களுக்கு காட்சியளித்தார். யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பேருந்துகளின் சேவையினால் அதிக எண்ணிக்கையான அடியவர்கள் தேர்த் திருவிழாவில் கலந்து கொண்டனர். புலம்பெயர் நாடுகளிலிருந்து வந்த அதிக எண்ணிக்கையானவர்களும் கலந்து கொண்டார்கள்.

அடியவர்கள் கற்பூரச் சட்டி எடுத்தும் அடியழித்தும் அங்கப்பிரதட்டை செய்தும் தூக்கு காவடிகள் பறவைக் காவடிகள் மற்றும் [illegible] காவடிகள் எடுத்தும் தமது நேர்த்திக்கடன்களை நிறைவு செய்தார்கள்.

(வ-33,37)

# நாமலுக்கு எதிரான குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்ய உயர் நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, செப். 16

லஞ்ச ஊழல் ஆணைக்குழுவை அவமதிப்புச் செய்தமை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு எதிராக ஒக்டோபர் மாதம் 3ஆம் திகதிக்கு முன்னதாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யுமாறு லஞ்சம் மற்றும் மோசடிகளை விசாரணை செய்யும் ஆணைக் குழுவுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

லஞ்ச மற்றும் ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் ஆணைக்குழுவினால், நாமல் ராஜபக்சவுக்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற விசாரணைகளுக்கு அவர் சமுகமளிக்கத் தவறிய காரணத்தால், ஆணைக்குழுவை அவமதித்ததாக உயர் நீதிமன்றத்தில் கடந்த ஜூன் மாதம் 30ஆம் திகதி லஞ்ச மற்றும் ஊழல் ஆணைக்குழுவால் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இது தொடர்பான வழக்கு விசாரணை தலைமை நீதியரசர் கே.சிறீபவன் தலைமையிலான மூன்று நீதியரசர்கள் அடங்கிய குழாம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள் இந்த வழக்கு தொடர்பில் தமது எதிர்ப்பை வெளியிட்டனர். எனினும் பிரதிவாதி தரப்பு வாதங்களை நிராகரித்த உயர் நீதிமன்றம், நாமல் ராஜபக்சவுக்கு எதிராக எதிர்வரும் 3ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக அவமதிப்புத் தொடர்பில் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்டது.

வழக்கு எதிர்வரும் 14 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று நீதியரசர்கள் குழாம் அறிவித்தது.

(வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். வைத்தியசாலை படுகொலையுடன் தொடர்புடையவருக்கு ஐ.நாவில் பதவியா?

## கேள்வியெழுப்புகிறது 'இன்னர் சிற்றி பிரஸ்'

நியூயோர்க், செப்.16

ஐ. நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனின் மருமகனும் இலங்கையில் நிலை கொண்டிருந்த இந்திய அமை திப்படையில் அங்கம் வகித்த வருமான மேஜர் சித்தார்த் சட்டர் ஜிக்கு கென்யாவில் ஐ. நா.வதிவிட இணைப்பாளர் பதவி வழங்கப் பட்டது.

1987ஆம் ஆண்டு இந்திய அமை திப்படையினர் யாழ். போதனா வைத்தியசாலையில் அத்துமீறி நுழைந்து கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு மேற்கொண்ட சம்பவத்துக்குப் பொறுப்புக்கூற வேண்டிய நிலையில் உள்ளவரும், போர்க்குற்றம் புரிந்தவருமான மேஜர் தர அதிகாரி சித்தார்த் சட்டர் ஜிக்கு ஐ. நாவின் உயர் பதவி எவ் வாறு வழங்கப்பட்டது என்று இன் னர் சிற்றி பிரெஸ் நிறுவனம் கேள்வி எழுப்பியுள்ளது.

பன்னாட்டுப் பொது சேவை நியம னங்களுக்கான விதிமுறைகளை மீறி, தனது குடும்ப உறவினருக்கு ஐ. நா. பொதுச்செயலாளர் பான் கீ மூன் கென்யாவுக்கான வதிவிட இணைப்பாளர் பதவியை வழங்கி யிருப்பதாகவும் இன்னர் சிற்றி பிரெஸ் குற்றஞ்சாட்டுகிறது.

இலங்கை விவகாரத்தில் ஐ. நா. சபையின் தவறான அணுகு முறைக்கு இந்திய அமைதிப்படை யின் மூத்த அதிகாரியும் அமைதிப் படையின் கட்டளைத்தளபதியும் பான் கீ மூனுக்கு நெருக்கமான வருமான ட்ல்வீர் சிங், விஜய் நம்பி யார் ஆகியோரின் தவறான வழி காட்டலே காரணம் என்றும் இன்னர் சிற்றி பிரெஸ் சந்தேகம் வெளி யிட்டது. (வ-4,5)

## யாழ். நீதிமன்ற வாசலில் கைது;

# பொறுப்பதிகாரியை முற்படுமாறு உத்தரவு

யாழ்ப்பாணம், செப். 15

யாழ்ப்பாண நீதிவான் மன்றிலிருந்து வெளியேறிய 3 பேர் வெள்ளை வாகனத்தில் வந்தவர்களால் அழைத்துச் செல்லப்பட்ட விவகாரம் தொடர்பில், சத்தியக்கூற்று ஒன்றை மன்றில் தாக்கல் செய்யுமாறு கைதானவர்களின் சட்டத்தரணிகளுக்கு அறிவுறுத்திய நீதிமன்று, கைது செய்யப்பட்ட பிரிவினரின் பொறுப்பதிகாரியை மன்றில் முற்படுமாறும் உத்தரவிட்டது.

மன்றின் முன்பாக வைத்து கடந்த செவ்வாய்கிழமை 3 பேர் வாகனத்தில் அழைத்துச் செல்லப்பட்டபோது, அவர்களுடன் நீதிமன்றிலிருந்து வெளியேறிய ஏனையவர்கள் பயத்தில் சிதறி ஓடியதாகவும், அதனால் அங்கு சலசலப்பு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சிறைச்சாலை வாகனத்தைத் தாக்கிய சூத்திரதாரிகள் அந்த 3 பேருமே என்றும், அதனால் கைது செய்ததாகவும், அவர்களைக் கொழும்புக்குக் கொண்டு செல்வதாகவும் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் தகவல் தெரிவிக்கப்பட்ட போதும், அவர்கள் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட வில்லை. கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவினரால் 3 பேரும் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

அந்தச் சந்தேக நபர்கள் சார்பில் தோன்றிய சட்டத் தரணிகள், எந்தவித குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படாமல் வெள்ளை வானில் மூவரும் கடத்தப்பட்டதாக மன்றின் கவனத்துக்கு கொண்டு வந்தனர். அது தொடர்பாக நீதி மன்றம் பொலிஸாரிடம் கேள்வியெழுப்பியது. அதற்கு, கடந்த வருடம் மே மாதம் 20ஆம் திகதி யாழ்ப்பாண நீதி மன்றம் தாக்கப்படுவதற்கு முதல் நாள் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாகவே இவர்களைக் கைது செய்ததாக பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். சீருடையுடன் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களால் நீதிமன்றுக்கு வெளியில் வைத்து மூவரும் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு நடத்திச் செல்லப்பட்டனர் எனவும் அந்த நேரம் பொலிஸ் வாகனமே நின்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.


அதனைத் தொடர்ந்து குறித்த விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரியை அடுத்த தவணை நீதிமன்றில் முற்படுமாறு மன்று உத்தரவிட்டது. சம்பவம் தொடர்பாக சத்தியக் கூற்று ஒன்றை நீதிமன்றுக்கு தாக்கல் செய்யு மாறு கைது செய்யப்பட்டவர்கள் சார்பில் முற்பட்ட சட்டத் தரணிகளுக்கு நீதிமன்று பணித்தது. சந்தேக நபர்கள் 3 பேரையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (வ-4,103)

## மகிந்த சகா மகிந்தானந்த மறியலில்

நிதி மோசடி தொடர்பில் நேற்றுக் கைது செய்யப்பட்ட முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரும், மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்தானந்த அளுத்கமகே எதிர்வரும் 22ஆம் திகதி வரை கொழும்பு நீதிவான் மன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் அவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார். மகிந்தவின் ஆட்சியில் விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்தபோது 53 மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்களைத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் மற்றும் விளையாட்டுக் கழகங் களுக்கு வழங்கியதாக மகிந்தானந்தவுக்கு எதிராகக் குற் றஞ் சாட்டப்பட்டுள்ளது. (வ-5)

## மரண அறிவித்தல்கள்

### சோமு குணசேகரன்



கடற்கரை வீதியைப் பிறப்பிடமாகவும் கண்ணாபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சோமு குணசேகரன் நேற்று (15.09.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2016) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

34, கண்ணாபுரம்,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்.

### பரராஜசிங்கம் ஸ்ரீபாலகிருஸ்ணன்
(அண்ணாமலை)
( அகில இலங்கை சமாதான நீதிவான் )



பிறப்பு: 28.11.1947
இறப்பு: 15.09.2016

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் ஓட்டுமடம் மானிப்பாய் வீதியை வசிப்பிடமாகவும் தற்போது மடத்தடி லேன் மானிப்பாயில் வசித்தவருமாகிய பரராஜசிங்கம் ஸ்ரீபாலகிருஸ்ணன் நேற்று (15.09.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2016) வெள்ளிக்கிழமை பி.ப ஒரு மணிக்கு மடத்தடி லேன், மானிப்பாய் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி லேன்,
மானிப்பாய்.

தகவல் :
சிவசங்கர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவபாக்கியம் சிதம்பரப்பிள்ளை



கரம்பன் மேற்கை பிறப்பிடமாகவும், யாழ் நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் சிதம்பரப்பிள்ளை 14.09.2016 புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியை கள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

50/23, செட்டித்தெரு, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(J/4642)
(11,17)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி ஜெகதீஸ்வரி கோவிந்தசாமி



பிறப்பு
22.06.1963

இறப்பு
15.09.2016

இணுவிலைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகதீஸ்வரி கோவிந்தசாமி நேற்று (15.09.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கோவிந்தசாமியின் அன்பு மனைவியும் கோகுலப்பிரியா, ஜெயப்பிரியா, மோகனப்பிரியா, பிரியங்கா ஆகியோரின் அன்புத் தாயாரும் சஞ்சீவ்காந், குகதாசன், கந்தசாமி ஆகியோரின் மாமியாரும் பிரியந், யஸ்வந்தி, சபிசன் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2016) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

மீ.கோவிந்தசாமி (நாதஸ்வரம்)
வடலியடைப்பு.
077 1726669

தகவல் :
குடும்பத்தினர்.

### சின்னையா திருஞானசம்பந்தன்



ஈஞ்சடி, சுதுமலை வடக்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், இணுவில் மஞ்சத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா திருஞானசம்பந்தன் நேற்று (15.09.2016) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மணிவதனத்தின் (ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியர்) அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் - பூமணி தம்பதிகளின் அன்பு மருமகனும்,காலஞ்சென்ற கோடி கிருஸ்ணன் மற்றும் அனிந்தா, ரவிகிருஷ்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கு.மங்களேசனின் (ஆசிரியர்) அன்பு மாமனாரும், லீலாவதி, சகலபூசணி, திருநீலகண்டன், பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காலைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மஞ்சத்தடி,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 225 0367

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் இன்னும் வளரனும்; வாவ்ரிங்கா தெரிவித்தார்

பன்னாட்டு ரென்னிஸ் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள வீரரான ஜோகோவிக்கைத் தோற்கடித்து, அமெரிக்கக் கிண்ணத்தைக் கைப்பற்றிய வாவ்ரிங்கா, நிகழ்கால ரென்னிஸ் ஜாம்பவான்களான ஜோகோவிக், நடால், முர்ரே, பெடரர் ஆகியோருக்கு நிகராக தான் இல்லை எனத் தெரிவித்தார்.

அமெரிக்கக் கிண்ணத்தைக் கைப்பற்றிய பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், நிகழ்கால ரென்னிஸ் உலகின் மிகப்பெரிய வீரராக உங்களைக் கருதுகிறீர்களா என்ற ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்குப் பதில் வழங்குகையிலேயே வாவ்ரிங்கா இவ்வாறு தெரிவித்தார்.

நிகழ்கால ரென்னிஸ் உலகில் நடால், ஜோகோவிக், பெடரர், முர்ரே ஆகியோர் மிகப்பெரும் சக்திகளாக உள்ளனர். அவர்களை என்னால் நெருங்க இயலாது. இறுதியாக நடைபெற்ற 47 கிராண்ட்ஸ்லாம் கிண்ணங்களில் 42 கிண்ணங்களை இந்த நால்வரும் வென்றுள்ளனர் இவர்களின் இடத்தைப் பிடிக்க எனக்கு இன்னும் சில காலம் எடுக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)




# அன்ரனிஸ், பீற்றர்ஸ், பை ஸ்ரார் அணிகள் முன்னேற்றம் கண்டன

யாழ்ப்பாணம், செப். 16

குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம், நவாலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் பை ஸ்ரார் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டன.

குறிஞ்சிக்குமரன் வி.கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டங்கள் நடைபெற்றன. முதலாவது ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனிஸ் அணியும் யாழ். ஐக்கிய அணியும் மோதின. இந்த ஆட்டத்தில் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது மணற்காடு சென். அன்ரனிஸ்.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் அணியும் பை ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. பலத்த போராட்டத்தின் பின்னர் 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது பை ஸ்ரார்.

மூன்றாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனிஸ் பி அணியும் நவாலி சென். பீற்றர்ஸ் அணியும் களமிறங்கின. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவு செய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதில் 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது சென். பீற்றர்ஸ். (ம-108)



# சொந்தக் கிண்ணத்தை கைப்பற்றியது ரைற்றோன்

யாழ்ப்பாணம், செப். 16

பருத்தித்துறை ரைற்றோன் விளையாட்டுக் கழகம் தனது முதலாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய கடினப்பந்து துடுப்பாட்டத் தொடரில் அந்த அணியே சம்பியனானது.

ரைற்றோன் வி.கழக மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ரைற்றோன் அணியை எதிர்த்து ரைற்றோன் வாரியஸ் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய ரைற்றோன் அணி நிர்ணயிக்கப்பட்ட 15 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பகீரதன் 62 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ரைற்றோன் வாரியஸ் அணியின் சார்பில் நிசாந் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ரைற்றோன் வாரியஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 15 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 126 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 6 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக அருண் 25 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ரைற்றோன் அணியின் சார்பில் நந்து 4 இலக்குகளைக் கைப்பற்றினார். பரிசளிப்பு நிகழ்வுக்குத் தலைமை விருந்தினராக சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் ஸ்தாபகர் கணேசப்பிள்ளை வேலாயுதம் கலந்து கொண்டார். (ம-422)



இந்தியாவுக்கு எதிரான மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரிலும், ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரிலும் கலந்துகொள்வதற்காக சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி டெல்லியின் கோட்லா மைதானத்தில் நேற்று கடும் வலைப்பயிற்சியில் ஈடுபட்டது. (ம)

# குறிஞ்சிக்குமரன் அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், செப். 16

மெலிஞ்சிமுனை இருதய ராஜா விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் குறிஞ்சிக்குமரன் அணி வெற்றிபெற்றது.

இருதயராஜாவின் மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



# சர்வான் ஓய்வு

மேற்கிந்தியத் தீவுகளின் முன்னணி வீரராக இருந்த சர்வான் பன்னாட்டு ஆட்டங்களிலிருந்து நேற்று உத்தியோகபூர்வமாக விடைபெற்றார்.

கடந்த 2000ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அறிமுகமான சர்வான் குறுகிய காலத்துக்குள்ளேயே மேற்கிந்தியத் தீவுகளின் நட்சத்திர துடுப்பாட்ட வீரராக மாற்றம் பெற்றார். மேற்கிந்தியத் தீவுகளின் சார்பாக 87 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடி 15 சதங்களுடன் 5 ஆயிரத்து 842 ஓட்டங்களையும், 181 ஒருநாள் ஆட்டங்களில் விளையாடி 5 சதங்களுடன் 4 ஆயிரத்து 804 ஓட்டங்களையும், 18 ரி-20 ஆட்டங்களில் விளையாடி 298 ஓட்டங்களையும் சேர்த்த அவர் கடைசியாக இந்தியாவுக்கு எதிராக 2013 ஆம் ஆண்டு களமிறங்கினார். அதன் பின்னர் தீவுகளிலிருந்து தொடர்ந்து புறக்கணிக்கப் பட்டு வந்த அவர் நேற்று பன்னாட்டு ஆட்டங்களிலிருந்து ஓய்வுபெறுவதாக முறைப்படி அறிவித்தார். (ம)

# சிம்மன்ஸ் பதவி நீக்கம்



மேற்கிந்தியத் தீவுகளின் பயிற்சியாளராக செயற்பட்ட பில் சிம்மன்ஸை, குறித்த பதவியிலிருந்து நீக்கியது மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் சபை.

அணியில் புதிய அணுகுமுறை புகுத்த வேண்டும் என்ற காரணத்துக்காகவே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் சபை தெரிவித்தது.

சிம்மன்ஸின் பயிற்சியின் கீழ் மேற்கிந்தியத் தீவுகள் அணி இந்த வருடம் நடைபெற்ற ரி-20 உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹாட்லிக்கு வெண்கலம்



யாழ்ப்பாணம், செப். 16
பாடசாலைகளின் தடகளச் சம்மேளனம் நடத்தும் தேசிய மட்ட 'ஜோன் காப்பற்' தடகளத் தொடரில் தட்டெறிதலில் ஹாட்லிக் கல்லூரி மாணவனான எஸ்.பிரகாஸ்ராஜ் வெண்கலப் பதக்கத்தை வென்றார்.
தியகம மகிந்த ராஜபக்ச மைதானத்தில் தொடர் நடைபெற்றது. நேற்றுநடைபெற்ற 18 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதலில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ். பிரகாஸ்ராஜ் 41 மீற்றர் 83 சென்ரிமீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம-422)



பாடசலைகளுக்கு இடையிலான தேசியமட்ட பளுதூக்கல் போட்டியில் ஒட்டுமொத்தமாகப் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் இரண்டாம் இடத்தை வென்ற யாழ். இந்துக் கல்லூரியின் பளுதூக்கல் அணி நேற்றுமுன்தினம் கல்லூரிச் சமூகத்தால் கௌரவிக்கப்பட்டது. (ம-23)




# கோலூன்றிப் பாய்தலில் அனித்தா புதிய சாதனை




யாழ்ப்பாணம், செப். 16
பாடசாலைகளின் தடகளச் சம்மேளனம் நடத்தும் தேசிய மட்ட 'ஜோன் காப்பற்' தடகளத் தொடரில் 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு கோலூன்றிப் பாய்தலில் மகாஜனக் கல்லூரி மாணவி ஜெ.அனித்தா தேசிய மட்டச் சாதனையை நிலைநாட்டி தங்கப் பதக்கம் வென்றார்.
தியகம மகிந்த ராஜபக்ச மைதானத்தில் தொடர் நடைபெற்றது. நேற்றுநடைபெற்ற 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு கோலூன்றிப் பாய்தலில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்து வப்படுத்திக் களமிறங்கிய ஜெ.அனித்தா 3.35 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தேசியமட்டச் சாதனையுடன் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். கண்டி வளலாய் ரட்ணாயக்கா கல்லூரியைச் சேர்ந்த ஹர்சினி 3.34 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து நிலைநாட்டியிருந்த சாதனையையே அனித்தா தகர்த்தெறிந்தார். அதே கல்லூரியைச் சேர்ந்த எஸ்.டிலானி 2.95 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
18 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் மகாஜனக் கல்லூரியின் சார்பாகக் களமிறங்கிய சி.ஹரிஸ்னா 2.65 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம-422)

# சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிகளுக்கு கல்லூரிச் சமூகத்தால் நேற்று கௌரவம்

யாழ்ப்பாணம், செப். 16
பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கால்பந்தாட்டத்தில் 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் சம்பியனான, 17 வயதுக்குட்பட்ட பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற சென். பற்றிக்ஸ் கல்லூரிகளின் அணிகளுக்கு நேற்று கல்லூரிச் சமூகத்தால் மகத்தான கௌரவம் வழங்கப்பட்டது. கல்லூரியின் பான்ட் வாத்திய இசையுடன் பிரதான மண்டபம் வரை வீரர்கள் அழைத்துவரப்பட்டு, அதிபர் அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம் தலைமையில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வுக்கு விருந்தினர்களாக வடமாகாணசபை உறுப்பினரும் விளையாட்டுத் துறை இணைப்பாளருமான இ.ஆனல்ட், வடக்கு மாகாண உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பளர் கே.சத்தியபாலன், யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-23)



# மூன்றாம் கட்டம் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 16
பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்டப் போட்டிகளில் மூன்றாம் கட்டப் போட்டிகள் நாளை ஆரம்பமாகவுள்ளன.
நாளை ஆரம்பமாகும் இந்தப் போட்டிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. கிரிக்கெட், ஜிம்னாஸ்டிக், சதுரங்கம், கரம், உடற்பயிற்சி, எறிபந்து, கரப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் மூன்றாம் கட்டத்தில் உள்வாங்கப்பட்டன.
இதன்படி 19 வயதுக்குட்பட்ட இருபாலாருக்குமான உடற்பயிற்சி பதுளை வின்சன் டியாஸ் மைதானத்திலும், 15 வயதுக்குட்பட்ட, 19 வயதுக்குட்பட்ட இருபாலாருக்குமான சதுரங்கம் நுவரெலியா மத்திய கல்லூரியிலும், 15 வயதுக்குட்பட்ட, 19 வயதுக்குட்பட்ட இருபாலாருக்குமான கரம் திருகோணமலை விவேகானந்தா வித்தியாலயத்திலும், 19 வயதுக்குட்பட்ட இருபாலாருக்குமான எறிபந்து அச்சிலியாகொட மத்திய மகா வித்தியாலயத்திலும், 15 வயதுக்குட்பட்ட, 17 வயதுக்குட்பட்ட, 19 வயதுக்குட்பட்ட இரு பாலாருக்குமான கரப்பந்தாட்டம் நாத்தாண்டியா தார்மிசார் மத்திய மகா வித்தியாலயத்திலும், 19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான துடுப்பாட்டம் கிண்ணியா மைதானத்திலும், பெண்களுக்கான துடுப்பாட்டம் திருகோணமலை இந்துக் கல்லூரி மைதானத்திலும், ஜிம்னாஸ்டிக் நாவலப்பிட்டிய உள்ளக விளையாட்டரங்கிலும் நடைபெறவுள்ளன. (ம-422)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், செப். 16

**குறிஞ்சிக்குமரன் வி.கழக தொடர்**

குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யுத் யூனியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்துக் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகமும் இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்துச் சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக் கழகமும் இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் எல்லாளன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்துத் துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

**ஞானமுருகன் வி.க. தொடர்**

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தத்திட்டமிட்ட கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றன. இந்தத்தொடரில் இன்றுமாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யுத் யூனியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டு கழகம் மோதவுள்ளது.

**கலைமதி வி.க. தொடர்**

புத்தூர்மேற்கு கலைமதி விளையாட்டுக் கழகம் மாவட்ட ரீதியில் நடத்தத்திட்டமிட்ட கால்பந்தாட்டத் தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளது. தொடரின் ஆட்டங்கள் அனைத்தும் கலைமதி வி.கழக மைதானத்திலேயே நடைபெறவுள்ளன. இதன்படி இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் இரவு 7 மணிக்கு புத்தூர் குருநாதர் அணியை எதிர்த்து மல்லாகம் நியூவொரியஸ் அணியும், நீர்வேலி காமாட்சி அம்பாள் அணியை எதிர்த்து உடுப்பிட்டி சிவகுமரன் அணியும், புத்தூர் வளர்மதி பி2 அணியை எதிர்த்துப் புத்தூர் சரஸ்வதி அணியும், ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி பி2 அணியும் மோதவுள்ளன.

**இருதயராஜா வி.க. தொடர்**

மெலிஞ்சிமுனை இருதயராஜாஜ விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகஅணியைஎதிர்த்துமெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23-108-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்க்நெர் விலகல்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரிலிருந்து காயம் காரணமாக பல்க்நெர் விலகினார்.

ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையே இந்தமாதம் 30 ஆம் திகதி 5 ஆட்டங்களைக் கொண்ட ஒரு நாள் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்காக



ஆஸ்திரேலிய வீரர்கள் வலைப்பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு வலைப்பயிற்சியில் ஈடுபட்டபோது பல்க்நெரின் கையில் காயம் ஏற்பட்டது. தொடருக்கு முன்பாக காயம் குணமடைய வாய்ப்பில்லை என்பதால் தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரிலிருந்து பல்க்நெர் விலகினார்.

(ம)



# மெஸ்ஸி ஹற்றிக் படைக்க பார்சிலோனா இலகு வெற்றி

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் மெஸ்ஸி ஹற்றிக் படைக்க செல்டிக் அணியை வென்றது பார்சிலோனா.

பார்சிலோனாவின் மைதானத்தில் ஆட்டம் நடைபெற்றது. ஆட்டத்தின் மூன்றாவது, ஐந்தாவது நிமிடங்களில் மெஸ்ஸி அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்தார். வேறெந்த மாற்றமும் இல்லாமல் முடிந்தது முதல் பாதி. 50ஆவது நிமிடத்தில் நெய்மர், 59ஆவது நிமிடத்தில் இனியெஸ்டா ஆகியோர் பார்சிலோனாவின் கோல் கணக்குகளை உயர்த்தினர். 65ஆவது நிமிடத்தில் தனது ஹற்றிக் கோலைப் பதிவுசெய்தார் மெஸ்ஸி. இது பார்சிலோனாவின் ஐந்தாவது கோல். 75 ஆவது, 85 ஆவது நிமிடங்களில் சுவாரஸ் கோல்களைத் தொடுக்க முடிவில் 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பார்சிலோனா.

(ம)

**உடனடித் தேவை**

கண்டகல் 6"x9", 4"x4" அளவுகளில் தெல்லிப்பழை, மாவிட்டபுரம் பிரதேசங்களுக்குத் தேவைப்படுகின்றது. விநியோகிக்கக் கூடியவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

**076 828 0412**

**உயர் கல்விக்கான புலமைப்பரிசில்**

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 2000 ஆம் ஆண்டு முதல் கணினிப்பயிற்சிகளை வழங்கிய எம்.சி.எஸ்.நிறுவனம் கணினி, ஆங்கில, சி.ஐ.எம்.ஏ. கற்கை நெறிகளிற்கான மாபெரும் புலமைப்பரிசில்களை 100 % வரை வழங்கவுள்ளது. இம்மாணவர்களிற்கான முதலாவது செயலமர்வும் தெரிவுப்பரீட்சையும் நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்திற்கு அருகில் உள்ள எம்.சி.எஸ். வளாகத்தில் ஆரம்பமாகவுள்ளது. விண்ணப்பிக்க விரும்புவோர் விரும்பும் கற்றை நெறி, தமது பெயர், பிறந்த திகதி, வதியும் மாவட்டம் என்பவற்றை 772 395 895 என்ற எண்ணிற்கு குறுந்தகவலாக அனுப்பவும்.

**MCS IT CAMPUS** யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அருகில் (சி.26198) (13.17)

**City & Guilds UK Engineering Classes**

- CIVIL ENGINEERING/ QUANTITY SURVEYING
- ELECTRICAL AND ELECTRONICS
- TELECOMMUNICATION SYSTEM
- MECHANICAL ENGINEERING

**இலவச பொறியியல் கருத்தரங்கு**

Why Choose City & Guilds Qualifications Future Trends in Engineering/ Academic Pathways Job opportunities in the Government Sector/ Private Sector.

Chief Guest: Mr. Subramanium Muhunthan
Director, College of Technology, Jaffna.

Seminar Conducted by: Prof. K. Chandirabose
Medal of Excellence winner City & Guild (UK)

**18th Sunday September 2016**
காலை 9.30 - 2.00 மதியம்
தொழில்நுட்ப கல்லூரி,
தொழில்நுட்ப வழிகாட்டல்
ஆலோசனை நிலையம், யாழ்ப்பாணம்

**19th Monday September 2016**
காலை 9.30 - 2.00 மதியம்
தொழில்நுட்ப கல்லூரி,
தொழில்நுட்ப வழிகாட்டல்
ஆலோசனை நிலையம், யாழ்ப்பாணம்

யாருக்கு உகந்தது:-
1. O/L, A/L மாணவர்களுக்கு
2. (A/L பரீட்சையில் தோற்றியவர்களுக்கு மிகவும் உகந்தது)
3. தொழில்நுட்பவியலாளர்கள்/ பொறியியலாளர்கள்
4. Level 4, Level 5, NCT பயிலும் மாணவர்கள்

City & Guilds புதிய பாட திட்டத்திற்குறிய விபரங்களுக்கும் உங்கள் சந்தேகங்களை தீர்த்துக் கொள்வதற்கும் அரியவாய்ப்பு!

City & Guilds APPROVED CENTRE

**APSS International**
College of Engineering Studies

மேலதிக விபரங்களுக்கு:
021- 2222 358/ 021- 2220 028/
077- 3867 695/ 077- 2306 642

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.